Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
டிச.08-14,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 182

## செ ரில்லாப் போரில் தூங்கும் நாடகம்

## தயார் நிலையும் தாக்குதல் தவிர்ப்பும்

## சொன்னதை மறந்தார் தமிழக முதல்வர்



## அழகிப்போட்டி விநோதங்கள்

# முரசம்

## பிரிக்கும் விதிகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வடக்கு-கிழக்கில்
வாழும் மக்கள் அங்கிருந்து
வெளியே வருவதே
பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான
விடயமாகக் கருதப்படுகிறது.

'எந்தப் புற்றுக்குள்
எந்தப் பாம்பிருக்குமோ?'
என்ற சந்தேகம்தான்
கடும் கட்டுப்பாடுகளுக்கு
காரணமாக இருக்கிறது!

போரில் வெற்றிபெற,
புலிகளை தமிழ் மக்களிடமிருந்து
தனிமைப்படுத்த வேண்டும்
என்பது இராணுவத் தந்திரம்.

அந்த இராணுவத் தந்திரம்
போதிய பயனளிக்காது என்பதே
கடந்தகால- சமீபகால அனுபவம்!

புலிகளை தனிமைப்படுத்துவதாக
நினைத்துக்கொண்டு
நாட்டின் பிற பகுதிகளிலிருந்து
வடக்கு-கிழக்கு மக்களை
தனிமைப்படுத்துவதாகவே
பாதுகாப்பு விதிகள்
அமைந்து வருகின்றன!

வடபகுதி மக்களுக்கு
வவுனியாதான் கடைசி எல்லை!
வவுனியாவிலும் நடமாடத்தடை.
நடமாடவிட்டால்
ஏதாவது ஒரு வழியில்
தலை நகருக்குள் வந்துவிடுவார்களோ
என்று சந்தேகம்!

வடக்கு-கிழக்கிலிருந்து
தலைநகர் வருவோர்
தங்கியிருப்பதற்கும்
காலவரம்பு விதிக்கப்பட்டுள்ளது!

வெளிநாட்டவர் ஒருவர்
இங்கு வந்து தங்குவதற்கு
குறிப்பிட்ட கால 'விசா'
வழங்கப்படுவது வழக்கம்!

வடக்கு-கிழக்கிலிருந்து
தலைநகர் வருவோருக்கும்
வெளிநாடொன்றில் இருந்து
கொழும்பு வருவோருக்கும்
பெரிய வித்தியாசமில்லை!

வெளிநாட்டவர்கள் நிலை
சற்று உயர்வானது.
'விசாவை' காட்டிவிட்டால்
சுதந்திரமாக தங்கியிருக்கலாம்!
வடக்கு-கிழக்கைச் சேர்ந்தோர்
அனுமதி பெற்றுத் தங்கினாலும்
விசாரணைகளில் சிக்க நேரும்!

வடக்கு-கிழக்கு
தமிழ் பேசும் மக்களின்
பாரம்பரிய பூமி என்றால்
இனவாதிகள் கோபப்படுகிறார்கள்!

ஆனால் பாதுகாப்பு விதிகள்
வடக்கு-கிழக்கை
நாட்டின்பிற பகுதிகளிலிருந்து
பிரித்துக் கொண்டிருக்கின்றன!

கடந்த காலத்தில்
ஏற்பட்ட இனக்கலவரங்கள்
நாட்டின் ஏனைய பகுதிகளில்
வாழ்ந்த தமிழ்மக்களை
வடக்கு-கிழக்கு நோக்கி
விரட்டியடித்தன!

வடக்கு-கிழக்கையும்
இழந்தால்
வாழ ஒரு நிலமும் இல்லை;
ஒதுங்க ஓர் இடமும் இல்லை;
என்று தமிழ் மக்கள்
நினைக்கக் காரணமும்
அந்த இனக் கலவரங்கள்தான்!

பாரம்பரிய பிரதேச உணர்வும்
பாதுகாப்புக்கான உத்தரவாதக்
கோரிக்கையும்
உறுதியாக எழுந்ததற்கு காரணம்
தமிழ் மக்களையும்-
அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தையும்
பிரித்துக் காட்டிய சம்பவங்கள்தான்!

அன்று இனக்கலவரங்கள்
செய்த காரியத்தைத்தான்
இன்றைய பாதுகாப்பு விதிகளும்
செய்யத் தொடங்கியுள்ளன!

கடந்த கால அனுபவங்கள்
பாடமாக அமைவதைக் காணோம்!
"தாம் பிடித்த முயலுக்கு
மூன்றுகால்" என்று
அடம்பிடிக்கும் போக்குத்தான்
அரசியலில் மேலோங்கியுள்ளது!

எனவே- சக்கர சுழற்சிபோல
மீண்டும், மீண்டும்
முன்னைய தவறுகள்
தோன்றிக்கொண்டேயிருக்கின்றன!

அனுபவத்திலிருந்து
கற்றுக்கொள்ளத் தயாராக
இல்லாதபோது
நாட்டின் எதிர்காலமும்
குட்டிச்சுவராகவே இருக்கும்!

❑ ❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## கனி கொடுக்கும் வாழ்க்கை

இரக்கமும் மனதுருக்கமும் உள்ள நம்முடைய கடவுள் பிரயோசனமற்ற வாழ்க்கையை வெறுக்கின்றவராகவும் வெளிவேஷத்தைக் கண்டிக்கிறவராகவும் இருக்கின்றார்.



இலைகளால் சூழப்பட்டு செழிப்பாய் பார்வைக்கு கனி நிறைந்த மரம்போல் காணப்பட்ட அத்திமரத்தில் கனி ஒன்றும் காணப்படாததால் பட்டுப் போகப் பண்ணினார். (யோவான் 21:18-22) பார்வைக்கு இலட்சணமாக, நற்பண்புள்ள மனிதர்களாக, மனித நேயம் கொண்டவர்களாக, நம்மை இனங்காட்டிக் கொள்ளலாம். இவ்வாறு நம்முடைய காரியங்கள் இருக்குமானால் நாமும் பட்டுப்போன அத்திமரத்துக்கு ஒப்பானவர்களாவோம்.

ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். (யோவான் 15:5)

நாம் நல்ல கனிகளை கொடுக்க வேண்டுமானால் ஆண்டவர் இயேசுவில் நாம் நிலைத்திருக்க வேண்டும். உலகத்தின் கண்களுக்கு வேஷம் தரியாமல் ஆண்டவர் இயேசுவுக்காய் நல்ல கனி கொடுக்கின்றவர்களாக, பிறருக்கு பிரயோசனமுள்ளவர்களாக வாழ முற்படுவோமாக.

சகோ.எஸ். யேசுநாதன், வாழைச்சேனை.

## உனக்கு நீயே தீங்கு செய்து கொள்ளாதே!

நபி(ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் மிஃறாஜ் சென்றேன். அப்போது எனக்குச் சுவர்க்கம் நரகம் இரண்டும் காண்பிக்கப்பட்டது. நரகத்திலே சிலரின் நகங்கள் பித்தளையாக மாற்றப்பட்டிருந்தன. அந்த நகங்களினால் தங்களின் முகங்களையும் நெஞ்சங்களையும் வழித்துக் கொண்டிருந்தார்கள். இதுபற்றி நான் என்கூட வந்த ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் கேட்டேன். அதற்கு ஜிப்ரீல் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"இந்த மனிதர்கள்தான் உலகில் வாழும் காலத்தில் பிறரைப் பற்றிப் புறம் பேசிக்கொண்டும் பிறரது தன்மானம் பாதிக்கும்படியும் நடந்து கொண்டவர்கள். அதனால் தான் அல்லாஹ் இவர்களுக்கு இவ்வாறான தண்டனையைக் கொடுத்திருக்கிறான்" என்று விளக்கம் தந்தார்கள்.

ஆதாரம்:- அபூ தாவூத்.

எனவே நாமும் இவ்வுலகில் வாழும் காலங்களில் பிறரைப் பற்றிப் புறம் பேசிக்கொண்டும், பிறரின் தன்மானம் பாதிக்கும்படியாகவும் நடந்து கொண்டு, எம்மால் பாதிக்கப்பட்ட எமது சகோதரன் துன்பப்படுவதைப் பார்த்து அதிலே நாம் இன்பத்தை அனுபவித்து பின் இறைவனின் தண்டனைக்குள் மாட்டிவிடாமல் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோமாக.

பிந்த் இஸ்மாயில், கல்முனை.

## கவிதைப் போட்டி இல.179



### பரிசுக்குரிய கவிதை

**புரியவில்லை!**

நாளை வரை அவலம் என்றால்
நாங்கள் தாங்க வழியுண்டு!
நாள்தோறும் அவலம் என்றால்,
நாங்கள் செல்ல வழி ஏது?

உன்னவன்-வட்டவளை.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**சுமைகள்**

தாயார் சுமந்ததோ
ஈரைந்து மாதம் வரை
தன(ம)யன் சுமப்பதோ
தன்னுயிர் போகும்வரை.

ச.மகாலிங்கம்-வெலிமடை.

**பிஞ்சுக் கால்கள் இவர்கள்!...**

நெஞ்சில் உதையும்
பிஞ்சுக் கால்கள்
கஞ்சிக்கு அலைவது
வெஞ்சமர் விளைவோ?

நாரந்தனையூர்-இசையரசி.

விமோசனம் தேடி..
வீதிக்கு வரவில்லை!
இவர்கள்
ஒரு வேளை...
போசனம் தேடும்;
நம் நாட்டு பிரஜைகள்!

ஜெ.யாழினி-மட்டக்களப்பு.

**அபயமளிப்பாரோ!**

சூடடிக்கப் போன அப்பு சூடுபட்டு மடிந்தாரே
மண்ணெய்க்குப் போன ஆச்சி 'செல்'பட்டு மண்ணானாள்
நானோ சிறுபிள்ளை-காப்பதற்கு கையில் இருபிள்ளை
அன்று நாம் செல்லப்பிள்ளை, இன்றோ செல்லாப்பிள்ளை
இல்லை என்று இரப்பதற்கும் இருப்பவர்கள் யாரும் இல்லை
நல்ல மனங்கொண்டார் எல்லாரும் அகதியானார்
அயலவர்கள் உதவுதற்கும் ஆயிரம் தடைகள் இங்கே
செயற்பாடு ஏதுமில்லை- வாய் கிழியப் பேசுகிறார்
பேச்சும் வார்த்தையும் புஸ்வாணமாய்ப் போச்சிங்கே.
நிவாரணத்துக்காய் அலைந்து நிர்வாண நிலை அடைந்தோம்!
நியாயம் கிடைக்கும்வரை எம் காயம் தாங்காது
அபாயம் தாண்ட ஓர் உபாயம் தெரியவில்லை
அபயம் வரும் போது எம் பிணம்தான் மிஞ்சுமிங்கே!

சிவ.கங்காதரி-மட்டக்களப்பு.

**தாயுமானவன்!**

துள்ளித் திரிந்து நூல் சுமந்து
பள்ளி செல்லும் பருவமதில்-யுத்தம்
கொள்ளி வைத்து ஈன்றவரைக்
குழிதோண்டிப் புதைத்ததனால்,
சொல்லில் வடிக்க இயலாத்
துயரோடு 'சுமை தாங்கி'
அள்ளி அணைத்துத் தங்கையர்க்குத்
தந்தையானான்-நல்ல
தாயுமானான்!

பழ.சச்சிதானந்தன்-'ஜோய்ஸ்லீன்', செங்கலடி.

**அனாதைதான்**

செல்லுமிடம் தூரமில்லை
தங்குமிடம் சொந்தமில்லை
எந்த வழி போவதென்று
கால்களுக்கும் தெரியவில்லை;
போகுமிடம் தெரிந்துவிட்டால்
போர் முனையும் மறைந்துவிடும்!
நீதி ஒன்று கிடைத்துவிட்டால்
நிம்மதியும் வந்து விடும்.

நற்குணம் சிவநாதன்-மட்டக்களப்பு.

**வெந்த புண்ணில்....**

சொந்த பந்தம் சுற்றமெல்லாம்
சொந்த மண்ணில் சிந்தியதால்
வெந்த புண்ணில் வேல் தைக்க
மந்தைகளாய் ஆக்கியெம்மை
வழி பிசக வைத்தனரே!

தர்ஷிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

**புறப்பட்டு விட்டோம்!**

சொல்லிக் கொள்ளச் சுற்றாரில்லை,
சுமந்து செல்லப் பெற்றா ரில்லை,
புகலிடம் இங்குகேதுமில்லை,
புவிதனிலும் எமக்கு யாருமில்லை!

செல்வி ஜெயப்பிரியா மனோகரராஜா-
மட்/கல்லடி.

**அஞ்சி.. அஞ்சி**

பிஞ்சுக் காலெடுத்து
அஞ்சி நடை போட்டு
கஞ்சிப் பானை தேடி
வெஞ்சமர் பூமிதனில்
சஞ்சரிக்கும் பாதங்கள்,
பஞ்சாய்ப் பறந்திடுமோ?
கொஞ்சம் அடிதப்பி
நிலக் கண்ணி
வெடி சிக்கி!..

ஏ.பீ.கலா-வட்டவளை.

## கவிதைப் போட்டி இல-182



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 14.12.1996

முகவரி: கவிதைப் போட்டி இல.182 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை

'சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை' என்பது வீரமான வாசகமாக இருக்கலாம். ஆனால் சிறை ஒரு முட்படுக்கை. மனித ஓநாய்கள் நடமாடும் நரகமாகவே இருக்கும் என்பதைத்தான் 'தூக்கு மேடைக் குறிப்பு' உணர்த்துகிறது. ஜுலிஸ் பூசிக்கின் மன உறுதியையும், வேதனைகளையும் நகைச்சுவையுடன் சொல்லிச் செல்வதும் அபாரம்.

ஏ.ஜமானுல்லா, காலி.

♠❦

சுஜாதாவின் 'அனிதா இளம் மனைவி' அசத்தல். நாவல் எழுதுவதில் சுஜாதாவின் பாணியே தனிதான். சுஜாதாவின் நாவல்கள் பல படித்திருக்கிறேன். எல்லாமே அசத்தல் என்று பொய் சொல்லமாட்டேன். சுஜாதாவின் நாவல்களில் 'அனிதா இளம் மனைவி' இளமையானவள்தான்.

கே.வெங்கடேஷ், பதுளை.

♠❦

பூலானின் தொடர் வாரம்தோறும் விறுவிறுப்பை கூட்டிக்கொண்டே போகிறது. வேலிகளே பயிரை மேய்ந்தால், பயிர்கள் முட்களாகத்தான் மாறும். பூலான் வாழ்க்கையும் அதற்கு ஓர் உதாரணம். அந்தப் பொலிஸ் மேலதிகாரி என்றாலும் பூலானிடம் நியாயமாக நடந்திருந்தால், ஒரு சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரியால் அரசாங்கமே ஆடிப்போக வேண்டி இருந்திருக்குமா? பூலானின் மன உணர்வுகளை வெளியிட்டு நம்மையெல்லாம் பூலான் இரசிகர்களாக்கி விட்டார் ரசிகன்.

திருமதி வதனி ஜெயராம், கொழும்பு-10.

♠❦

கமல் மாமியை முரசும் காதலிக்கிறதோ? விதம் விதமாகப் போட்டுவிட்டீர்களே! சிந்தியா சொன்னதுபோல இன்றைய நடிகைகளை விட கமல் மாமி அழகோ அழகு.

எச்.ரஹீம், மாளிகாவத்தை.

காதலைப் பற்றி விளக்கம் போட்டு கலக்கிவிட்டீர்கள். நாட்டுக்கு மிகவும் தேவையான விடயமாக்கும்! காதலுக்கு அர்த்தம் சொல்ல லேடீஸ் ஸ்பெஷல் பக்கம்தான் கிடைத்ததா? ஏன் இந்த ஆக்கிரமிப்பு? நாம் பதில்தாக்குதல் நடத்தவேண்டியிருக்கும்.

செல்வி எம்.நிஷாந்தி, தெகிவளை.

♠❦

'வீடு கொடாதீர்' என்று பொலிசார் வீட்டு உரிமையாளர்களை எச்சரிப்பது முறையல்ல என்பதைச் சுட்டிக்காட்டிய முரசுக்கு நன்றி. கொழும்பில் வீடு வாடகைக்கு எடுக்க அலைந்து அனுபவப் பட்டவன் நான்.

ஜெ.சதாசிவம், வெள்ளவத்தை.

அழகிப் போட்டிகள் தொடர்பாக கமல் கூறிய கருத்துக்கள் அருமை. அழகிப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மட்டும்தான் உலக அழகிகள் என்றால், மற்றப் பெண்கள் எவரும் அழகில்லாதவர்களா? அழகான பெண்கள் எவருமே இன்னமும் அழகிப் போட்டிகளில் தெரிவாகவில்லை என்பது தான் என் கருத்து.

செல்வி ஆர்.விஜயலட்சுமி, கம்பளை.

♠❦

### கமல் மட்டும் செய்யலாமா?

கமலின் பேட்டி படித்தேன். கமலுக்கும் வெளிநாட்டு மேக்கப்தானே தேவையாக இருக்கிறது. மும்பாய் அழகிகள் மனிஷாவும், ஊர்மிளாவும் இந்தியனில் நடித்தார்களே! தமிழ்நாட்டில் வேறு நடிகைகளே கிடையாதா? தமிழில் எத்தனையோ தரமான நாவல்கள் இருந்தும் வெற்றிபெற்ற ஆங்கிலப் படங்களைத்தானே கமலும் தழுவிக் கொண்டிருக்கிறார். வெளிநாட்டு அழகிகளை மட்டும் குறை சொல்லலாமா? இதெல்லாம் பொழுதுபோக்கு அம்சங்கள்தானே. இத்தனை சீரியசாக கமல் எடுத்துக்கொண்டிருக்க வேண்டாம்.

எஸ்.ஆர்.சுசிதரன், கனடா.

♠❦

'தூக்குமேடைக் குறிப்பு' முரசின் முத்தான தொடர்களில் மற்றுமொரு அமோகமான தொடர்தான். போராளிகள் வாழ்க்கையை- அந்த வாழ்க்கையில் கலந்துள்ள சோகத்தையும் சுகமாகக் கருதும் உன்னதத்தையும் நம்மைப் போன்றவர்களும் அறிய முடிகிறது.

பா.சிவச்சந்திரன், கண்டி.




பாராளுமன்றத்தில் பேசுவது மூலம் பிரச்சனைகள் அத்தனையும் தீர்ந்தாச்சு எனவும், தமது கடமை முடிந்தது போலவும் செயற்படும் நம் அரசியல்வாதிகளுக்கு முரசு கொடுத்த சூடு தகும்.

எம். ஆனந்தன்,
மட்டக்களப்பு.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

* ஏ.எம்.ஏ. அஸித், சாய்ந்தமருது-01.
* மா. மகேஸ்வரன், ஆறுமுகத்தான்குடியிருப்பு.
* செல்வி ரா. ராதா, செங்கலடி.
* இரா. சாந்தராஜா, இரத்தினபுரி.
* மரீனா நியாஸ், பூரணவத்தை.
* வே. வீரசிங்கம், பன்விலை.
* ஏ.ஜே.எம். ஜஃபர், கொழும்பு-15.
* வ. பிர்தௌஸ், கின்னியா-03.
* செல்வன் சுப்பையை அந்தனி, பூண்டுலோயா.
* எஸ். கிருஷ்ணா, ஹட்டன்.
* எம்.என். பாசில் முகமட், பொகவந்தலாவ.
* ஆர். ஹரிஷாந், திருமலை.
* எம். மசூர், பலாங்கொட.
* முகமட் பாசீல், மூதூர்-05.
* என். கணேஷ், மட்டக்களப்பு.
* பொ. சண்முகவள்ளி, அலவத்துக்கொடை.
* பீட்டர் குடும்பத்தினர், இ/கஹவத்த.
* ரி. ரஜினி, உக்குவளை.
* எம்.ஜே. ரயீஸ் அஹமட், கம்பிரிகஸ்வெவ.
* செல்வி பா. தில்லை, இராகலை.
* ஏ. நிசாந்தன், கல்முனை.
* கே. தர்மதாசன், வவுனியா.

# தேசிய இராணுவமாக புலிகளை ஏற்கவேண்டும்!

# தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிடலாகாது!

## ஏனைய இயக்கங்களுடன் இணைந்து செயற்பட புலிகள் நிபந்தனை

**புலிகள் இயக்கத்தை தமிழீழ தேசிய இராணுவமாக ஏற்றுக்கொண்டு அதன்கீழ் செயற்பட முன்வந்தால் ஏனைய தமிழ் இயக்கங்களும் தம்முடன் இணைந்து செயற்படலாம் என்று புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்பட ஈ.என்.டி.எல்.எஃப். அமைப்பினர் விருப்பம் தெரிவித்தபோதே புலிகள் சார்பாக அவ்வாறு கூறப்பட்டதாக அறியப்பட்டுள்ளது.

மூன்று நிபந்தனைகள் புலிகள் சார்பாக முன்வைக்கப்பட்டன:

1. தமிழீழ தாயகக் கோட்பாட்டுக்கு மாறான எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது.

2. இராணுவரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக இருந்தால், தமிழீழ தேசிய இராணுவமான விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவின் உப பிரிவாகவே செயற்பட வேண்டும்.

3. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பினால் புலிகளின் அரசியல் பிரிவின் கீழ்தான் செயற்பட வேண்டும்.

இம் மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டால், ஏனைய இயக்கங்கள் தம்முடன் இணைந்து செயற்படலாம் என்று புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இம் மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டு புலிகளுடன் இணைந்து செயற்படத்தயார் என்று ஈ.என்.டி.எல்.எஃப். சம்மதித்தது.

புலிகளுடன் தமக்கு உடன்பாடும், சந்திப்பும் ஏற்பட்டுவிட்டதாக ஈ.என்.டி.எல்.எஃப். இந்தியப் பத்திரிகைகளுக்கு அவசரப்பட்டு செய்தி கொடுத்தது. அதனால் இந்தியாவில் ஈ.என்.டி.எல்.எஃப். தொடர்பாக சந்தேகங்கள் ஏற்பட்டன.

இதன்பின்னர்தான் ஈ.என்.டி.எல்.எஃப். குழுவின் தலைவர் பரந்தன் ராஜன், புலிகள் இயக்கத்தின் கடந்தகால நடவடிக்கைகளைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்.

இந்திய உளவுப் பிரிவொன்றின் தூண்டுதல் காரணமாகவே ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினர் புலிகளுடன் நட்பை நாடியதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏனைய இயக்கங்களுடன் இணைந்து செயற்பட புலிகள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் தமிழீழக் கோரிக்கையில் அவர்கள் உறுதியாக இருப்பதையே பிரதிபலிக்கிறது.

## உள்ளூராட்சித் தேர்தல்! இராணுவத்தரப்பு ஆர்வம்!

### பிரஜைகள் குழுக்களுடன் ஆலோசனை!

**யா**ழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் படைத்தரப்பினர் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது.

யாழ் குடாநாட்டில் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே தொடர்புகளை மேற்கொள்ள பிரஜைகள் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட தமிழ் கட்சிகள் முன்வராவிட்டால், பிரஜைகள் குழுக்களைச் சேர்ந்தவர்களை போட்டியிடச் செய்யலாம் என்று இராணுவத்தினர் நினைப்பதாகத் தெரிகிறது.

யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் வெற்றியை உறுதியாகக் காட்டுவதற்கு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று படைத்தரப்பினர் விரும்புகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்க முடியும் என்று படைத்தரப்பினர் உறுதியாகத் தெரிவித்ததையடுத்தே தேர்தல் நடத்தும் அறிவிப்பு வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. வடக்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்துவதை பின்போடுமாறு தமிழ் கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் படைத்தரப்பினர் உறுதியாக உள்ளனர்.

இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தமிழ் கட்சிகளுடன் ஜனாதிபதி பேசவுள்ளார்.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம் என்று அறியமுடிகிறது.

## "தமிழீழத்துக்காக என்னை அர்ப்பணித்துவிட்டேன்"

### புலிகளின் தலைவர் பிரபாகரன் பேட்டி

**"சி**றுவயதில் இருந்தே தனித் தமிழ் ஈழத்துக்காக என்னை அர்ப்பணித்து விட்டேன்!" இவ்வாறு தனது 42வது பிறந்த நாளை முன்னிட்டு வழங்கிய பேட்டியொன்றில் பிரபாகரன் தெரிவித்துள்ளதாக இந்திய தமிழ் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் வெளியாகியுள்ள பேட்டியில் பிரபாகரன் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"நான் சிறுவனாக இருந்தபோது இலங்கைத் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. தமிழர்களின் துயரம் எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. இதை எதிர்த்துப் போராட அப்போதே முடிவு செய்தேன். இதனால் தீவிரவாத எண்ணம் என் மனதில் தோன்றியது.

பள்ளிக்கூடத்தில் படித்த சமயத்தில்– 14 வயது இருக்கும்போதே நான் வெடிகுண்டுகளைத் தயாரிக்கப் பழகினேன். பல சமயங்களில் குண்டுகளைத் தயாரித்து வெடிக்க வைத்திருக்கிறேன்.

அதன் பிறகு கைத்துப்பாக்கி வாங்கவும் முயற்சி செய்தேன். இதற்கு 150 ரூபாய் தேவைப்பட்டது. இதற்காக நான் 40 ரூபாய் சேமிப்புப் பணம் மூலம் திரட்டினேன். எனது அக்காவின் திருமணதின்போது எனக்கு ஒரு மோதிரம் போட்டனர். அதை விற்றதால் 70 ரூபாய் கிடைத்தது. எனினும் போதிய பணம் இல்லாததால் துப்பாக்கி வாங்கும் எண்ணத்தை அப்போது கைவிட்டு விட்டேன்.

அதன்பிறகு இளம் வயதில் தமிழர்களுக்குச் சுதந்திரம் வாங்கித்தரப் போராட வேண்டும் என்று முடிவு எடுத்தேன். தனித் தமிழ் ஈழத்திற்காக என்னை அர்ப்பணித்தேன்.

இடையில் புலிகள் சார்பில் 3 முறை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அமைதியை நிலைநாட்ட இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் இதில் உடன்பாடு ஏற்படவில்லை. இதனால் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது என்று முடிவு செய்தேன்".

இவ்வாறு பிரபாகரன் கூறியுள்ளார்.

## நாவலடி மோதல்! மூன்று புலிகள் பலி!

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி முகாம் அருகில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெற்றமோதலில் புலிகள் தரப்பில் மூன்றுபேர் பலியானார்கள்.

இம் மோதல் குறித்து புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

மட்டக்களப்பில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீதும், இராணுவ முகாம்மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

நாவலடிச் சந்தி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் வீதி ரோந்துக்குச் சென்றபோது முகாமுக்கு அருகில் வைத்து தாக்கப்பட்டனர். இரண்டு இராணுவத்தினர் பலியானார்கள். அதேவேளை நாவலடி முகாமும் புலிகளால் தாக்கப்பட்டது. இத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் மூன்று பேர் பலியானார்கள்.

2ம் லெப்டினன்ட் கிரியாபாலன் (கைலாயபிள்ளை கிருஷ்ணன்- கொக்கட்டிச் சோலை) 2ம் லெப்டினன்ட் ராஜகோபாலன் (நாகலிங்கம் தீபநிதி- ஆயித்தியமலை, மட்டக்களப்பு) தனுகீரன் (தங்கத்துரை சிவபாதம்- பழுகாமம், மட்டக்களப்பு) ஆகியோரே பலியானவர்களாவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "எலி வேட்டைப் பொறி"

இராணுவத்தில் இணைந்து பின்னர் தப்பியோடித் தலைமறைவாகியுள்ள முன்னாள் படையினரைத் தேடிப்பிடிக்கும் 'எலிவேட்டை' நடவடிக்கை கிழக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம் பகுதிகளில் இந்த நடவடிக்கை தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ளதால் இதுவரை ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பகுதிகளில் 'எலி வேட்டை'ப் பொறியில் பல படையினர் மாட்டியுள்ளதாகத் தெரிய வருகிறது. தேடிப்பிடிக்கும் இந்நடவடிக்கைக்குப் பொலிசாரினதும், கிராம சேவகர்களினதும் உதவி நாடப்பட்டுள்ளது.

## "புலிகள் தாக்கினால் மௌனம் ஏன்?"

### யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் கேள்வி!

**யா**ழ் குடாநாட்டில் புலிகள் இயக்கத்தினர் தாக்குதல்கள் நடத்தும்போது அதனைக் கண்டிக்க எவரும் முன்வராதது ஏன்? இவ்வாறு யாழ் குடாநாட்டில் இராணுவத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

9.11.96 அன்று சலுசலா விற்பனை நிலையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரகுநாதன் சுந்தராம்பாள் என்னும் பெண் கொல்லப்பட்டார். 12 பொதுமக்கள் காயமடைந்தனர்.

15.11.96 அன்று திருநெல்வேலியில் புலிகள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர்.

இச் சம்பவங்கள் தொடர்பாக துக்கத்தை வெளிப்படுத்த மக்களில் எவரும் முன்வராதது ஏன்?

மாணவி கிருஷாந்தி உட்பட நான்கு பேரினதும் மற்றும் ரஜினி வேலாயுதபிள்ளை என்ற யுவதியினதும் கொலைகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்த பின்னரும் அனைவரும் கண்டித்ததும், எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தப்பட்டதும் ஏன்?

யாழ் குடாநாட்டில் வாழும் மக்களின் மனித உரிமைகளைக் காப்பதற்கான நிறுவனம் ஒன்றின் கிளை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் மக்கள் தமக்குள்ள பிரச்சனைகளை அங்கு சென்று முறையிடலாம் என்று இராணுவத்தினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இந்தியா உதவவேண்டும்!

### டக்ளஸ் தேவானந்தா – குஜ்ரால் சந்திப்பு

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குஜ்ரால், ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி உட்பட இந்தியாவின் முக்கிய அரசியல் பிரமுகர்களை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ. சந்தித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியாவின் அனுதாபத்தைப் பெறுவதற்கான முயற்சியாகவே இச் சந்திப்புகள் இடம்பெற்றன என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் அவரது மனைவி சோனியா காந்தி இலங்கைத் தமிழ் அரசியல் கட்சியின் தலைவர் ஒருவரைச் சந்தித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

"ராஜீவ் காந்தி கொலையானது தொடர்பாக இலங்கைத் தமிழ் மக்கள் மனம் வருந்துகின்றனர். இந்தியாமீது தமிழ் மக்கள் அபிமானம் கொண்டுள்ளனர். இலங்கையின் இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதாகும்" என்று சோனியா காந்தியிடம் எடுத்துக்கூறினார் டக்ளஸ் தேவானந்தா.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் குஜ்ராலையும் அவரது அலுவலகத்தில் சந்தித்து 45 நிமிட நேரம் டக்ளஸ் தேவானந்தா பேச்சு நடத்தினார்.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா அனுதாபம் கொண்டிருக்கிறது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் கூறியதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## நீலன்மீது 'ஈழநாதம்' சாட்டை!

### அரசுக்கு ஆலோசனை வழங்குவதாக தெரிவிப்பு

**ஜ**னாதிபதி சந்திரிக்காவுக்கு ஆதரவாக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் நீலன் திருச்செல்வம் செயற்படுகிறார் என்று புலிகள் இயக்கத் தினசரியான 'ஈழநாதம்' குற்றம் சாட்டியுள்ளது.

தனது ஆசிரியர் தலையங்கத்தில் ஈழநாதம் பத்திரிகை பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சியையும், அவரது 'இமேஜ்'ஜையும் பாதுகாப்பதில் எவருக்கும் இல்லாத அக்கறையை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் வெளிப்படுத்தியுள்ளார். ஆரம்பத்தில் இருந்தே சந்திரிக்கா குமாரதுங்கா எவ்வாறு ஆட்சிக்கு வரலாம் என்பது குறித்து அவருக்கு ஆலோச்னைகள் வழங்கி வந்தார் நீலன் திருச்செல்வம். இப்போது தமிழர் தேசிய இனப் போராட்டத்தை எவ்வாறு தோற்கடிக்கலாம் என்றரீதியில் ஆலோசனைகளை வழங்கிவருகிறார்.

யாழ் நகரில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டபோது, அதற்கருகில் நந்திக் கொடியையும் ஏற்றுமாறு நீலன் திருச்செல்வம் ஆலோசனை வழங்கினார்.

இந்த வகையில் ஜனாதிபதியின் இமேஜை காப்பதற்காக கூட்டணிச் செயலாளர் சம்பந்தன் பெயரில் கையொப்பம் இட்டு ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்" என்று தொடர்கிறது அந்த ஆசிரியர் தலையங்கம். 'நீலனின் மோசடி' என்ற தலைப்பில் அந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

## தமிழகம் செல்லும்போது பிடிபட்டோர் 544

### முகாமிலிருந்து தப்பிச்சென்றோர் 221

(மன்னார் நிருபர்)

**பா**க்கு நீரிணையைக் கடந்து தமிழகம் செல்ல முற்பட்ட வேளையில் இலங்கைக் கடற்படையினரால் இதுவரை 544 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மொத்தம் 5 தடவைகள் பிடிபட்டுள்ளனர்.

இறுதியாக கடந்த 15.11.96 அன்று 60 குடும்பங்களைச் சேர்ந்த 212 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் தற்போது பேசாலை அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நடுக் கடலில் வைத்து பிடிபடுவோர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்ல விரும்பினால் சொந்த இடங்களுக்கும் இன்றேல் முகாம்களுக்கும் அனுப்பி வைப்பதே வழக்கமாகும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் சொந்த இடம் செல்ல மறுப்புத் தெரிவிப்பதாக செயலக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இவ்வாறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களில் இதுவரை 51 குடும்பங்களைச் சேர்ந்த 221 பேர் தமிழகத்திற்கு தப்பியோடிவிட்டனர்.

இதேவேளை, மீனவர் நிவாரணம் வழங்கப்படுவதால் மன்னார்ப் பகுதியிலிருந்து தமிழகம் செல்வோரின் தொகை வெகுவாகக் குறைந்துவிட்டது. என்றாலும் ஏனைய பொருளாதாரப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளோர் தமிழகம் செல்லும் நிலை தோன்றியுள்ளது.

## மாவீரர் தினத்தில் மட்டக்களப்பில் பதட்டம்!

### தாக்குதலை எதிர்பார்த்து காத்திருந்த படையினர்!

(ஏறாவூர் நிருபர்)

**பு**லிகளின் மாவீரர் வார ஏற்பாடுகள் குறித்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பெரும் பதட்டம் நிலவியது. குறித்த வாரத்தின் இறுதி இருதினங்களும் நெருங்க நெருங்க எந்த இடத்தில் எது நடக்குமோ என்று மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் நிலவியது.

பலத்த மழை பெய்து கொண்டிருந்த கடந்த மாதம் 26ஆம் திகதி நள்ளிரவு மட்டக்களப்புக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்ட சம்பவம் மக்களை மேலும் கிலி கொள்ள வைத்தது. மட்டக்களப்பு பொலநறுவை வீதியில் சிங்ஹபுர என்ற இடத்திலுள்ள படையினர் பாதுகாப்பு முன்னேற்பாடுகளுக்காக காட்டுப் பகுதியை நோக்கி ஏவிய ஷெல்கள் தாக்கியதில் பாரிய மின்சாரத் தாங்கி ஒன்று சரிந்ததே மின் துண்டிப்புக்குக் காரணமென்று பின்னர் தெரிய வந்தது. இதனால் மட்டக்களப்பு மாவட்டம் மூன்று நாட்கள் முற்றாக இருளில் மூழ்கியிருந்தது.

பலத்த மழை பெய்த போதும் புலிகள் மாவீரர் வார நிகழ்ச்சிகளைத் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தங்கு தடையின்றி நடாத்தி முடித்தனர். மட்டக்களப்பு அரசடித் தீவில் மாவீரர் நினைவாலயமொன்று திறந்து வைக்கப்பட்டது. உயிரிழந்த புலிகளின் உறவினர்களுக்கு உதவியும் வழங்கப்பட்டன.

புலிகளின் மாவீரர் வார இறுதி நிகழ்ச்சிகளைக் காண கொழும்பிலிருந்து சில செய்தியாளர்களும், கூடவே அவுஸ்திரேலிய செய்தி நிறுவனமொன்றின் செய்தியாளரும் புலிகளின் பகுதிகளுக்குச் சென்றிருந்தனர்.

புலிகளின் மாவீரர் வார நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துப் படையினர் மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். கூடுதலான படையினர் காவல் கடமையில் நின்றிருந்தனர்.

மாவீரர் வாரத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை. மட்டக்களப்பு கிரானில் இடம்பெற்ற படை- புலிகளின் சிறிய மோதலொன்றின் விளைவாக குடிமக்களில் 4 தமிழ் மக்களும், இரு முஸ்லிம்களும், படையினர் தரப்பில் ஒருவரும் பலியானார்கள். 7 குடிமக்கள் காயம் பட்டார்கள். கெடுபிடி நிலைகளின் பின்னர்– இச் செய்தி எழுதப்படும் வரை கிரான் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. பீதி நிறைந்த சூழ்நிலையே அங்கு இன்னமும் காணப்படுகிறது. சம்பவம் நடந்த இடத்திற்குச் சமீபமாக இருந்த பாடசாலையொன்றின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் ஊரிலுள்ள பொதுமக்கள் ஆகியோர் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக கடந்த 27 ஆம் திகதி மட்டக்களப்பு நகரிலுள்ள பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை. பரீட்சைக்கு வந்த மாணவர்கள் திரும்பிச் சென்றனர்.

## மாலைதீவிலிருந்து பாரிஸ் சென்றார் ஜனாதிபதி

### விமானப் பயணத்தில் பாதுகாப்பு ஏற்பாடு!

**ஜ**னாதிபதி சந்திரிக்கா கடந்தவாரம் ஃபிரான்ஸ் நாட்டுக்கு உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்டு சென்றார். ஆனால் இலங்கையின் பிரதானமான கட்டுநாயக்காவிலுள்ள சர்வதேச விமான நிலையத்திலிருந்து அவர் புறப்படவில்லை. நவம்பர் 23ம் திகதி இரவு ஹெலிக்கொப்டர் மூலம் இரத்மலானை விமான நிலையம் சென்று அங்கிருந்து அன்றிரவே விமானப் படைக்குச் சொந்தமான அவ்ரோ விமானத்தில் மாலைதீவின் சர்வதேச விமான நிலையமான ஹுலூலில் போய் இறங்கினார்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எயார் லங்காவின் யுஎல் 550 பயணத்துக்கான விமானம் கட்டுநாயக்காவிலிருந்து பாரிஸ் நகரத்துக்கான தனது நேரடி சேவையைத் தொடங்கியது. இடையில் வேறு எந்த விமான நிலையத்தையும் தொடாமல் பாரிஸ் போக வேண்டிய அவ்விமானம், புறப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள்ளாக மாலைதீவு சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கியது.

ஏற்கனவே மாலைதீவில் தங்கள் விடுமுறையைக் கழித்துவிட்டு சொந்த நாடான ஃபிரான்ஸுக்குத் திரும்புவதற்கு அந்நாட்டு உல்லாசப் பயணிகள் 120 பேர் அதே விமானத்தில் இருந்தனர்.

முதல்நாள் சனிக்கிழமைதான் அவர்கள் மாலைதீவிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்திருந்தனர். நேரடியாக பாரிஸ் போய்ச்சேர வேண்டிய அவர்கள் 24 மணி நேரத்துக்குள்ளாக மீண்டும் புறப்பட்ட இடத்துக்கு வந்து சேர வேண்டியதாயிற்று.

இவ்விமானத்தின் முதல் வகுப்புக்கதவு திறக்கப்பட்டதும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா விமானத்தில் வந்து ஏறியபின் விமானம் புறப்பட்டது.

புலிகளின் மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தமையினால், ஜனாதிபதியின் பாரிஸ் நகரப்பயண ஏற்பாடுகள் மிக மிக அந்தரங்கமாக செய்யப்பட்டிருந்தன.

## மட்டக்களப்பில் தொற்றுக்காய்ச்சல்

(ஏறாவூர் நிருபர்)

**ம**ட்டக்களப்பில் ஒரு வகைத் தொற்றுக் காய்ச்சல் பெரும்பாலானோரைப் பீடித்துள்ளது. இதனால் நாளாந்தம் வைத்திய சாலையை நாடுவோர் தொகை அதிகரித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமிய ஆஸ்பத்திரிகளில் தினமும் முன்னூறுக்குக் குறையாத நோயாளிகள் சிகிச்சை பெற வருவதாகத் தெரிவிக்கும் வைத்தியர்கள் இந்தக் காய்ச்சல் சாதாரண ஒரு தொற்று என்றும், உடல் அசதி, தடிமன், தொண்டை நோ, என்பன இக்காய்ச்சலின் அறிகுறிகளாக இருக்கும்; மூன்று நாட்களே இக்காய்ச்சல் பீடித்திருக்குமென்றும் அறிவிக்கிறார்கள். வைத்தியர்கள் சிலரும் இக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது.

இது ஒரு புறமிருக்க, மட்டக்களப்பிலுள்ள அரச மருத்துவமனைகளில் பெரும் மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. பெரும்பாலான நோயாளிகளுக்கு சிட்டை எழுதிக் கொடுத்து மருந்துப் பொருட்களை கடைகளில் வாங்குமாறு வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

# காசுக்கட்டளைச் சேவையில் மாற்றம்!

## அஞ்சல் திணைக்களம் புதிய அறிவித்தல்

அஞ்சல் திணைக்களம் காசுக்கட்டளைச் சேவையில் புதிய மாற்றங்களை அறிவித்துள்ளது. கணக்குச் சுற்றறிக்கை 5/96ன் பிரகாரம் இம் மாற்றங்கள் டிசம்பர் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகிறது. அத்துடன் 'ஃபாக்ஸ்' காசுக் கட்டளைச் சேவையும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(திருமலை நிருபர்)

இதன்படி அஞ்சல் அலுவலகங்கள் மூலம் ஒரே தடவையில் பத்தாயிரம் ரூபா வரைக்குமான சாதாரண காசுக் கட்டளையையோ 'ஃபாக்ஸ்' காசுக்கட்டளையையோ அனுப்பவோ, பணமாக்கவோ முடியும். தந்திக்காசுக்கட்டளை, வி.பி.பி. காசுக்கட்டளை என்பவை இரண்டாயிரம் ரூபா வரைக்கும் உயர்த்தப்பட்டுள்ளன. இலங்கையில் மாற்றக்கூடிய வெளிநாட்டு காசுக்கட்டளையின் உச்ச எல்லையும் ஐம்பதினாயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

உபதபாற்கந்தோர், ஏஜன்சி தபாற்கந்தோர்களுக்கு பாக்ஸ் காசுக்கட்டளை வசதி வழங்கப்படவில்லை. எனினும் சாதாரண காசுக்கட்டளை, தந்தி காசுக்கட்டளை என்பவற்றின் எல்லை இரண்டாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காசுக்கட்டளைத் தரகுப்பணத்திலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஐம்பது ரூபாவுக்கும், அதன்பகுதிக்கும் தரகுப் பணமாக ஒரு ரூபா ஐம்பது சதம் அறவிடப்படும். இரண்டாயிரம் ரூபாய்க்கு மேற்படின்- ஐயாயிரம் ரூபா வரைக்கும், ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் அதன்பகுதிக்கும் பத்து ரூபா வீதமும், ஐயாயிரம் தொடக்கம் பத்தாயிரம் வரைக்குமான தொகைக்கு ஐந்து ரூபா வீதமும் தரகுப்பணம் அறவிடப்படும்.

இவற்றுக்கு மேலாக ரூபா 35/=ஐச் செலுத்துவதன் மூலம் பாக்ஸ் காசுக்கட்டளை அனுப்பலாம்.

இந்த மாற்றங்கள் பொதுமக்களின் அசெளகரியங்களைக் குறைப்பதோடு திணைக்கள அதிகாரிகளின் வேலைப் பளுவையும் கணிசமாகக் குறைக்கும் என திணைக்கள அதிகாரிகள் முரசிடம் தெரிவித்தனர்.

# பாரிஸ் கொலைகள்: சில கேள்விகள்

## திருந்துவார்களா? தொடர்வார்களா?

**26.10.96** சனிக்கிழமை மாலைப் பொழுதில் பாரிஸ் நகரத்தில் மீண்டும் இரண்டு கொலைகள். செய்திகளின் மேல் செய்தியாக காதை வந்தடைகிறது. கொல்லப்பட்டவர்கள் இருவரும் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள். நாதன் என்பவர் புலிகள் அமைப்பின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர். கஜன் என்பவர் 'ஈழமுரசின்' ஆசிரியர். இருவரும் கொல்லப்பட்டதனைக் கண்டித்து அறிக்கைகளும் கண்டனப் பேச்சுக்களுமாக இருவாரங்கள் ஓடின.

இவர்கள் கொல்லப்பட்டமை 'இலங்கை அரசின் நடவடிக்கை' என்றும் சொல்லப்படுகிறது. சிலர் 'உள்ளேயே நடந்திருக்கலாம்' என்றும் கதைக்கிறார்கள். எது எப்படியோ- கொலை என்ற வகையில், இந்தக் கண்டனங்களில் தவறுகளைக் காணமுடியாது.

ஆனாலும் இந்தக் கொலைகள் சில கேள்விகளையும் எம்முன் வைத்துள்ளன. இவ்வாறான படுகொலைகள் நம் நாட்டில் அன்று தொடக்கம் நடந்துவருகின்றன. ஆனால் எம்மத்தியில் வெளிநாடுகளிலும் படுகொலைகள் தொடர்வது என்பது, எங்களுடன் வன்முறை கூடப்பிறந்தது என்பதனை உலகுக்குக் காட்டுவதற்கு போதுமானது என்றே கருத வேண்டியுள்ளது.

இதனை ஆரோக்கியமான போக்கு என்று கருதமுடியாது என்பது பலமுறை சொல்லப்பட்டபோதும், கொலையாளிகளுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றதாகவே உள்ளது. எனவேதான் படுகொலைகளைக் கண்டித்த பலரே இப்போது உயிருடன் இல்லை என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

நாதன், கஜன் இருவரும் கொல்லப்பட்டதற்கு எதிராக விடுக்கப்பட்ட கண்டனங்கள் எல்லாம், 1.5.94ல் அதே பாரிஸில் கொல்லப்பட்ட சபாலிங்கத்துக்காக ஏன் செய்யப்படவில்லை?

பாரிஸில் கொலை செய்யலாம் என்று காட்டியவர்களே, அந்தச் சபாலிங்கத்தைக் கொன்றவர்கள் தானே?

இப்போது இந்தக் கொலைகளை சர்வதேச மட்டத்திற்கு அம்பலப்படுத்த நினைப்பவர்கள் எல்லாம் ஏன் அன்று மெளனமானார்கள்?

கஜன் என்பவர் வெளிநாடு வந்தார். இங்குள்ள ஆடம்பரங்களுடன் தன்னை இணைக்காது, பணம் சேர்க்க முற்படாது மக்களுக்காகவே சிந்தித்தார். அதற்காகவே வாழ்ந்தார். இரவு பகலாக உழைத்தார்- என்பதெல்லாம் உண்மைதான். அதில் மறுதலிக்க எதுவுமே இல்லை. இதில் எந்த வகையிலும், சபாலிங்கத்தை குறைத்து மதிப்பிட முடியாது என்ற உண்மை மாத்திரம் ஏன் சிலருக்குக் கசக்கிறது?

இறுதியாக சபாலிங்கம், கஜன், நாதன் ஆகியோரின் கொலைகள் கண்டிக்கப்பட வேண்டியதே. இனிமேலாவது இதனை எல்லோரும் ஒன்றுசேர நினைத்து- 'நடந்த தவறை திருத்திக் கொள்வோம்' என நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. அப்படி என்றால் நாம் எப்போதோ திருந்தியிருக்க வேண்டும். சபாலிங்கம், நாதன், கஜன் என்ற நிலை இன்னும் தொடருமா? அல்லது இனியாவது சிந்தித்துத் திருந்துவோமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

வேதனையன், பாரீஸ்.

# ஒரு நாள் நீர் விநியோகம்

**பு**த்தளம் மாவட்டத்தின் வட்டக்கண்டல் என்னும் கிராமம் உப்பு நிலமாகும். இப்பகுதியில் குடிப்பதற்கு நீர் இல்லாமை ஒரு முக்கிய பிரச்சனையாகும்.

இப்பகுதிக்கு மீ ஓயாவிலிருந்து வாரத்தில் ஒரு நாளான புதன்கிழமையில் மட்டுமே குழாய் மூலம் நீர் விநியோகம் செய்கிறார்கள். ஏனைய ஆறு நாட்களுக்கான நீரை சேமித்து வைத்தே மக்கள் பாவிக்கிறார்கள்

ஆகவே கூடிய விரைவில் ஒழுங்கான முறையில் குழாய்கள் பொருத்தி, ஒழுங்கான முறையில் நீரை வழங்க சம்பந்தப்பட்டவர்களை 'முரசு' மூலம் மக்களின் சார்பாக வேண்டுகிறேன்.

கொத்தாந்தீவு-யுனூத்

# தொலைக்காட்சி அறிவிப்பாளர்களும்

## கொலையாகும் செந்தமிழும்!

சமூகமயமாக்கலில் தொலைக்காட்சியின் பங்கு மிகவும் பெரியது என்பது இன்று யாவரும் அறிந்ததே. சிறுவர்களின் மொழி, பண்பாடு, ஆசாரம் என்பவற்றைத் தீர்மானிக்கும் பெற்றோர் அயலவர், ஆலயம் என்பவற்றோடு வெகுசன தொடர்பு சாதனங்களின் பாதிப்பும் பலத்த ஆய்வுக்குரியதாகும். இவ்வகையில் ரூபவாஹினி தமிழ்ச் சிறுவர் நிகழ்ச்சியின் அறிவிப்பாளர் சொல்லும் தமிழைத்தான் வளரும் சிறுவர்கள் தமிழாகக் கருதுவார்கள் என்றால், யாரும் மறுக்க முடியாது. "சித்திறம்", "வித்யாளயம்" "வறைந்துள்ளார்", "அணுப்பிவைத்துள்ளார்" போன்று பலப்பல சொற்கள் இந்த அறிவிப்பாளரால் சிறுவர்களுக்கு 'ஊட்டப்படுகின்றன.' அறிவிப்பாளரை நாம் குற்றம் சொல்ல வரவில்லை. இவரை இச் சிறுவர் நிகழ்ச்சிக்குத் தெரிந்தவர் யார்? மற்றது, செய்திகள் மக்களுக்கு வழங்கப்படுவது தகவல்களை அறிவதற்காகவே. எந்த அறிவிப்பாளர் திரையில் தோன்றுகிறார் என்று பார்ப்பதற்காக அல்ல.

தகவல்கள் விளங்காத மொழியில் தரப்படும்போது மக்கள் வேறு அலைவரிசை நிகழ்ச்சிக்கே திரும்ப வேண்டியிருக்கும்.

ரூபவாஹினியின் தமிழ்ச்செய்தி அமைப்பு நல்ல மொழிநடையில் இருந்தாலும், வாசிப்பவர்கள் மொழி உச்சரிப்பாலும் வாசிக்கும் முறையாலும் பார்வையாளர்களைக் குழப்பியடிக்கின்றனர்.

'நேரு மகளுக்கெழுதிய கடிதம்' மகனுக்கெழுதிய கடிதம் ஆகின்றது. அறிவிப்பாளர்களுக்கு வெளியுலக நடப்பறிவும் தேவையானதாகும்.

உமாச்சந்திரா, என்.எம். ராஜா, சாந்தி கருணரத்தினம் ஆகியவர்களைத் தெரிவுசெய்தவர்கள் எப்படித் தெரிவு செய்தார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது. தனியார் தொலைக்காட்சி நிலையங்களோ, அல்லது செய்மதி நிலையங்களோ எதையும் செய்துவிட்டுப் போகலாம். ஆனால் அரச தொலைக்காட்சிச் சேவைக்குச் சமுகப் பணி ஒன்று இருக்கிறது. இவ்விடயத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், ஐ.ரி.என்னும் ஓரளவு சிறப்பாக உள்ளன.

ரூபவாஹினித் தமிழ்ப்பிரிவின் புதிய பணிப்பாளர் இக்குறைபாடுகளைக் கவனிக்க வேண்டும்.

பேச்சுவழக்குப் பற்றி ஆய்வு செய்த அவர், ஒலிபரப்பு மொழி பற்றி நன்கு அறிந்தவர் என்பதால் கட்டாயம் நடவடிக்கை எடுப்பார் என்று விரும்புகிறோம்.

க. சிவநாதன், கொழும்பு-13.

# "உடன் கவனம் செலுத்தி குறை தீருங்கள்!"

## திருமலை மாணவர்கள் மகஜர் கையளிப்பு

**"எ**மது பல்கலைக்கழகக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக் கழகம் பொறுப்பேற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே எமது விடயத்தில் உடன் கவனம் செலுத்தி எமது குறைகளைத் தீருங்கள்," என்று கோரும் மகஜர் ஒன்றினைத் திருக்கோணமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர் அமைப்பு மேற்படி கல்லூரி இணைப்பாளரிடம் கையளித்துள்ளது.

இதன் பிரதிகள் பல்கலைக்கழக மூதவை, உபவேந்தர், இணைப்பாளர் ஆகியோருக்கும் அ. தங்கத்துரை பா.உ., மு.சந்திரகுமார் பா.உ., நகீப் அப்துல் மஜித், பா.உ. எம்.எச். எப்.மகருப், பா.உ. ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிரந்தர விரிவுரையாளர்கள் இல்லாமை, விரிவுரை மண்டப வசதியின்மை, நூலகம், சிற்றுண்டிச் சாலைகளின்மை, விடுதி வசதிகளின்மை போன்ற குறைகள் அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு முதலாம் வருட மாணவர்களைப் பதிவு செய்வதன் மூலம் வளாகம் தொடர்ந்து இயங்கும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலாவெளியில் எமக்கென ஒதுக்கப்பட்ட காணியில் ஏன் வளாகக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கவில்லை என்று கேட்டும் மூன்றாம் வருடமாணவர்கள் கல்லூரியுடன் தொடர்பு அற்றவர்கள் என்ற இயக்குநர தும், விரிவுரையாளர் சிலரினதும் கருத்து மாற்றப்படவேண்டும் என்றும் இம்மகஜ ரில் கேட்டுள்ளனர்.

# விண்ணப்பங்கள் நிராகரிப்பு

**க**ல்முனைப் பகுதியில் வசிப்பிட வசதியற்ற வறியவர்களுக்கென வீடமைப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதியை நெதர்லாந்து அரசு வழங்கியுள்ளது. தற்போது இவ் வீடமைப்புக்கான முதற்கட்ட காசோலைகள் உரியவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இவற்றில் சில குளறுபடிகள் நடந்துள்ளதாக தெரிகிறது. வறுமைக் கோட்டில் வாழ்கின்ற பல கன்னிப் பெண்களை உள்ளடக்கிய சில ஏழைக் குடும்பங்களின் வீடமைப்பு விண்ணப்பங்கள் இத்தோடு சம்பந்தப்பட்டவர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எனவே, இத் திட்டத்திற்கென பணிப்புரை வழங்கியவர்களும் கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் அவர்களும் வீடமைப்பு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களை மீளாய்வு செய்து இவற்றுக்கான நிதியை வழங்க ஆவன செய்ய வேண்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.


## U.S.A GREEN CARDS

அமெரிக்க அரசாங்க லொத்தர் சீட்டிழுப்பு முறையின் கீழ் 55,000 விசாக்கள் (GREEN CARDS) வழங்கப்படவிருக்கின்றன. தெரிவு செய்யப்படுபவர்கள், அவர்களது து ணைவர், பிள்ளைகள், அமெரிக்காவில் குடியேறமுடியும்.

இலவச விபரங்களுக்கு தபால் மூலம் தொடர்புகொள்க:

LAW ASSOCIATES
P.O.BOX 33, DEHIWALA.

## வத்தளையில்

5.8 பேர்ச்சஸ் உடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.. குளாய்க்கிணறு வசதியும் உண்டு. தொடர்பு 332551

கா.கமலநாதன்
73, ஸ்ரீவிக்கிரம மாவத்தை, கல்வெட்டி, வத்தளை.

## வத்தளையில்

தினமுரசு விற்பனை முகவர் தேவை. முற்பணம் செலுத்தக் கூடிய கடை உரிமையாளர்கள் நேரில் வரவும்.

நிர்வாகி.

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. (விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.)

டிசம்பர் **19** முதல் **31** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST., Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 ஜனவரி **4, 5 Dr.** முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஜனவரி **11, 12, 13** தினங்களில் கல்முனை T.M.M.பாமசியிலும் மற்ற நாட்களில் **DR.P.ARUMUGAM** No:33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

## கனடாவில் குடியேறும் நோக்கமா?
## தொடர்புகொண்டு பலர் வெற்றியும் கண்டுள்ளனர்

கனடாவிலேயே இத்துறையில் நிபுணர்களான வழக்கறிஞர்கள், சட்ட ஆலோசகர்கள் பணியாற்றும் **மக் ஐஸாக் & மக் ஐஸாக்,** நிறுவனத்திடம் பொறுப்பை ஒப்படையுங்கள். குடியேற்ற விஸா, ஸ்பொன்ஸர்ஷிப், வர்த்தகர் விஸா, தொழில்விஸா மற்றும் மாணவர்களுக்கான விஸா பெறுவதற்கு தனித்தனி விண்ணப்பதாரர்களுக்குரிய உதவிகள் வழங்கப்படும்.

கனடாவின் குடியியல் சட்டத்தில் மாற்றங்கள் வரமுன் முந்துங்கள்

விண்ணப்பங்களுக்கும்பூர்வாங்கப் பணிகளுக்கும் நாடுங்கள்

கிங் பேர்ட் ட்ரேடிங் (பிரை.) லிமிட்.,
180, பிரின்ஸ் ஒஃப்வேல்ஸ் அவெனியூ, கொழும்பு-14.

Tel. 448228
Tel. 433856

## EFFECTIVE ENGLISH WITH GRAMMER AND SPOKEN ENGLISH
## செயற்திறனுடைய ஆங்கில இலக்கணமும் பேச்சு ஆங்கிலமும்

- ஆங்கிலச் சொற்கள் ஆயிரக்கணக்கில் தெரிந்திருந்தும் ஆங்கிலம் பேச முடியவில்லையே!
- பேசும் ஆங்கில வகுப்புக்கு பலரிடம் சென்றும் ஆங்கிலம் பேச முடியவில்லையே!
- ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம், ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம்

**இவை தானே உங்கள் பிரச்சனை**

நீங்கள் பாடசாலையில் ஆங்கிலத்தைப் பரீட்சைக்காகப் படித்தீர்களே அன்றி, அதைப் பேசப் பயிற்சி பெறவில்லை. இதுவே பெரிய குறைபாடு.

இதனை நன்குணர்ந்த எமது நிறுவனம் சிறந்த முறையில் பேச்சு ஆங்கிலத்தை உங்கள் நாவிலிருந்து சரளமாக எளிய முறையில் வெளிக் கொணரவுள்ளது. நவீன உளவியல் ரீதியில் மாணவர் உவந்தேற்கும் முறையில் பன்னிரண்டு (12) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட தபால் மூலமான கல்வி நெறி.

விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

பேச்சு ஆங்கிலம் நேரடி வகுப்புகள் பிறைட் இயக்குனர் PON. SAKTHIVEL அவர்களால் ACA நிறுவனத்தில் NO.55, ST. LUCIAS STREET, COLOMBO - 13ல் ஞாயிற்றுக்கிழமைகளில் கற்பிக்கப்படும்.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
**S -27, First Floor, P. O. Box 162,**
**Colombo Central Super Market Complex,**
**Colombo - 11. T. P. 434770**

## ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398

## BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்.
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:........................
விலாசம்:........................

BRIGHT BOOK CENTRE (PVT)LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL:434770

## றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)

ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

### நாரதர்

# பலமும் பலப் பரீட்சைகளும்

# படையினரின் மாறிவரும் உத்திகள்


**நா**டெங்கும் பரபரப்பை ஏற்படுத்திய மாவீரர் தினம் முடிவடைந்துவிட்டது.

கடந்த ஆண்டு போலவே இம் முறையும் பாரிய தாக்குதல்கள் எதிலும் புலிகள் ஈடுபடவில்லை.

புலிகள் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என்று எதிர்பார்த்து படைத்தரப்பினர் உஷார்நிலையில் இருந்தனர்.

படையினர் உஷார் நிலையில் இருக்கும்போது புலிகள் தாக்குதலில் ஈடுபட்டிருந்தால் பலத்த இழப்புக்களை எதிர்பார்த்தே தமது அணிகளைக் களத்தில் இறக்கியிருக்க வேண்டும்.

எதிர்த்தரப்பு விழிப்பாக இருக்கும்போது தாக்குதலில் ஈடுபடுவது கெரில்லாப் போர்த்தந்திரப்படி தவறானது.



எதிர்த்தரப்பு விழிப்பாக இருக்கும்போது தூங்குவதாகப் பாவனை செய்வது, எதிர்த்தரப்பு தூங்கும்போது தாக்குவது என்பதுதான் கெரில்லாத் தந்திரத்தின் அடிப்படை விதிகளில் ஒன்றாகும்.

எதிர்த்தரப்புக்கு சாதகமான களத்தில் போரிடுவதில் இருந்து விலகிக் கொள்ளாத கெரில்லா அணிகள் சுலபமாக அழிக்கப்பட்டுவிடும்.

புலிகளைப் பொறுத்தவரை கெரில்லாப் போர் முறையில்தான் ஊன்றி நிற்கிறார்கள்.

படைத்தரப்பினருக்கும், புலிகள் தரப்பினருக்கும் ஆட் பற்றாக்குறை என்பது ஒரு பொதுப் பிரச்சனையாகவே இருக்கிறது.

ஆனாலும் ஒப்பீட்டளவில் படைத்தரப்பினரின் ஆட்பலம் புலிகளைவிட பல மடங்கு அதிகமாகவே இருக்கிறது.

எனவே-தற்போதுள்ள தமது ஆட்பலத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமானால், இழப்புக்கள் குறைவான களத்தில் சண்டையிடுவதே புலிகளுக்கு சாதகமான விஷயம்.

எனவே- படையினர் உஷாராக இருந்து புலிகளது அணிகளை எதிர்கொள்ளும் தயார் நிலையில் உள்ளபோது புலிகள் தாக்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மாவீரர் தினங்களை முன்னிட்டு புலிகள் முன்னர் தாக்குதல்களை நடத்தியதுண்டு.

அப்போதிருந்த சூழல் புலிகளுக்குச் சாதகமாக இருந்தது.

இப்போது படைத்தரப்பினர் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடிய நாட்களை ஊகித்து விழிப்பாகி விடுகிறார்கள்.

எவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படக்கூடும் என்பதை அனுமானித்து வியூகம் வகுக்கவும் அனுபவம் பெற்றுள்ளார்கள்.

நீண்டகால யுத்தம் போரிடும் இரு தரப்புக்களும் தமது மறுதரப்பின் பலம், பலவீனம், தந்திரோபாயம் போன்றவற்றை புரிந்து கொள்ளும் அனுபவத்தை ஏற்படுத்திவிட்டது.

இம்முறை மாவீரர் தினத்தை முன்னிட்டு படைத்தரப்பினர் புலிகளை தேடிச் செல்லும் தந்திரோபாயத்தை மேற்கொள்ளக்கூடும் என்று முரசு செய்தி வெளியிட்டிருந்தது ஞாபகமிருக்கலாம்.

படைத்தரப்பினரின் தந்திரோபாயம் தற்போது மாறியிருக்கிறது என்பதை புரிந்துகொண்டே அக் கணிப்புக்கு வர முடிந்தது.

முகாம்களுக்குள் படையினர் முடங்கி இருப்பதால்தான் புலிகள் தேடிவந்து தாக்க முடிகிறது என்பதை படைத்தரப்பினர் புரிந்துகொண்டுள்ளனர்.

எதிரி தாக்கக்கூடும் என்று தயார் நிலையில் இருப்பது தற்காப்பு நிலை எனப்படும்.

எதிரி தேடிவருவதற்கு இடையில் எதிரியைத் தேடிச் சென்று தாக்குதலில் ஈடுபடுவது தற்பாதுகாப்புக்கான தாக்குதல் யுத்தம் எனப்படும்.

முன்னைய காலங்களில் படையினர் தற்காப்பு நிலையில் மட்டுமே இருந்தனர்.

தமது முகாம்களைப் புலிகள் தாக்கக்கூடும் என்று எதிர்பார்த்து முகாம் பாதுகாப்பைப் பலப்படுத்துவதோடு நின்றுகொண்டனர்.

முகாம் பாதுகாப்போடு படையினர் நின்றுகொள்ள, புலிகள் குறிப்பிட்ட முகாம் பகுதிகளைச் சுற்றி தமது அரண்களை அமைத்துக் கொண்டனர்.

முகாம்களுக்குள் மட்டுமே படையினர் முடங்கி இருந்தமையால், முகாமுக்கு வெளியே என்ன நடக்கிறது? புலிகளின் அணிகள் முகாம்களைச் சுற்றி ஒன்று திரள்கிறதா போன்ற விபரங்கள் தெரியவில்லை.

ஆனால் தற்போது படையினரின் தந்திரோபாயம் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

முகாமைவிட்டு அடிக்கடி வெளியேறி முகாம் சுற்றாடல் பகுதிகளை கண்காணிக்கிறார்கள்.

புலிகள் தயாராகி முன்னேறி வர சந்தர்ப்பம் கொடுக்காமல், புலிகளின் அணிகளை களைப்புறச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இம் முறை மாவீரர் தினத்தில் வடக்கு-கிழக்கில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் புலிகளின் அணிகளுக்கு இழப்பை ஏற்படுத்தாவிட்டாலும், தற்காப்புக்கான தாக்குதல் என்றரீதியில் படையினருக்கு பயனளித்தன.

யாழ் குடாநாட்டில் தாம் நிலைகொள்ளாத பகுதிகளை நோக்கி படையினர் தேடுதல் வேட்டைகளை மேற்கொண்டனர்.

புலிகளது அணிகளின் நடமாட்டங்கள் அதிகமாக உள்ள பகுதிகள் என்று கருதப்படும் பகுதிகளுக்கும் சென்று தேடுதல்களில் ஈடுபட்டனர்.

வன்னியில் கிளிநொச்சி நகரில் நிலைகொண்டிருக்கும் படைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வான் படையினர் அடிக்கடி வட்டமிட்டு கண்காணித்தனர்.

புலிகள் நிலையெடுத்து நிற்கக்கூடும் என்று கருதப்படும் இடங்களுக்கு குண்டுவீச்சு நடந்தது.

அதேபோல கிழக்கு மாகாணத்திலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை வான்படையினர் நோட்டமிட்டனர். புலிகளின் முகாம்கள் இருக்கக்கூடிய பகுதிகள் என்று கருதப்பட்ட இடங்களில் குண்டுவீச்சுக்கள் நடைபெற்றன. பரவலான ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன.

கிழக்கில் குண்டுவீச்சில் புலிகளின் சில முகாம்களும் தாக்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் பாதிப்புக்கள் இல்லாமல் தப்பிச் சென்றுவிட்டனர்.

புலிகளின் கெரில்லாக்கள் ஒன்றுதிரண்டு ஒரு பாரிய தாக்குதலுக்கு தயாராகாமல் தடுப்பதற்கான படையினரின் தந்திரோபாயமே அதுவாகும்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை கைப்பற்றி நிலைகொள்வது படையினரின் சக்திக்கு மீறிய விடயமாகவே இருக்கிறது.

ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அவர்களது அணிகள் ஒன்றுதிரண்டு தமது முகாம்களை நோக்கி வந்துவிடக்கூடாது என்பதுதான் படையினரின் தந்திரோபாயமாக இருக்கிறது.

வடபகுதியிலும் இவ்வாறான தந்திரோபாயத்தையே படையினர் மேற்கொள்ளுகின்றனர்.

யாழ்குடாநாடு முழுவதும் படையினரை நிறுத்திவைப்பது ஏன்றால் பெருந்தொகையான படையினர் தேவை.

அதனால் ஒரு பகுதியில் நிலைகொண்டு இருந்தபடி, மறு பகுதியை நோக்கி ரோந்துகளில் ஈடுபடுவது, தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதுதான் படையினரின் உத்தியாக இருக்கிறது.

கிளிநொச்சி நகரை படையினர் கைப்பற்றி நிலைகொண்டிருப்பதும் ஒரு தந்திரோபாய நடவடிக்கைதான்.

ஆனையிறவு பிரதான தளத்தை பாதுகாக்கும் இராணுவ பாதுகாவல் அரணாக கிளிநொச்சி நகரை வைத்திருக்கிறார்கள்.

இப்போது ஆனையிறவு பிரதான தளத்தை புலிகள் தாக்க வேண்டுமானால், ஆனையிறவு பிரதான தளத்தின் வெளியே நீண்ட சமர் ஒன்றை முதலில் நடத்த வேண்டியிருக்கும்.

அதற்கிடையே ஆனையிறவு படைத்தளப் பாதுகாப்பு உஷாராகிவிடும்.

ஆனால், படையினரின் முகாம்களை சுற்றியிருக்கும் முன்னரங்க காவல் அரண்களை புலிகள் தாக்கமுடியும். அவ்வாறான தாக்குதல்களில் ஈடுபட்டும் வருகிறார்கள்.

ஆனால் படைத்தரப்பைப் பொறுத்தவரை பிரதான படைத்தளங்களைப் பாதுகாக்கும் சதுரங்கக் காய்களாக முன்னரங்க காவலரண்களை கருதுகின்றனர்.

காவலரண்கள் இல்லாவிட்டால் முகாம்கள் பறிபோய்விடும். அதைவிட தலைக்கு வருவது தலைப்பாகையோடு போன கதையாக சில காவலரண்கள் தாக்கியழிக்கப்படுவது பாரதூரமான விடயமல்ல என்று படைத்தரப்பு கருதுகிறது.

எனினும் இத்தகைய தந்திரோபாயம் போரின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கப் போவதில்லை.

மாறாக, நீண்டகால யுத்தம் என்ற கட்டத்துக்குள் படைத்தரப்பும், புலிகளும் பிரவேசித்துள்ளதையே வெளிப்படுத்துகிறது.

**★ எதிரி விழித்திருக்கும் போது தூங்குவதுபோல நடிப்பது, எதிரி தூங்கும் போது தாக்குவது என்பது புலிகளின் உத்தியாக இருக்கிறது.**

**★ எதிரி தம்மைத் தேடி வராமலிருக்க எதிரியை ஒரு குறிப்பிட்ட எல்லைவரை துரத்திச் செல்வது, தற்போது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தக்கவைத்துக் கொள்வது என்பது படைத்தரப்பின் தந்திரமாக இருக்கிறது.**

முகாம்களுக்குள் முடங்கிக் கிடப்பதை விட களத்தில் இயங்கிக் கொண்டேயிருக்கும் படையினரின் போர்த் தந்திரம் புலிகளுக்கு ஒரு சவால்தான். இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டுமானால் படைத்தரப்பின் ரோந்துகளை கட்டுப்படுத்தும் தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டாக வேண்டும்.

கிழக்கில் ரோந்து அணிகள்மீது புலிகளின் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

30.11.96 அன்றும் நாவலடி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட ரோந்து அணி மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். நாவலடி முகாமும் தம்மால் தாக்கப்பட்டது என்று புலிகள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் முகாம் தாக்குதல் ஒரு அடையாளத் தாக்குதல் என்றளவில்தான் இடம்பெற்றிருக்கிறது.

போரில் புலிகளின் அணிகளை அழித்தொழிக்கும் வியூகங்களை படையினர் வகுத்தாலும்கூட அந்த வியூகங்களை புலிகள் உடைத்துச் சென்று விடுகின்றனர்.

புலிகளின் இராணுவ பலத்தை முறியடிக்க புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளை கைப்பற்றுவது மட்டும் போதாது என்பதை கடந்தகால போர் நிலவரங்கள் காண்பித்துவிட்டன.

புலிகளின் அணிகள் இழப்பின்றி பின் வாங்கிச் சென்றுவிடுவதால், தாம் கைப்பற்றிய பகுதிகளை பாதுகாப்பதில் படையினர் தமது சக்தியில் பெரும் பகுதியை செலவிட வேண்டியிருக்கிறது.

அதேபோல புலிகளும் தாம் இழந்த பகுதிகளை மீண்டும் திரும்பப் பெறவேண்டுமானால், நீண்ட யுத்த கட்டத்துக்கு தமது அணிகளை தயார் படுத்தியாக வேண்டிய நிலையில் உள்ளனர்.

நீண்டகால யுத்தம் என்பது சலிப்பூட்டக் கூடியது. வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும்.

நீண்டகால யுத்தத்தில் ஈடுபடும் தரப்புகளுக்கு மக்கள் ஆதரவும் மிக முக்கியமான ஒன்றாகும்.

நீண்ட கால யுத்தம் ஒன்றில் ஈடுபடும் போது அரசுக்கும், புலிகளுக்கும் சாதகங்களும் உண்டு, பாதகங்களும் உண்டு.

யுத்தம் செய்து கண்ட பலன் ஒன்றுமில்லை என்னும் மனோபாவம் மக்களிடம் ஏற்படலாம். யுத்தம் செய்யும் தரப்புக்கள்மீது மக்கள் நம்பிக்கை இழக்கலாம். இது இரு தரப்புக்கும் பொதுவான பிரச்சனை.

> **யுத்தம்– நீண்டகாலயுத்தம் என்ற கட்டத்துக்குள் பிரவேசித்துள்ளது. நீண்ட கட்ட யுத்தத்தில் வெற்றி–தோல்விகள் கைமாறிக்கொண்டிருக்கும்!**

படையினரின் நடவடிக்கைகளால் அவர்கள் நிலைகொண்டுள்ள பகுதி மக்கள் வெறுப்படைவர். புலிகளை நோக்கி மக்கள் ஆதரவு திரளும்.

அந்நியமான நிலப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் களைத்துப் போய் விடுவர். சிறு சிறு தாக்குதல்கள் மூலம் அவர்களை களைப்படையச் செய்துவிட்டு, பாரிய தாக்குதல்களில் ஈடுபடும்போது பின்வாங்கிவிடுவர் என்பது நீண்டகால யுத்தத்தில் கெரில்லாக்களுக்கு நம்பிக்கையூட்டும் விடயங்களாகும்.

யுத்தம் நீண்ட கட்டமாகிவிட்டாலும் மக்களுக்கும், கெரில்லாக்களுக்கும் உளவியல் ரீதியான உற்சாகம் கொடுக்கும் தாக்குதல்களை நடத்திக்கொண்டேயிருக்க வேண்டும்.

அரசாங்கமும் தனது நிலை பலமாக இருப்பதாகக் காட்ட இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடவே செய்யும்.

இதனால் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையும், பாதுகாப்பும் உத்தரவாதமற்றதாகவே இருக்கும்.

அவ்வாறான நிலையில் அம் மக்களை கெரில்லாக்கள் தம்மைச் சுற்றி வென்றெடுக்கவும் வாய்ப்பு உண்டு. அல்லது மக்கள் விரக்தி நிலைக்கு செல்லவும் வாய்ப்பு இருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழ்வது நிம்மதியாக இருக்காது என்று மக்கள் நினைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை தந்திரமாகும்.

ஆனால், தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்களுக்கு நம்பிக்கையூட்ட முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

இன, மொழி ரீதியாக வேறுபட்ட ஒரு படை மூலமாக இன்னொரு இன மக்கள் வாழும் பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்போது படையினர் விடும் ஒவ்வொரு தவறும் இனரீதியான உணர்வுகளையே அங்குள்ள மக்களிடம் ஏற்படுத்தும்.

எனவே-இனப் பிரச்சனை சார்ந்த ஒரு யுத்தத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களை அரசாங்கம் வென்றெடுப்பது சாத்தியமான ஒன்றல்ல. ஏற்கனவே இந்தியப் படையினருக்கு ஏற்பட்ட அனுபவமும் அதுதான்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளை வசைபாடுகிறவர்களும் இருக்கிறார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டுக்கு வெளியே அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களிடம் 'புலிகள்தான் நமது கௌரவத்தை காப்பாற்றுகிறார்கள்' என்ற உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது.

இதனால் கெரில்லாக்கள் மக்கள் மத்தியில் மறைந்திருக்கவும், தாக்குதல் நடத்தவும் கூடிய சூழல் இருந்து கொண்டேயிருக்கும்

**யுத்தத்தின் இன்றைய கட்டம் இரு தரப்புமே 'நாம்தான் பலமானவர்கள்' என்று சொல்லிக் கொள்ளும் கட்டத்தில் இருக்கிறது.**

**இதன் அடுத்த கட்டம் பலமானவர்கள் மத்தியிலான பலப்பரீட்சையாகவே இருக்கும். ஒரு தரப்பிடம் மறு தரப்பு பணிந்தும், விட்டுக்கொடுத்தும் செல்வதாக இருக்காது.**

**ஜனாதிபதியின் பேட்டிகளும், பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியும் அதனைத்தான் உணர்த்துகின்றன.**

இருவருமே பேச்சுவார்த்தைகளை பகிரங்கமாக நிராகரிக்கவில்லையே தவிர, பேச்சுவார்த்தையை நடத்தக்கூடிய மன நிலையில் இல்லை என்பது தெளிவாகிறது.

போரில் வெற்றிபெற்ற தரப்பு என்ற நிலையில் இருந்துகொண்டு பேசவே அரசாங்கம் விரும்புகிறது. இன்னமும் இரண்டாண்டுகளில் பொதுத் தேர்தல்கள் வரப்போகும் நிலையில், அந்த நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் இறங்காது.

படைகள் யாழ் குடாநாட்டில் இருந்து வெளியேறினால்தான் பேச்சுவார்த்தை என்பது பிரபாகரனின் நிலைப்பாடு.


மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று வந்தால்கூட படைகளை உடனடியாக விலக்கும் கோரிக்கையை அவர்களும் வலியுறுத்த முடியாது.

இலங்கைத்தீவில் இரு நாடுகள் என்ற அடிப்படையில் பிரபாகரனின் கோரிக்கை அமைந்துள்ளது. அதனை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்காது என்பதும் புலிகளுக்குத் தெரியும்.

அதனால் தமது பலம் மூலமாக தமக்குச் சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்திய பின்னர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வருவதையே புலிகள் விரும்புவர் என்பதுதான் உண்மை.

ஆக, யுத்தம் நிறுத்தப்படும் வாய்ப்புக்களை விட நீண்டு செல்லும் என்பது தான் உண்மையான நிலவரமாகும். ○

## அதிரடி அய்யாத்துரை



**இ**ப்பவெல்லாம் மக்கள் முன்னெச்சரிச்கை விடயங்களில் கெட்டித்தனமாகச் செயற்படுகினம். ரெண்டு எழுத்தாரின் நினைவுதின நாட்களை முன்னிட்டு தலைநகரில் பல வீடுகளில் முன்கூட்டியே பொருட்கள் யாவும் வாங்கி வைக்கப்பட்டதாம். குறிப்பிட்ட சில நாட்களில் எதுவும் நடக்காவிட்டால்தான் ஆச்சரியம் எண்டு நினைக்குமளவுக்கு சனம் பழக்கப்பட்டுப் போச்சுதுகள். எல்லாம் ஒரு அனுபவம் தான்.

**ரெ**ண்டு எழுத்தாரின் நினைவுதின நாளை முன்னிட்டு பத்திரிகையாளர்கள் கிழக்கில் ரெண்டு எழுத்தாரின் குகைக்குள் சென்று வந்தவையல்லோ. பலத்த உபசரிப்பாம். ஒரு இரவு அங்கு தான் தங்கியிருந்தவை. "வீட்டில் உங்களைத் தேடுவினம் எண்டால், நாங்கள் ஆள் அனுப்பித் தகவல் கொடுக்கலாம்" எண்டு சொன்னவையாம் ரெண்டு எழுத்தார். "பார்த்தியளோ எங்கள் வீடுகளுக்கு தகவல் அனுப்பக்கூடியளவுக்கு அங்கங்கே ஆட்கள் இருக்கினம்" எண்டு சொல்லிவிட்டு நாலு பக்கமும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டார் ஒரு பத்திரிகையாளர். ஒரு மரியாதைதான்!

**கி**ழக்கின் தனித்துவக் கட்சியின் இளம் தலைவரைக் கண்டு கூட்டான கட்சி வட்டாரம் பயப்படுகிறதாம். ரெண்டு எழுத்தாரின் சம்மதம் பெற்று அவர் செய்யும் சில காரியங்கள் தங்கள் செல்வாக்கை செல்லாவாக்காக்கிப் போடுமோ எண்டு பயப்படுகினமாம். "என்ன தமிழ் வாக்குகளை கவரப் பார்க்கிறீர்களோ?" எண்டு அவரிடம் கேட்டாராம் கூட்டான கட்சி பிரதிநிதி ஒருவர். "யோசிக்க வேண்டாம். எனக்குள்ள வாக்குகளே எனக்குப் போதும்" எண்டு பதிலளித்தாராம் இளம் தலைவர்.

**கி**ளிநொச்சியிலும் உள்ளூராட்சி தேர்தல் நடக்கும் எண்டு அறிவிப்பு வந்தவுடன் என் நண்பர் ஒருவர் விழுந்து விழுந்து பாராட்டத் தொடங்கிவிட்டார். ஏன் பாராட்டுகிறீர் எண்டு கேட்டதற்கு என்ன சொன்னவர் தெரியுமோ? "அங்கே ஒரு நாய் மட்டும் மிஞ்சியிருக்குது எண்டு சொல்லப்பட்டதல்லோ. வாக்குரிமையின் வளர்ச்சியைப் பார்த்தியளோ. புல்லரிக்குது எண்டு" மனுசன் தலை கீழாக நிண்டு பாராட்டிக் கொண்டிருக்கிறார். "ஜனநாயகம், அங்கு மட்டும் ஜன நாய் அகமாகிப் போச்சுதோ" எண்டு கேட்டுவிட்டு நழுவி வந்துவிட்டேன்.

**உ**ள்ளூராட்சித் தேர்தல் நடந்தால் சுயேச்சையாக ஒரு குழுவை நிறுத்தும் உத்தேசம் கூட்டான கட்சியினருக்கு இருக்கிறதாம். ரெண்டு எழுத்தாருக்கு தெரியாமல் எப்படிக் காயை நகர்த்தலாம் எண்டு யோசிக்கினமாம். தமிழ் கட்சிகள் தேர்தலில் போட்டியிட முன்வரக் கூடுமோ எண்டு அதிகாரதரப்பாரின் உளவுப் பிரிவினர் தகவல் திரட்டுகினமாம். போட்டியிடக்கூடும் எண்டு அசுமாத்தம் தெரிந்தால் தேர்தல் நடந்தே தீருமாம். இல்லாவிட்டால்தான் பின்போடப்படுமாம்.

**க**னடாவில் தஞ்சமடைந்து புகலிடம் பெற்றிருக்கும் நம்மவர்கள் விடயத்தில் கடும் கண்காணிப்புச் செலுத்தப்படுகிறதாம். முன்னர் இங்கு இயக்கங்களில் இருந்தவர்களை அறிந்து துருவித் துருவி விசாரிக்கிறார்களாம். முன்னர் இருந்தவை தொடர்பாக தகவல் கொடுத்து உதவும் புண்ணியவான்களும் முன்னாள் போராளிகள் தானாம்.

**அ**யல்நாட்டு விசா கறுப்புச் சந்தையில் எக்கச்சக்கமாக விலை போகுது. 30 ஆயிரம் ரூபா சுளையாகக் கொடுத்து ஆறுமாத 'பிஸினெஸ் விசா' எடுத்திருக்கிறார் ஒரு வியாபாரி. ஏன் இந்த அநியாய விலை? எண்டு கேட்டனான். படகுக் கட்டணம் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபா வரை போகுது. அது பத்திரமில்லாத பயணம். படகுக் கட்டண விபரம் 'விசா' விற்பனையாளர்களுக்கு தெரிஞ்சுபோச்சு. அதுதான் விலையை உயர்த்திப் போட்டினம். படகுக் கட்டணத்தைவிட அதிகமாக இருந்தால்தான் விமானப் பயணம் செய்ய உதவும் விசாவுக்கு ஒரு மரியாதையாக இருக்குமாம். அதுதான் விலையை உயர்த்தினவையாம். வேறு ஒரு கெட்ட நோக்கமும் கிடையாதாம்!

**வி**ளம்பரப் பிரியர்கள் எண்ணிக்கை வர வர கூடிப்போச்சு. அதனால் ஒரு புதுக்கவிதையை தேடிப் பிடிச்சுத் தருகிறேன்.

### புகழின் விலாசம்

"புகழே உன் விலாசம் என்ன?"
வினாவினான் ஒருவன்
"மன்னிப்பாய் மனிதா..
நீ என் விலாசம் கேட்காதே
நான் உன் விலாசம்
தேடி வரவேண்டும்,"
புகழ் சொன்னது
புன்னகையுடன்!

(ரிஷி)

**அரசியல் தொடர்**

**அற்புதன் - எழுதுவது**

# திலீபனின் இறுதி நாள்




## "பாரதம் மீது தர்ம யுத்தம்" பிரபா விடுத்த செய்தி

### ஐந்தாம் நாள்

திலிபனின் சொந்தப்பெயர் பார்த்திபன். திலிபன் பிறந்த பத்தாவது மாதத்திலேயே தாயார் இறந்துவிட்டார். தந்தையார் இராசையா ஓர் ஆசிரியர்.

யாழ்ப்பாணம் ஊரெழுதான் சொந்த ஊர். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன்.

யாழ் வைத்திய பீட மாணவனாக கல்வி கற்கும் வாய்ப்பை உதறிவிட்டு, 1983ல் புலிகள் அமைப்பில் சேர்ந்து கொண்டார்.

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகி ஐந்து நாட்கள் சென்ற நிலையில் பத்திரிகை ஒன்று பின்வருமாறு தெரிவித்தது;

**"திலீபன் உடல்நிலை மோசமடைந்து வருகிறது. அவர் கடைசியாக சிறுநீர் கழித்து 48 மணித்தியாலங்களுக்கு மேலாகி விட்டது. இதே நிலையில் மேலும் இரண்டு நாட்களுக்கு தொடர்ச்சியாக சிறுநீர் கழிக்காவிட்டால், அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டு அதிர்ச்சி ஏற்படும்!"**

ஐந்தாம் நாளன்று இந்தியப் படையின் யாழ் கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் பரார் திலீபனை பார்ப்பதற்காக வந்தார்.

அவரைக் கண்டதும் குழுமியிருந்த மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்து ஐந்து நாட்களாகியும் இந்தியா மௌனமாக இருந்தமை மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

பராரை புலிகள் இயக்கத்தின் சார்பாக யோகி வரவேற்றார். திலீபனின் உடல்நிலை தொடர்பாகவும் விளக்கிக் கூறினார்.

பரார் முகத்திலும் கவலைக் குறிகள். "நான் சென்று இது தொடர்பாக மேலிடத்துக்கு தெரிவிக்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்க முயற்சி செய்கிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சென்றார் பரார்.

### ஆறாம் நாள்

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்து முக்கியமான ஒருவர் யாழ்ப்பாணம் வருகிறார். புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்தப் போகிறார் என்று செய்திகள் அடிபட்டன.

ஆறாம் நாளன்று யோகி, மாத்தையா, அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் இந்திய அதிகாரிகள் பேச்சு நடத்தினார்கள். ஆனால் அப் பேச்சுவார்த்தையில் இந்தியத் தூதரக அதிகாரி எவரும் கலந்துகொள்ளவில்லை

இந்தியப் படையின் மூத்த தளபதி ஒருவரும், பிரிகேடியர் ராகவன், எயார் கொமாண்டர் ஜெயக்குமார், கடற்படைத் தளபதி ஆகியோருமே பேச்சில் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையில் இந்திப்படை சார்பாக கலந்து கொண்டவர்களால் தீர்க்கமான முடிவு எதனையும் கூறமுடியவில்லை.

இந்தியத்தூதர் திக்ஷித் தொடர்ந்தும் பிடிவாதமாகவே இருப்பதாகத் தெரிந்தது.

புலிகள் இயக்கத்தினர் வேண்டுமென்றே பிரச்சனைகளை கிளப்புகிறார்கள் என்ற நினைப்புடன் திக்ஷித் பிடிவாதமாக இருப்பதாகத் தெரிந்தது.

இந்திய அதிகாரிகளுடன் பேசியது தொடர்பாக திலீபனிடம் சென்று விளக்கினார் யோகி. விளக்கிவிட்டு "என்ன செய்யலாம்?" என்று கேட்டார் யோகி.

சரியாகப் பேசவே முடியாத நிலையில் துவண்டுபோயிருந்த திலீபன், யோகியிடம் சொன்னது இது:

"எந்த முடிவும் நல்ல முடிவாக இருக்க வேண்டும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தரவேண்டும். இல்லையெனில் நான் உண்ணாவிரதத்தை கடைசிவரைக்கும் கைவிடமாட்டேன்."

திலீபன் எதிர்பார்த்த முடிவு கிட்டுவதாகத் தெரியவில்லை. ஏழாம்நாள், எட்டாம்நாள், என்று கடந்து ஒன்பது நாட்கள் ஆகிவிட்டன.

ஒன்பதாவது நாள்தான் இந்தியத் தூதர் திக்ஷித் யாழ்ப்பாணம் வந்தார். பிரபாகரனைச் சந்தித்தார். அச்சந்திப்பிலும் திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

மினி பஸ்களிலும், கால் நடையாகவும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதிக்கு வந்து சேர்ந்த மக்கள் வெள்ளம் அலை மோதியது.

படுக்கையில் சுருண்டு கிடந்தார் திலீபன். அவரது நாடித்துடிப்பை பரிசோதித்தவர்கள் திகைத்து நின்றனர்.

ஒரு விளக்கு அணையப்போகிறது. எந்த நேரத்திலும் சாவு திலீபனை அணைக்கலாம் என்பது தெரிந்துவிட்டது.

பத்தாம் நாள் அன்று, தன் அருகே இருந்த வாஞ்சிநாதனிடம் திலீபன் தனது ஆசையைக் கூறுகிறார்:

"கிட்டண்ணாவைப் பார்க்க வேண்டும் போலக் கிடக்கு."

கிட்டுதான் திலீபனை யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக பிரபாகரனிடம் சிபாரிசு செய்தவர்.

கிட்டு அப்போது தமிழ்நாட்டில் இருந்தார். அது திலீபனுக்கும் தெரியும். ஆயினும் தனது முடிவை ஊகித்துக் கொண்ட நிலையில் தனது ஆசையைத் தெரிவித்தார்.

யாழ் குடாநாடெங்கும் அடையாள உண்ணாவிரதங்கள் நடந்து கொண்டிருக்க, மாணவர்கள் நீண்ட தூரங்களில் இருந்து ஊர்வலமாக வந்து திலீபனுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் உண்ணாவிரதப் போராட்டங்களும், மறியல் போராட்டங்களும் நடத்தப்பட்டன.



### திடீர் சுற்றிவளைப்பு

திலீபன் யாழ்பாணத்தில் நவாலிப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தை இடையில் குறிப்பிட வேண்டும்.

நவாலிக் கத்தோலிக்க தேவாலயம் அருகில் நின்று பொதுமக்கள் சிலருடன் பேசிக் கொண்டிருந்தார் திலீபன்.

திடீரென்று இரண்டு ஜீப் வண்டிகள் வந்து நின்றன. ஜீப் வண்டிகளில் இருந்து இராணுவத்தினர் கீழே குதித்தனர்.

திலீபனின் கையிலே ஒரு சூட்கேஸ் இருந்தது. உள்ளே இயக்க ஆவணங்களும், கைத்துப்பாக்கியும் இருந்தன.

ஓடுவதற்கும் முடியாது. கைத்துப்பாக்கியை வெளியே எடுப்பதற்கும் அவகாசமில்லை.

அப்படியே அசையாமல் நின்றார் திலீபன். சூட்கேசுடன் நின்ற திலீபனை நோக்கி வந்த இராணுவத்தினர், அவரது அருகே நெருங்கியதும் துரிதமாகச் செயற்பட்டார் திலீபன்.

அருகில் வந்த இராணுவத்தினரை சூட்கேசால் தாக்கிவிட்டு, அருகிலுள்ள பனந்தோப்பு வழியாக ஓடத்தொடங்கினார்.

இராணுவத்தினர் சுடத் தொடங்கினார்கள். திலீபனின் கையில் வெடிபட்டது.

வெடிபட்டபோதும் ஓடித்தப்பிவிட்டார் திலீபன்.

1986ம் ஆண்டில் வல்வெட்டித்துறையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் திலீபன் படுகாயமடைந்தார்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் திலீபனின் குடல் சிதைந்து போனது.

தீவிர சிகிச்சையால் உயிர் தப்பினார் திலீபன். அதே திலீபனின் உயிர்தான் உண்ணாவிரத மேடையில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

### பதினோராம் நாள்

25.09.1987. திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்து பதினோராம் நாள்.

திலீபனின் உண்ணாவிரதத்தை நியாயப்படுத்துவதாக ஒரு சம்பவம் அமைந்தது.

24.09.87 அன்று திருக்கோணமலையில் விறகு வெட்டச் சென்ற எட்டுத் தமிழர்கள் குடியேற்றவாசிகளால் வெட்டிக்கொல்லப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

இதேவேளை இலங்கைக் கம்யுனிஸ்ட் கட்சியின் வட பிராந்தியக் குழுவும் இந்தியாவைக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது.

26ம் திகதி முதல் யாழ் மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும், போக்குவரத்து ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்வதற்கு புலிகள் இயக்கத்தினர் ஏற்பாடுகளைச் செய்தனர்.

திலீபன் சுயநினைவை இழந்து கொண்டிருந்தார். திலீபனின் அருகே இருந்த மேடையில் இருந்து ஒலிபரப்பான பாடல் ஒன்று கூடியிருந்த மக்களை நேகிழச் செய்தது. பலர் கண்ணீர்விட்டு கதறியழுதனர்.

அந்தப் பாடல் இதுதான்:

**"ஓ.. மரணித்த வீரனே!- உன்**
**ஆயுதங்களை எனக்குத்தா- உன்**
**சீருடைகளை எனக்குத்தா- உன்**
**பாதணிகளை எனக்குத் தா"**

### இறுதி நாள்

26.09.1987 அன்றுதான் திலீபனின் இறுதி நாள்.

நேரம் அதிகாலை ஐந்துமணி. திடீரென்று மின்சாரம் தடைப்பட்டது. (அப்போது யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இருந்தது)

திலீபன் படுத்திருந்த மேடையில் இருள் சூழ்ந்தது.

மெழுகுவர்த்தியொன்றை மேடையில் எரியவைத்தனர். பலமாக வீசிய காற்று அதனை அணைத்துவிட்டது.

ஐந்து நிமிடங்களுக்குள் மீண்டும் மின்சாரம் உயிர்த்தது.

ஆனால் திலீபன்?

மெல்ல மெல்ல உயிர் பிரிந்து கொண்டிருந்தது.

டாக்டர் சிவகுமார் திலீபனின் அருகே சென்றார். அவரைப் பரிசோதித்துப் பார்த்தார். டாக்டர் சிவகுமாரையே எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

**"திலீபன் நம்மை விட்டுப் போய்விட்டார்"** என்று சொல்லிவிட்டு, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கினார் டாக்டர் சிவகுமார்.

அப்போது நேரம் காலை 10.48.

எங்கும் அழுகை ஒலி. திலீபனின் உடல் மேடையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

பிற்பகல் 4.15 மணிக்கு புலிகள் இயக்க இராணுவச் சீருடையுடனும், தொப்பியுடனும் திலீபனின் உடல் அதே மேடைக்குக் கொண்டு வரப்பட்டது.

'லெப்டினன்ட் கேணல்' என்ற பட்டம் வழங்கப்பட்டு, மக்களின் அஞ்சலிக்காக திலீபனின் உடல் வைக்கப்பட்டது.

### பிரபாவின் செய்தி

திலீபனின் உடலைக் காணவந்த அவரது தந்தையார் இராசையா 'ஓ'வென்று கலங்கி அழுதுவிட்டார்.

பிரபாகரன், மாத்தையா உட்பட புலிகள் இயக்கத் தலைவர்கள் பலர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

திலீபனின் மரணத்தை அடுத்து பிரபாகரன் ஒரு செய்தி விடுத்தார். இந்தியா மீதும் பிரபாகரன் கண்டனம் தெரிவித்திருந்தார். அச்செய்தி இதுதான்:

"எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைச் செய்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள்.

ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது.

சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனியவைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியைத் தீண்டிவிட்ட நிகழ்ச்சி. திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் மண்ணுக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்புக்காக இறந்தான். உங்கள் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக இறந்தான்.

ஓர் உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை; எமது சுதந்திரம்; எமது கௌரவம்!

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன்மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு....

### இந்தியா கவலை

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என்று இந்தியத் தூதர் கூறியிருக்கிறார். தமது உறுதி மொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பான் என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால், உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும்; எமது மக்களுக்கும், எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்; தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும்- இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி, நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களதும், மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்குப் பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாமல் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரித கதியில் தமிழ் மண்ணை விழுங்கியது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது.

அவசர அவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்துகொண்ட திலீபன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி காணத் திடசங்கற்பம் கொண்டான்.

### தர்மயுத்தம்

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம்தான் எமது இனப் பிரச்சனையில் தலையிட்டது. பாரதம்தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்திவைத்தது.

ஆகவே பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றை ஆரம்பித்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம்கூட அருந்தாது மரண நோன்பைத் திலீபன் தழுவிக்கொள்வதற்கு 24 மணிநேரத்திற்கு முன்னரே, இந்தியத் தூதர் திக்ஷித்துக்கு நாம் முன்னறிவித்தல் கொடுத்தோம்.

உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை எதுவுமே நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசின் கீழுள்ள தொடர்புச் சாதனங்கள் எம்மீது விஷமத்தனமான பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டன. திலீபனின் உண்ணாவிரதத்தை கொச்சைப் படுத்தின.

ஒன்பதாவது நாள் இந்தியத் தூதர் வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளைத் தந்தார்.

வெறும் உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்படமாட்டாது என்றேன்.

உங்களுக்கு திலீபனின் உயிர்மீது அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்தியத்தூதர் மறுத்துவிட்டார்."

அதுதான் பிரபாகரன் விடுத்த செய்தி.

### எதிர்ப்பு

திலீபனின் மரணத்துடன் வடக்கு-கிழக்கில் இந்தியப் படைக்கு எதிரான உணர்வுகள் தலைதூக்க ஆரம்பித்தன.



திக்ஷித்

இதற்கிடையே இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது தொடர்பான பேச்சுக்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இடைக்கால நிர்வாக சபையை ஏற்றுக் கொண்டு மேலும் சில காலத்திற்கு பொறுத்திருப்பதா?

அல்லது திலீபனின் மரணத்தால் ஏற்பட்டுள்ள எழுச்சியை வைத்து மீண்டும் போராட்டத்தை ஆரம்பிப்பதா? என்பதைத்தான் பிரபாகரன் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

'இந்தியப் படையினர் தமிழ் மக்களை காக்க வந்த இரட்சகர்கள்' என்று தமிழ் மக்கள் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இப்படியே போனால் போராட்டத்தை மறந்துவிடுவார்கள் என்பதுதான் புலிகள் இயக்கத்தினரின் கவலையாக இருந்தது.

திலீபனின் மரணமும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுதாபமும் புலிகள் இயக்கத்தினருக்கு ஓரளவு ஆறுதலாகவே அமைந்தன.

இடைக்கால நிர்வாக சபைக்கு பெயர்களைத் தருமாறு புலிகள் அமைப்பிடம் கேட்கப்பட்டது.

இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையிலான உறவின் கடைசி எல்லை நெருங்கிக் கொண்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)

**அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை**

# சமாதானப் பாதையில் அகற்றப்படவேண்டிய தடைக்கற்கள்!



## அலசுவது– இராஜதந்திரி

இலங்கையில் நவம்பர் மாதம் என்றவுடன் நடுக்கம் ஏற்படும் சூழ்நிலையே தோன்றிவிடுகின்றது.

கடந்த சில வருடகாலமாகவே 'இந்த நவம்பர் நடுக்கம்' இலங்கையில் நிலவிவருகின்றது. ஆட்சியாளர்கள், ஆயுதப்படையினர் அனைவருமே நவம்பர் மாதமென்றவுடன் மிகவும் விழிப்புடனிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்தவாரம் தமது மனதுக்குப்பிடித்தமான ஃபிரான்ஸ் நட்டுக்கு தமது முதலாவது உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

முழுநாடுமே அதீத பாதுகாப்பு நிலையில் வைக்கப்பட்டிருந்த வேளையிலேயே ஜனாதிபதி சந்திரிகாவின் பாரிஸ் பயணமும் இடம்பெற்றிருந்தது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயமாக அவரது ஃபிரெஞ்சுப் பயணம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்பயணம்கூட 'நவம்பர் மாத நடுக்க'த்தின் வெளிப்பாடாகவே அமைந்திருந்ததென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

தமது சொந்தப் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே ஜனாதிபதி பாரிஸ் சென்றிருந்தார் எனவும் விமர்சகர்கள் விமர்சித்திருத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் வாரம் கொண்டாடப்படும் காலப்பகுதியே நவம்பர் மாதமாகும். இம்மாதத்தின் 26ந் திகதியே எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்ததினமுமாகும். இத்தடவை எல்.ரி.ரி.ஈ. தலைவர் தமது 42வது வயதைப் பூர்த்தி செய்திருந்தார்.

யாழ் குடாநாட்டை எல்.ரி.ரி.ஈ. அமைப்பு தனது பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருந்தபோது மாவீரர்வாரம் கோலாகலமாகவே கொண்டாடப்பட்டிருந்தது. அத்துடன் எல்.ரி.ரி.ஈ. தலைவர் மாவீரர் தினத்தையண்டி வரும் தமது பிறந்த தினத்தில் விசேட செய்தியொன்றையும் வெளியிடுவது வழக்கம். இச்செய்தி எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதாகவே இருக்கும்.

இத்தடவையும் திரு.பிரபாகரன் தமது மாவீரர் தினச் செய்தியை கடந்த 26ம் திகதி வெளியிட்டிருந்தார். வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம், முல்லைத்தீவு மற்றும் கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாவீரர் வாரம் கொண்டாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

திரு.பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியில் இத்தடவை தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்கள் பல எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் அரசியல் நிலைப்பாட்டைப் புலப்படுத்துவதாகவுமிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மைக்காலங்களில் பல்வேறு பேட்டிகளையும் வழங்கியிருந்தார். அப்பேட்டிகளில் எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுக்கள், அரசியல் தீர்வு ஆகியன குறித்தும் அவர் பல கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இருந்தபோதிலும் அப்பேட்டிகள் வெளியானதையடுத்து எல்.ரி.ரி.ஈ. தலைவரின் நிலைப்பாடு உடனுக்குடன் வெளிவந்திருக்கவில்லை.

அதனால் இத்தடவை எல்.ரி.ரி.ஈ. தலைவரின் செய்தியில் அவ்வியக்கத்தின் தற்போதைய நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினரும் அரசியல் பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும். எல்.ரி.ரி.ஈ.யினருடனான இணக்கத்தின் மூலமாகவே ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவர முடியும், என்ற கருத்துக் கண்ணோட்டங்களைக் கொண்டவர்கள் திரு.பிரபாகரனின் இத்தடவை மாவீரர்தினச் செய்தியை நன்கு அலசி ஆராய வேண்டியது அவசியமானதாகின்றது.

இன்றைய ஆட்சியாளர்கள் குறித்து எல்.ரி.ரி.ஈ. இயக்கம் கொண்டுள்ள நிலைப்பாடு சந்திரிகா ஆட்சியாளரின் பலம், பலவீனங்கள் மற்றும் பௌத்த பேரினவாதிகளின் அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள், இராணுவ அணுகுமுறைகள் என்பவை பற்றியெல்லாம் எல்.ரி.ரி.ஈ. தலைவரின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### உடன்பட முடியாத நிலைப்பாடுகள்!



சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நாம் தயாராக இருக்கிறோம், ஆனால் சில நிபந்தனைகளுடன்!

–ஜனாதிபதி சந்திரிக்கா

சர்வதேச அழுத்தத்தை திசை திருப்பவே அரசு சமாதான சமிக்ஞை காட்டுகிறது

–பிரபாகரன்

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பிரபாகரன் கோரினால் அது தொடர்பாக பரிசீலிக்கலாம்.

–ஜனாதிபதி சந்திரிக்கா

சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பாக நாம் ஒரு வருடத்தின் முன்னரே கூறிவிட்டோம். எதிர்காலத்தில் சமாதானப்பேச்சுக்கள் நடந்தால் அது சர்வதேச மத்தியஸ்தம் முன்பாகவே நடக்கும்!

–பிரபாகரன்

புலிகள் தமது ஆயுதங்களை கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை!

–ஜனாதிபதி சந்திரிக்கா



எந்த தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய நிபந்தனையை ஏற்காது!

–பிரபாகரன்

அத்துடன் அவ்வியக்கம் எதிர்பார்க்கின்ற தீர்வு, அதற்கான அணுகுமுறைகள், பேச்சுக்களுக்கான நிபந்தனைகள் பற்றிய எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் நிலைப்பாடு என்பவை குறித்தும் பிரபாகரனின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியை ஆட்சியாளர்கள் தமது 'மேதாவித்தனம்' என்ற 'பூதக் கண்ணாடி' ஊடாக நோக்கலாகாது.

திரு.பிரபாகரன் எதனை எதிர்பார்க்கின்றார்? அவர் அரசு மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் எவை? அக்குற்றச் சாட்டுக்கள் அகற்றப்படக்கூடியவையா? அவற்றை அகற்றி ஆரோக்கியமான பேச்சுக்களுக்கு அடித்தளமிடமுடியுமா? பிரபாகரனிடமிருக்கும் சந்தேகங்கள் எவை? அச் சந்தேகங்கள் நியாயமானவையா? போன்ற பல்வேறு கேள்விகளையும் அலசி ஆராய்ந்து பதில் காண வேண்டியது ஆட்சியாளரது கடமையாகின்றது.

அரசியல் பேச்சுக்களுக்கான நிபந்தனைகள் பற்றியும் திரு.பிரபாகரன் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருப்பதுடன், அவைபற்றி இருதரப்பினரும் பேசமுடியுமெனவும் கூறியுள்ளார்.

இருசாராரும் நிபந்தனைகளிலேயே அதிகம் அழுத்தங்களைப்போட்டால் அதுவோர் கெடுபிடியாக உருமாறி பேச்சுக்களுக்குத் தடை ஏற்பட்டுவிடுமென்பது அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது.

இந்நிலையில் இருதரப்பினரும் முன்வைக்கக்கூடிய நிபந்தனைகள் பற்றிக்கூடப் பேசலாம் என திரு.பிரபாகரன் கூறியிருப்பது, பேச்சுக்கான நல்லதோர் ஆரம்பத்தில் அவரும் அதிக அக்கறை கொண்டுள்ளதையே அவதானிக்கமுடிகின்றது.

சமாதானம் பற்றி திரு.பிரபாகரன் கூறியிருப்பதாவது:- "நாம் சமாதானத்தின் விரோதிகளல்லர். சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களுமல்லர். நாம் வேண்டுவது உண்மைச் சமாதானத்தையே. எமது மக்கள் எமது மண்ணில் நிம்மதியாக, சுதந்திரமாக அந்நியத்தலையீடு இன்றி, அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வைத் தாமே தீர்மானிக்கக் கூடிய உண்மையான– கௌரவமான நிரந்தரமான சமாதான வாழ்வையே நாம் விரும்புகிறோம்."

சமாதானத்தின் அத்தியாவசியத் தன்மையை எதிர்பார்ப்போர் எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனின் மேற்குறிப்பிட்ட கருத்துக்களை எவ்விதத்திலும் புறக்கணிக்கலாகாது. ஏனெனில் சமாதானம் பற்றி அவர் கொண்டுள்ள நிலைப்பாடுகளையே அக்கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆட்சியாளர்கள் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றிக் கருத்து வெளியிடும் போதெல்லாம், ஆயுதங்களை எல்.ரி.ரி.ஈ. இயக்கம் கைவிட்டால் மட்டுமே அரசாங்கம் அதனுடன் பேசும் எனக் கூறுவதுண்டு.

ஆயுதங்களைக் கைவிட முடியாதென்பதனை எல்.ரி.ரி.ஈ. தலைவர் திரு.பிரபாகரன் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். ஒரு கெரில்லா இயக்கமொன்றின் பலம் அதன் ஆயுதப்போராட்டத்திலேயே தங்கியுள்ளது. அப்பலத்தைக் குறைத்துக் கொண்டு ஒரு கெரில்லா இயக்கம் பேச்சுக்களுக்கு ஒருபோதும் முன்வந்துவிடப் போவதில்லை. உலகில் எந்தவொரு பலம் வாய்ந்த கெரில்லா அமைப்பும் ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுக்களில் இறங்கியதாக வரலாறு இல்லை.

எனவே ஓர் ஆரோக்கியமான அரசியல் பேச்சுக்களின் மூலமாகவே ஆயுதங்களைக் கைவிடச் செய்யும் சூழ்நிலைகளை உருவாக்க முடியுமென்பதனையே திரு.பிரபாகரனின் செய்தி மூலமாக அறிய முடிகின்றது.

இறுதியாக மூன்றாந்தரப்புப் பேச்சுவார்த்தைகள் பற்றியும் திரு.பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாந்தரப்பு பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம் என்பவை பற்றியெல்லாம் திரு.பிரபாகரன், கடந்த ஆண்டில் சந்திரிகா அரசுக்கும் தமது இயக்கத்துக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைவதற்கு முன்னர் எழுதிய தமது இறுதிக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே ஒரு வருடத்துக்கு முன்னர் மூன்றாந்தரப்பு பேச்சு பற்றி தாம் குறிப்பிட்டதாகவும் ஆனால் சந்திரிகா அரசு அதனை அப்போது பொருட்படுத்தவில்லை என்பதனை திரு.பிரபாகரன் தமது இத்தடவைச் செய்தியில் மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மூன்றாந்தரப்பு மத்தியஸ்த்தமொன்று இடம்பெறும் பட்சத்தில் புலிகளிடமிருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்க முடியுமென்பதையும் பிரபாகரனின் செய்தி தெரிவிக்கின்றது.

இந்நிலையில் திரு.பிரபாகரனின் நீண்ட மாவீரர் தினச் செய்தியில் சமாதானம், மத்தியஸ்தம், அரசியல் தீர்வு போன்றவைபற்றி அவர் குறிப்பிட்டுள்ளவற்றையும், அரசதரப்பில் அவற்றுக்கான தடைக்கற்களாக அவர் காண்பவற்றையும் ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

உண்மையான, நிரந்தர சமாதானத்தில் சந்திரிகா அரசு உளப்பூர்வமான ஆர்வம் கொண்டிருந்தால் அத்தடைக்கற்களை அகற்ற முன்வரவேண்டும்.

இதன் மூலமே சமாதானத்தீர்வை நோக்கிய பாதையைப் படிப்படியாகச் சீராக்கி ஒரு சுமுகமான பயணத்தைத் தொடரமுடியும்.

# அன்று நடந்ததும் கலைஞர் இன்று சொல்வதும்!

ராஜீவ்காந்தி கொலைவழக்கு தனியாக நடந்துவருகிறது.

அதைத் தவிர ராஜீவ் படுகொலை தொடர்பாக ஜெயின் என்னும் நீதிபதியைக் கொண்ட ஆணைக்குழுவொன்று விசாரணை நடத்தி வருகிறது.

அந்த ஜெயின் ஆணைக்குழு முன்பாகத்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி தோன்றி சாட்சியளித்திருக்கிறார்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இம்முறை பதவிக்கு வந்தபின்னர் மிகுந்த ஜாக்கிரதை உணர்வுடன்தான் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நடந்துகொள்கிறார்.

சுருக்கமாகச் சொன்னால் கத்தி முனையில் கயிற்றில் நடப்பதுமாதிரி நடந்துகொள்கிறார்.

இலங்கைத் தமிழர்கள் துன்பப்படுவதை கண்டும் காணாமல் இருக்கிறார் கருணாநிதி என்றும் பெயர் வந்துவிடக்கூடாது.

மறுபடியும் கருணாநிதி புலிகளுக்கு ஆதரவளிக்கிறார் என்ற சந்தேகமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் கலைஞரின் அணுகுமுறை.

கலைஞர் முதல்வரான பின்னர் புலிகள் இயக்கத்தினர் உட்பட இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் வாழ்த்துத் தெரிவித்தன. அவரைச் சந்திக்கவும் பல வழிகளில் முயன்றன.

புலிகளை மட்டுமல்ல ஏனைய தமிழ் கட்சிகளையும் தற்போதைக்கு சந்திக்க விரும்பவில்லை என்று கலைஞர் தன் உதவியாளர்கள் மூலமாக தெளிவாகக் கூறிவிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் மட்டும் கலைஞரை ஒரு தடவை சந்தித்துவிட்டார்.

அந்தச் சந்திப்பும் சுவாரசியமானது. கலைஞர் வீட்டின் முன்பாக கூட்டத்தோடு கூட்டமாக நின்று மனுக்கொடுப்பவர்கள் போலவே சிவசிதம்பரமும் செல்ல வேண்டியிருந்தது.

வீடுதேடி வந்துவிட்டார் என்பதால் அவரை அழைத்து சில நிமிடங்கள் மட்டுமே பேசிவிட்டு அனுப்பிவிட்டார் கலைஞர். இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பான பேச்சாக அது அமையவில்லை.

வீடுதேடி வாழ்த்துச் சொல்ல வந்தவரிடம் ஒரு நாலு வார்த்தை பேசி அனுப்பிவைத்தது போலவே அச் சந்திப்பு தொடர்பாக கலைஞர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

புலிகளுடன் மட்டுமல்ல, முன்னாள் ஆயுத மேந்திய இயக்கத்தலைவர்களுடனும் கலைஞர் தன்னை இனம்காட்ட விரும்பவில்லை. மிதவாதத் தலைவர்களுடனும் உறவாட விரும்பவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில்தான் ஜெயின் கமிஷன் முன்பாகத் தோன்றி நீண்டதொரு தன்னிலை விளக்கம் கொடுத்திருக்கிறார் தமிழக முதல்வர்.

புலிகள் இயக்கத்தோடு தனக்கு ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று காண்பிப்பதில் கலைஞர் குறியாக இருப்பதையே அவரது விளக்கம் வெளிப்படுத்தியிருக்கிறது.

கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான தமிழக அரசு புலிகள் தொடர்பான சாதகமான நிலைப்பாட்டை எடுக்கப் போவதில்லை என்பதும் தெரிந்துவிட்டது.

ஜெயின் கமிஷன் முன்பாக கருணாநிதி கூறியுள்ள விளக்கங்கள் முன்பின் முரணாகவும் உள்ளன. புலிகளோடு தனக்குள்ள முரண்பாட்டைக் காண்பிப்பதற்காக தனது முன்னைய நிலைப்பாடுகளுக்கு முரணாகவும் பேசியுள்ளார்.

கலைஞரின் சாட்சியத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

* இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்பதே தி.மு.க.வின் நிலைப்பாடு. ஆனால் வை. கோபால்சாமி ஈழத்தை ஆதரித்தார்.

* சிறீசபாரத்தினம் கொலை, அமிர்தலிங்கம் கொலை போன்றவற்றால் புலிகள் மீது அனுதாபம் குறைந்து போனது. பத்மநாபா கொலையுடன் முற்றாகவே அனுதாபம் இழந்துவிட்டார்.

* இந்தியப் படை இலங்கையில் நின்றபோது தமிழ் அமைப்புக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுத்த முயன்றார். அவை தத் தமது நிலையில் உறுதியாக இருந்தமையால் அந்த முயற்சியைக் கைவிட்டார்.

* பத்மநாபா கொலை தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் நடைபெற்றன.

இவைதான் கலைஞர் சொன்ன விளக்கத்தில் முக்கியமானவை.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு



என்பது தி.மு.க.கடந்த தேர்தலில் முன்வைத்த நிலைப்பாடே தவிர, அதன் நீண்டகால நிலைப்பாடல்ல.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது அவர் புலிகளை ஆதரித்தார். அப்போது கலைஞர் கருணாநிதி ரெலோவை ஆதரித்தார். தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (ரெசோ) என்பதையும் உருவாக்கினார்.

அந்த அமைப்பின் கூட்டத்தில் தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரித்து கலைஞர் கருணாநிதி உரையாற்றியிருக்கிறார்.

தமிழ் ஈழப்போருக்கு ஆதரவு வழங்குவது தமிழர்களது கடமை என்றும் கூறியிருக்கிறார்.

சிறிசபாரத்தினம் கொல்லப்பட்டபோது கலைஞர் கருணாநிதி மனம் உருகி தனது முரசொலி பத்திரிகையில் கடிதம் எழுதியது உண்மை.

எம்.ஜி.ஆர். மரணமானபின்னர் கருணாநிதி புலிகளை ஆதரித்தார். 'இப்போது ஏன் புலிகளை ஆதரிக்கிறீர்கள்?' என்ற கேள்விக்கு கலைஞர் சொன்ன பதில்; "விரல் கண்ணைக் குத்துகிறது என்பதற்காக, அந்த விரலையே வெட்டி எறிந்துவிடுகிறோமா? அப்படித்தான் இதுவும்."

இந்தியப் படையோடு மட்டுமல்லாமல் ஏனைய இயக்கங்களுடனும் புலிகள் மோதிக் கொண்டிருந்த போதுதான் புலிகளை கலைஞர் ஆதரித்துப் பேசினார்.

தமிழ்நாட்டில் இயக்கத் தலைவர்கள் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தபோது, வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆட்சியை புலிகளிடம் கொடுத்துவிடுமாறு சொன்னார் கலைஞர். அதனால்தான் ஏனைய இயக்கங்கள் கலைஞர் மீது நம்பிக்கை இழந்து பின்வாங்கிக் கொண்டன.

பத்மநாபாவை தமிழ்நாட்டில் வைத்து புலிகள் கொலை செய்வார்கள் என்று கலைஞர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் கொலை நடந்த பின்னர் புலிகள் இயக்கத்தினர் தப்பிச்செல்வதை தடைசெய்ய முடியாதளவுக்கு வாய்மூல உத்தரவுகள் பொலிசாருக்கு வழங்கப்பட்டன. சென்னையில் இருந்து ஒரு காரில் திருச்சிவரை எந்த தடையும் இல்லாமல் புலிகள் இயக்கத்தினர் செல்ல முடிந்தது.

கலைஞரது ஆட்சி கலைக்கப்பட்டு ராஜீவ் கொலை விசாரணை நடைபெற்ற போதுதான் பத்மநாபா கொலை தொடர்பான துப்புத் துலங்கியது. பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்ட முக்கிய நபரான 'குண்டுச் சாந்தன்' போன்றோர் இனம் காணப்பட்டனர்.

எனவே கலைஞர் இப்போது கூறியுள்ள விளக்கம், அவரது தற்போதைய நிலைப்பாட்டுக்கு சாதகம் தேடும் முயற்சியாகவே அமைந்துள்ளது.

தனது உள்நாட்டு அரசியலுக்கு புலிகள் இடையூறு என்று கலைஞர் திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டார் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது.

## தருவது 21 ரசிகன்

**இதுவரை**

பூலான் கிராமத்தில் கொள்ளைக் கோஷ்டி புகுந்து கொள்ளையிடுகிறது. பூலான்தான் அவர்களைத் தூண்டிவிட்டதாக பூலானின் பெரியப்பா வீட்டார் பொலிஸில் புகார் செய்கிறார்கள். பூலான் பொலிஸில் சரணடைகிறாள். அங்கு மேலதிகாரியால் சித்திரவதை செய்யப்படுகிறாள்.

**இனி...**

# கொள்ளை ராணி

## — பூலான்தேவி —

“துப்பாக்கியைத் தருகிறாயா?” என்று கேட்டதும் அந்தப் பொலிஸ்காரன் சிரித்து விட்டுப் போய்விட்டான்.

அன்றிரவு தூக்கமே வரவில்லை. சுற்றிநின்று பொலிஸ்காரர்கள் அடித்த போது வலி தெரியவில்லை. இரவுதான் உடம்பெல்லாம் புண்ணாக வலித்தது.

கண்களை இறுக்கி மூடிக்கொண்டு தூங்க நினைத்தால், அந்த மேலதிகாரியின் நரிமுகம்தான் தெரிந்தது.

அம்மாவின் நினைப்பும், விம்மி விம்மி அழுத அப்பாவின் முகமும் மாறி மாறி மனக்கண் முன்பாக வந்துபோயின.

காலையில் ஒரு பொலிஸ்காரன் வந்து கூண்டருகே நின்று, “ஏய் குட்டி! ஐயா உன்னைக் கூட்டிவரச் சொன்னார். எழும்படி!” என்றான்.

நான் அப்படியே அமர்ந்திருக்க, அவன் கூண்டின் கதவைத் திறந்து உள்ளே வந்தான்.

“பயப்படாதே, உன்னை வீட்டுக்குத்தான் அனுப்பப் போகிறார்கள். உன் அப்பாவும் அம்மாவும் வந்திருக்கிறார்கள்!” என்றான்.

நம்பமுடியாமல் நிமிர்ந்து பார்த்தேன். “ம்.ம். எழும்பு, புறப்படு!” எழுந்தபோது முழங்கால்களுக்குள் வலித்தது. பசிக் களையால் எழுந்து நிற்கமுடியாமல் கால்கள் சோர்வாக இருந்தன.

“வீட்டுக்குப் போவது சந்தோசம் தானே?” என்று கேட்டுக்கொண்டே அந்தப் பொலிஸ்காரன் கதவுப்பக்கமாகப் பார்த்தான்.

சட்டென்று என்னை கட்டிப்பிடித்துக் கொண்டான்.

என்னால் எதிர்க்கவும் முடியவில்லை. எரிந்து பேசவும் முடியவில்லை. உடம்பில் தெம்புதான் இல்லையே!

பெண் பிணமாகக் கிடப்பினும் புணரும் நாய்கள்! சே.... அருவருப்பாக இருந்தது.


யாரோ வரும் பூட்ஸ் கால் சத்தம் கேட்டதும் என்னைவிட்டு விலகிவிட்டான். “வா” என்று முன்னால் நடந்தான்.

மேலதிகாரியின் அறையில் அப்பாவும் அம்மாவும் கூனிக்குறுகியபடி நின்றுகொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் மேலதிகாரி முகம் சுளித்தான். அவன் முன்பாக ஒருவர் அமர்ந்திருந்தார்.

“இங்கேபார்! நீ செய்த காரியத்துக்கு சிறைக்குத்தான் போகவேண்டும். இந்த மனுசனின் முகத்துக்காக விடுகிறேன்?” என்றான் மேலதிகாரி.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மேலதிகாரி முன்பாக அமர்ந்திருந்தவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் என்னைத் திரும்பிப்பார்த்து கனிவாகப் புன்னகைத்தார். நானும் பதிலுக்குப் புன்னகைத்திருக்கலாம். நான் இருந்த மனநிலையில் புன்னகைக்க முடியவில்லை.



என்னை விடுதலை செய்யும் பத்திரத்தில்-அவர்கள் காட்டிய இடத்தில் மையூசிய பெருவிரலால் அடையாளமிட்டேன்.

பொலிஸ் நிலையத்தைவிட்டு வெளியே வந்ததும் அம்மா என்னைக் கட்டிக் கொண்டு அழத் தொடங்கிவிட்டாள்.

நான் மட்டும் அழவில்லை. அழுது புரள்வதால் என்ன பலன்? என்னை விடுதலை செய்யக் காரணமாக இருந்த அந்த மனிதரும் எம்முடன் வந்தார். என்னைப் பார்த்து பரிவாகச் சிரித்துவிட்டு அப்பாவிடம் சொல்லிக்கொண்டு விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

அம்மாவின் சிநேகிதி ஒருத்திதான் அவரை அறிமுகம் செய்துவைத்தாளாம். அவரது பெயர் தேவிகுலாம். பாட்டெழுதுவதும், பாடுவதும்தான் தொழில். பொலிஸ் மேலதிகாரியை அவருக்குத் தெரியுமாம்.

தேவிகுலாம் மூலமாக மேலதிகாரிக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். பணத்தைக் கண்டதும் பல்லிளித்த மேலதிகாரி என்னை விடுதலை செய்துவிட்டான். இதெல்லாம் வீட்டில் அம்மா சொன்னதில் இருந்து நான் தெரிந்து கொண்ட விபரங்கள்.

“பணம் யார் கொடுத்தார்கள் அம்மா?” என்று கேட்டேன்.

“அந்தப் புண்ணியவான் பூல்சிங்தான் கொடுத்தார்!” என்றாள் அம்மா. முன்னர் என்னைப் பிணையெடுக்க அவர் கொடுத்த கடன் இன்னமும் தீரவில்லை. மீண்டும் அவரிடமே கடன்பட்டிருக்கிறார்கள்.

என்னைப் பெற்ற கடனை நான் எப்போது தீர்க்கப்போகிறேன்? எனக்காக பூல்சிங்கிடம் பெற்ற கடனை இவர்கள் எப்போது தீர்க்கப்போகிறார்கள்? வருஷம் முழுக்க உடல்தேய உழைத்தாலும் கடனைத் தீர்க்கும் அளவுக்கு அப்பாவால் பணம் சேர்க்க முடியாதே.

நான் மட்டுமல்ல, என் ஒருத்தியால்



—பூலான—

என் குடும்பமே நட்ட நடுக்காட்டில் சிக்கித் தவிக்கிறதே!

நினைக்க நினைக்க அந்தரமாக இருந்தது. என்னை விரட்டிவிரட்டிக் கடிக்கும் நாய்கள் மீது கோபம் கோபமாக வந்தது.

கிராமத்தில் என்னைக் கண்டதும் பெண்கள் முகம் சுளித்துக்கொண்டு ஒதுங்கிப் போனார்கள்.

“ஏனடி என்னைக் கண்டதும் பயந்து ஓடுகிறாய்? பேசமாட்டியாடி?” என்று என் சினேகிதி ஒருத்தியை துரத்திப் பிடித்துக் கேட்டேன்.

“உன்னோடு பேசினால் வீட்டில் அடிப்பார்களடி பூலான்.”

“நான் என்னடி பண்ணினேன்?”

“உனக்கு கொள்ளைக் கோஷ்டியுடன் தொடர்பு இருக்கிறதாம். உன்னோடு பேசினால் என்னையும் பொலிசார் வந்து பிடித்துக் கொண்டு போய்விடுவார்களாம்!” சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள்.

தனிமரமாய் நின்றேன். நான் ஒரு பாவமும் செய்ததில்லை. நான்பட்ட கொடுமைகளுக்காக நான்தான் மனிதர்களைக் கண்டு பயந்து ஓடவேண்டும்; ஒளிய வேண்டும். ஆனால் என்னைக் கண்டு இவர்கள் ஓடுகிறார்களே; நான் இவர்களை நினைத்துப் பரிதாபப்படுவதா, என்னை நினைத்துப் பரிதாபப்படுவதா?

“சிலிப்பிக்கொண்டு போறாள் பாரடி. வெட்கம் கெட்டதுகள்!” என்னைக் கடந்து போன பெண்கள் ஒருநாள் சொல்லிக் கொண்டு போனார்கள்.

கேட்டும் கேட்காததுபோலச் சென்று விட்டேன்.

“நேற்றிரவு எங்கே போனாளோ? யார் யாரைக்கண்டாளோ? திமிரடி திமிர்.” மீண்டும் ஒருநாள் சொல்லிக் கொண்டு போனார்கள்.

இப்படியே விட்டுக்கொண்டே இருந்தால் இன்னொரு நாள் என் தோளில் ஏறிநின்றே கேலி செய்வார்கள்.

நின்று திரும்பிப் பார்த்து முறைத்தேன். “எடியே!” என்று நான் கத்திய கத்தலில் அத்தனை பேரும் நின்று திரும்பிப்பார்த்தார்கள்.

“உங்கள் புருசன்மாரையும் அனுப்பி வையுங்கடி நாய்களே!” சொல்லிக்கொண்டே குனிந்து என் செருப்பைக் கழற்றிக்கொண்டு நிமிர்ந்து பார்த்தபோது, அத்தனைபேரும் கல்லைக் கண்ட நாய்கள் போல ஓடிக் கொண்டிருந்தார்கள்.

அதன் பின்னர் கிராமத்துப் பெண்கள் யாரும் என்னோடு வம்புத்தும்புக்கு வந்ததே கிடையாது.

அவர்கள் ஒதுங்கிப் போவதைப் பார்க்க கவலையாக இருந்தாலும், தொல்லையாவது இல்லாமல் போனது நிம்மதியாக இருந்தது.

சிறிதளவுகூட நான் நிம்மதியாக இருந்தால்தான் என் விதிக்குப் பிடிக்காதே!

என் வீட்டு முன்வளவைகூட்டிப் பெருக்கிக்கொண்டிருந்தேன். யாரோ ஒருவன் என்வீட்டை நோக்கி திருட்டு முழி முழித்தபடி வந்தான். அவனை நான் அதற்கு முன் கண்டதில்லை.

என் அருகே வந்ததும்; “பூலான் வீடு எங்கே இருக்கிறது?” என்று கேட்டான்.

அவனது திருட்டு முழியும், அவன் விசாரித்த விதமும் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

“அடுத்த வீட்டில்தான் இருக்கிறாள். ஆனால் இப்போது வெளியே போய் விட்டாளே! ஏன் கேட்கிறாய்?” என்று கேட்டேன்.

சற்றும் தடுமாறாமல் நான் பேசிய பொய் எனக்கே வியப்பாக இருந்தது.

“அதை அவளிடம்தான் சொல்ல வேண்டும்!” என்றான் அவன். என்னைவிட அவனுக்கு வயது குறைவாகத்தான் இருக்க வேண்டும். என்னுடன் பேசவே வெட்கப்படுகிறான் போலத் தெரிந்தது.

“நான் அவள் சிநேகிதிதான். நீ எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லலாம். நான் அவள் வந்ததும் சொல்லிவிடுகிறேன்.”

பெண்கள் மாதிரித் தலைகுனிந்து கொண்டு நின்றவன், என்னை நிமிர்ந்து பார்த்தான். நான் ஒரு சிரிப்புச் சிரித்தேன். அவனும் வெட்கப்பட்டுக் கொண்டு சிரித்தான். கள்ளன்! வெட்கமாம் வெட்கம், எங்கெல்லாம் அவன் கண்கள் போகின்றன என்று எனக்குத் தெரியும்.

இவனிடம் ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது. அதை எப்படியாவது அறிந்துவிட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

“தூரத்தில் இருந்தா வருகிறாய்? மோர் குடிக்கிறாயா?” என்று கேட்டுக்கொண்டே முந்தானையைச் சரி செய்வதுபோல ஒரு புறமாக ஒதுக்கிவிட்டு பின்னர் இழுத்துச் சீர்செய்தேன்.

பல்லெல்லாம் தெரிய இளித்தான். “என்னை நம்பிச் சொல்ல மாட்டாயா?” என்று இரகசியம் பேசுவதுபோலக் கேட்டேன்.

“அது...வந்து”

“சொல்லு. சொல்லு”

“அவளை....அவளை....”

“யாரை?”

“பூலானை...பூலானை....”

“பூலானை...?”

“பூலானைக் கடத்திக் கொண்டு போக கொள்ளைக் கோஷ்டி வரப்போகிறது. இரவோடு இரவாகத் தூக்கிக் கொண்டு போகப் போகிறார்களாம்!”

எனக்குப் ‘பகீர்’ என்றது.

“உன...உனக்கு யார் சொன்னது?”

“அவர்கள் மலையில் இருந்து பேசிய போது மறைந்திருந்து கேட்டேன். யாருடைய கொள்ளைக் கோஷ்டி தெரியுமா?”

“தெரியாது. நீதான் சொல்லவேண்டும்!”

“விக்கிரம்சிங் மல்லாவின் கோஷ்டி. விக்கிரம்சிங் மல்லா பொல்லாதவன். போக்கிரி. பாவம் பூலான். அவள் வந்தால் விஷயத்தைச் சொல்லி எங்காவது ஓடித் தப்பச் சொல்லு, என்ன?”

“ம்...ம்...சொல்கிறேன். கண்டிப்பாய் சொல்கிறேன். நீ மோர் குடிக்கிறாயா?”

“வேண்டாம். வேறு ஒரு நாள் வருகிறேன்.” சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு சென்றுவிட்டான்.

அவன் பொய் சொல்லவில்லை என்பது அவன் பேசிய முறையில் இருந்து தெரிந்தது.

யார் அது விக்கிரம்சிங் மல்லா? இவன் சொன்னது போலக் கெட்டவனாக இருப்பானா? அல்லது நல்லவனாக இருப்பானா? யாரிடம் கேட்கலாம்?

நல்லவனாக இருந்தால் எனக்கு அவன் உதவி தேவைதான்.

அன்று முழுக்க அதே யோசனைதான். வீட்டில் யாரிடமும் நான் மூச்சே விடவில்லை.

மறுநாள் என்பெயருக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாக தபால்காரர் தந்துவிட்டுப் போனார்.

எனக்கு கடிதம் போட யார் இருக்கிறார்கள்? கடிதத்தை உடைத்துப் பார்த்தேன்.

முதன் முதலாக அப்போதுதான் நாலெழுத்துக்கூட படிக்கத் தெரியாத என் நிலையை நினைத்து வருந்தினேன்.

கடிதத்தை படித்துப் பார்க்க வேண்டுமானால் என் தம்பி சிவநாராயணன் பள்ளிக்கூடத்திலிருந்து வரவேண்டும்.

கடிதத்தில் உள்ள விபரீதம் தெரியாமல் தம்பிக்காக பொறுமையில்லாமல் காத்திருந்தேன்.

**(தொடர்ந்து வரும்)**

---


## நீ இங்கு நலமே! நான் அங்கு நலமா?

# டயானாவின் காதல் டாக்டர்

ஒரு சட்டையை மாற்றும் நேரத்தைவிட குறைவான நேரத்தில் தனது காதலர்களை மாற்றிக் கொள்கிறார் முன்னாள் இளவரசி டயானா.

டயானாவின் இதயத்தை இப்போது ஆக்கிரமித்திருப்பவர் ஒரு பிரபல டாக்டர். ஹஸ்நத்கான் என்பதுதான் அவரது பெயர். வயது 36.

பாகிஸ்தான்தான் ஹஸ்நத்கானின் பூர்வீகம். இங்கிலாந்தில் பிரபலமான இதய நோய் நிபுணரான ஹஸ்நத்கான் இப்போது டயானாவின் இதயத்துக்கு இதமாகிவிட்டார்.




கான்-டயானா சந்திப்பு எப்படி ஆரம்பமானது என்பதைப் பற்றியும் சுவையான தகவல்கள் வெளியாகியுள்ளன.

டயானாவின் நண்பரான டாக்டர் ஒருவருக்கு கானின் ஆஸ்பத்திரியில் இருதய சத்திர சிகிச்சை நடந்தது.

அந்த டாக்டரைப் பார்த்து நலம் விசாரிக்கச் சென்றார் டயானா. அப்போதுதான் கான் அறிமுகமானார்.

உயரமான உருவமும், மிடுக்கும், யாரையும் கவர்ந்திழுக்கும் பேச்சும் கொண்ட கானை முதல் சந்திப்பிலேயே தனது இதயத்தில் வாங்கிவைத்துக் கொண்டார் டயானா.

டாக்டரை நலம் விசாரிக்கும் சாக்கில் அடிக்கடி கானையும் சந்தித்தார் டயானா. கானும் டயானாவை விரும்பத் தொடங்கினார். காதல் உறுதியானது.



ஆஸ்பத்திரி அருகிலேயே கானின் பங்களா இருந்தது தான் இருவருக்கும் மேலும் வசதியாகிப் போனது. அடிக்கடி தனிமையில், இனிமையான சந்திப்புக்கள் தொடர்ந்தன. தனிமையில் கண்ட இனிமை ஒருவரையொருவர் மறக்கமுடியாமல் செய்து விட்டது.

“நீ இங்கு நலம், நான் அங்கு நலமா?” என்று விசாரிக்காத குறைதான். இந்த இரகசியக் காதலை இங்கிலாந்துப் பத்திரிகைகள் மோப்பம் பிடித்து வெளியிட்டுவிட்டன.

“கானுடன் காதலா? சேச்சே அப்படி ஒன்றும் கிடையாது. டயானாவுக்கு தெரிந்த டாக்டர்களில் அவரும் ஒருவர்” என்று சொல்கிறது டயானாவின் வட்டாரம்.

இங்கிலாந்துப் பத்திரிகைகள் அதனை நம்பத் தயாராக இல்லை.

கானின் பெற்றோரை டயானா சந்தித்துப் பேசிவிட்டார். “கானை மணக்க வேண்டுமானால் மதம் மாறவேண்டும்!” என்று பெற்றோர் நிபந்தனை விதித்து விட்டனர். டயானா ஒரு முடிவுக்கு வர முடியாமல் இருக்கிறார். கானை மறப்பதா? மதம் மாறுவதா? முடிவு டயானாவின் கைகளில்தான் இருக்கிறது என்ற செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் இங்கிலாந்து அழகி பெர்சியை காதலித்து மணந்தபோது, பெர்சி மதம் மாறினார். தனது பெயரையும் ஜெமீமா என்று மாற்றிக்கொண்டார்.

இம்ரான்கான்-ஜெமீமா வழியில் ஹஸ்நத்கான்-டயானா ஜோடி செல்லுமா? அல்லது டயானா-கானுக்கும் ‘குட்பை’ சொல்லிவிடுவாரா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

---

# குலை நடுங்க வைத்த ‘ராகிங்’

## மருத்துவ மாணவனின் வெறித்தனம்

‘ராகிங்’ பற்றி நாமெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ‘ராகிங்’ என்ற போர்வையில் வக்கிரமான சில சம்பவங்களும் நடப்பதால் ராகிங் கூடாது என்று கண்டனங்களும் எழுந்துவருகின்றன.

‘ராகிங்’ என்றாலே குலை நடுங்குமளவுக்கு தமிழ்நாட்டில் உள்ள சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு சம்பவம் நடந்துள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தரின் மகன் நாவரசு. படிப்பில் கில்லாடி. சாதுவான மாணவன் என்று பெயரெடுத்தவன்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவத்துறையில் கல்வி கற்கச் சென்றான் நாவரசு. அங்குதான் ஜான் டேவிட் என்னும் மாணவன் உருவில் காலன் காத்திருந்தான்.

ஜான் டேவிட்டுக்கு 19 வயது. சகல விதமான தப்பான காரியங்களும் அவனுக்கு அத்துப்படி. அதுதவிர ஓரினச் சேர்க்கையில் நாட்டம் கொண்டவன்.



—நாவரசு—

எலிகளை துண்டு துண்டாக வெட்டி, அந்த இரத்தத்தை தனது கைகளில் பூசிக் கொள்வது அவனது பொழுது போக்குகளில் ஒன்று.

ஜான் டேவிட் ஒரு மாணவியைக் காதலித்தான். அவளிடம் சென்று “ஐ லவ் யூ” சொல்லியிருக்கிறான். அந்த மாணவியோ பதில் எதுவும் சொல்லாமல் போய்விட்டாள். ஜான் டேவிட்டுக்கு வந்ததே கோபம். அந்த மாணவியின் பெயரை ஒரு அட்டையில் எழுதி, அதை ஒரு நாயின் கழுத்தில் தொங்கவிட்டான். பின்னர் அந்த நாயை அடித்தே கொன்று இரசித்தான்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே ஒரு மாணவனைக் கடத்திப் போய் பலாத்காரம் செய்திருக்கிறான் படுபாவி.



—ஜான் டேவிட்—

அவனது கண்ணில்தான் பட்டுத்தொலைத்தான் அப்பாவியான நாவரசு. அவனை ராகிங் செய்து கொடுமைப்படுத்தினான் ஜான் டேவிட்.

கொடுமையின் உச்சகட்டமாக தனது அறைக்கு நாவரசுவை இழுத்துச் சென்று, உடைகளைக் களையுமாறு மிரட்டியிருக்கிறான். நாவரசு மறுக்கவே அடித்து உதைத்திருக்கிறான்.

பயத்தில் நடுங்கிய நாவரசு உடைகளைக் களைந்துபோட, அவனை தப்பான காரியத்துக்கு அழைத்திருக்கிறான்.

நாவரசுவை பலாத்காரம் செய்ய முற்பட்டபோது, நாவரசுவின் உயிர்நிலை நசுக்கப்பட்டு உயிர் போய்விட்டது.

அதன்பின்னர்தான் ஜான் டேவிட்டின் உச்சகட்ட வெறித்தனம் அரங்கேறியது.

நாவரசுவின் தலையை வெட்டி தனியாக எடுத்துவைத்துவிட்டு, உடலை நான்கு ஐந்து துண்டுகளாக வெட்டினான். மருத்துவத் துறை மாணவன் என்பதால் உடலை எப்படி வெட்டுவது என்னும் நுணுக்கமும் தெரிந்திருந்தது.

தலையை மட்டும் பல்கலைக்கழக விடுதிக்கு அருகில் இருந்த குளத்தில் வீசிவிட்டான்.

துண்டாக வெட்டப்பட்ட உடலை ஒரு மூட்டையாகக் கட்டி, சென்னை செல்லும் பஸ்ஸில் போட்டுவிட்டு வந்து விட்டான்.

சென்னையில் பஸ்ஸில் அநாதரவாகக் கிடந்த மூட்டையைத் திறந்து பார்த்தபோது துண்டான உடல் கிடந்தது.

பொலிசாருக்கு அதிர்ச்சி. கொலை செய்யப்பட்டது யார்? தலை எங்கே? என்று அறியமுடியாமல் திணறிக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையே நாவரசுவை சில நாட்களாகக் காணவில்லை என்று பொலிஸில் புகார் செய்யப்பட்டது. பொலிசார் பல்கலைக மாணவர்களை விசாரித்தனர்.

ஜான் டேவிட்டும் விசாரிக்கப்பட்டான். நாவரசு எங்கே என்று துப்புக் கிடைக்கவேயில்லை.

பல்கலைக்கழக விடுதியின் சுற்றுப் புறத்தில் தேடுதல் நடத்திய போது நாவரசுவின் பாடப் புத்தகங்களும், செருப்புகளும் சிக்கின. பொலிசாருக்கு சந்தேகம் வலுத்தது.

அருகில் உள்ள குளத்து நீரை மோட்டார் மூலம் வெளியேற்றினார்கள்.

குளத்தின் சேற்றில் நாவரசுவின் தலைமட்டும் சிக்கிக் கிடந்தது.

அப்போதுதான் பஸ் ஒன்றில் தலை இல்லாமல் கிடந்த உடல் நாவரசுவின் உடல்தான் என்று தெரியவந்தது.

பொலிசார் விசாரணையைத் தீவிரப்படுத்த ஜான் டேவிட் தலைமறைவாகி விட்டான். கிடைத்த தகவல்கள் ஜான் டேவிட்மீது சந்தேகத்தை அதிகப்படுத்தியதால் பொலிசார் அவனை சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினார்கள்.

இத்தனைக்கும் ஜான் டேவிட்டின் தாயும், தந்தையும் டாக்டர்கள். தங்கள் மகனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள்.

“ஜான் டேவிட் விசாரணைக்குத் தேவை” என்று நீதிபதியிடம் கேட்டனர் பொலிசார். நீதிபதி விசாரிக்க உத்தரவிட்டார்.

பொலிசாரின் விசேஷமான கவனிப்பில் முழு உண்மைகளையும் ஒப்புக்கொண்டான் ஜான் டேவிட். இப்போது வழக்குத் தாக்கலாகியுள்ளது.

ஒரு வெறிபிடித்த மாணவனின் செயலால் முழு மாணவர் சமூகமும் வெட்கித் தலை குனிந்து நிற்கிறது.

ஜான் டேவிட்டின் தாயார் மட்டும், “என்பிள்ளை நிரபராதி” என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

# இரவல் இதயம்

பிறந்து ஒரேயொரு மணி நேரத்தில் ஒரு குழந்தைக்கு இருதயமாற்று சிகிச்சை நடைபெற்று சாதனை நிலைநாட்டப்பட்டது. அமெரிக்காவிலுள்ள மியாமியில், ஜாக்சன் சிறுவர் மருத்துவமனையில் டாக்டர் ரிச்சாட் பெரிமான் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

ஃபோட் லௌண்டர் டேல் என்ற இடத்தில் வசிக்கும் 28 வயதான அல்பேட்டா? 34வது வாரக் கர்ப்பிணியாக இருக்கும் போது மருத்துவர்கள் 'ஸ்கேன்' செய்து பார்த்தனர்.

பிறக்கப்போகும் குழந்தையின் இருதயத்தின் இடது புறம் இரத்தத்தை உள்வாங்கி வெளியேற்றும் சக்தியை இழந்திருக்கிறது என்பதனை மருத்துவர்கள் கண்டனர்.

இதனால் குழந்தை உயிருடன் பிறந்தாலும் அதிக நாட்கள் வாழமுடியாது. சத்திர சிகிச்சை செய்தாலும்கூட ஏதாவது அங்கம் பாதிப்படையும் என்றார்கள்.

தந்தை ஸ்ரீஃபன் பைலும் தாயார் அல்பேட்டாவும் தங்கள் முதல் குழந்தையை இழந்துவிடப்போகிறோமே என்று பெரிதும் துன்பப்பட்டனர். பொறுமையுடன் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

நம்பிக்கை வீண்போகவில்லை. எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. அல்பேட்டா குழந்தைப் பேறுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையில், அவர் மகள் செயின்னே பிறந்த அதே நேரத்தில் மற்றுமொரு குழந்தை பிறந்தவுடன் இறந்துவிட்டது.

இறந்த குழந்தையின் பெற்றாரின் அனுமதியுடன் அக்குழந்தையின் இருதயத்தை எடுத்து செயின்னேயின் உடம்பில் பொருத்திவிட்டார்கள்.

ஆறுமணிநேரம் இடம்பெற்ற சத்திரசிகிச்சையின்பின் குழந்தை செயின்னி உயிர் தப்பியது. அதன் பெற்றார் ஸ்ரீஃபன் பைலும் அல்பேட்டா பைலும் குழந்தையைப் பார்த்து மகிழ்கிறார்கள்.

உலகிலேயே மிகவும் வயது குறைந்த ஒருவருக்கு நடைபெற்ற இருதயமாற்று சிகிச்சை இதுதான்.





# அதிகார ஆட்டம்

"நடத்தாதே, நடத்தாதே, அழகிப் போட்டி நடத்தாதே" என்று பெங்களூரில் பெண்கள் அமைப்புக்கள் போராட்டம் நடத்தினவல்லவா?

"அடி போங்கடி, நீங்களும், உங்கள் போராட்டமும்" என்று ஒரு பெண்ணின் தலைமுடியை கொத்தாகப் பிடித்து இழுக்கிறார் பாருங்கள், அவரும் ஒரு பெண்தான். பெங்களூரில் பெண் பொலிசார் சேலையோடுதான் கடமை செய்கிறார்கள். என்ன, கைகலப்பு வந்தால்தான் சண்டைபோட கொஞ்சம் சிரமமாக இருக்கும். விஜயசாந்தி ஸ்ரைலில் கால், கையை தூக்கி சண்டை போட முடியாது. அதுதான் வசதியாக தலைமுடியைப் பிடித்திருக்கிறாரோ?

அதிகாரம் கையில் இருந்தால் ஆணென்ன, பெண்ணென்ன, எல்லோருக்கும் தர்பார் நடத்திப்பார்க்கும் ஆசை வந்து தொலைக்கிறது.

## தகவல் பெட்டி

# அங்கும் ஒரு இடம்பெயர்வு

இடம் பெயர்வுகளின் அவலங்கள் நம்மவர்களுக்கும் பழக்கமானதுதான்.

படத்தில் லொறி ஒன்றில் தஞ்சமாகி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மக்கள் தப்பி ஓடும் காட்சியைக் காண்கிறீர்கள். ஆப்கானிஸ்தானின் தலைநகரம் காபூல். தலிபன் இயக்கத்தினரும், முன்னாள் அரச படையினரும் நீயா நானா? என்று பயங்கரமாகப் போரிட்டுக்கொண்டிருக்க, நம்மை விட்டால் போதும் என்று மக்கள் தலைநகரைவிட்டு தப்பி ஓடிக்கொண்டிருந்தனர்.

கண்ணில்பட்ட வாகனங்களில் ஆண்களும், பெண்களும் தொற்றிக்கொண்டு மரணத்தின் பிடியிலிருந்து ஓடிய காட்சிகளில் ஒன்றுதான் இது.

கடந்தவருடம் யாழ் நகரில் இருந்து கால் நடையாகவே மாபெரும் இடம்பெயர்வு நடைபெற்றது. போரும் அவலமும் கூடப்பிறந்த இரட்டைக் குழந்தைகள். எங்கும் அதுதான் பொது விதி.






# கலக்குது பார் இவள் ஸ்டைலு

ரோட்டோரங்களில் நின்று பெண்களைப் பார்த்து மார்க் போடுவது சில ஜொள்ளுப்பிரியர்களின் பொழுதுபோக்கு. உதவாக்கரைகள், ரோட்டோர ரோமியோக்கள், விடுகாலிகள் என்றெல்லாம் அவர்களுக்கு வசைகள் பரிசாகக் கிடைப்பதுண்டு. சில சமயங்களில் விசேஷ போனஸாக தர்ம அடிகளும் கொடுக்கப்படுவதுண்டு.

ஆனால், அழகிப் போட்டிகளில் ஸ்டைலாக வந்து அங்கம் இது தங்கம் என்று பளிச்சிடவைக்கும் அழகிகளுக்கு 'மார்க்' போடுபவர்கள் நடுவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கென்ன? கௌரவமாக ஜொள்விடலாம். கொடுத்துவைத்தவர்கள் என்று ரோட்டோர ரோமியோக்கள் பொறாமைப் படுவதில் கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.


அழகிப் போட்டியில் பாகம் பாகமாக மார்க் போடப்படுகிறது. படத்தில் பதிவாகியுள்ள காட்சி கால் அழகிப் போட்டியில் 'கிளிக்' செய்யப்பட்டது. பெங்களூரில் நடந்த அழகிப்போட்டியில் கால் அழகிகளை தெரிவு செய்யும் போட்டியில் 'ஆளைப் பாராதே காலைப் பார்' என்று நடந்துசெல்கிறார் ஒரு அழகி. எத்தனை மார்க் போட்டிருப்பார்கள் கௌரவ நடுவர்கள்? செம ஜொள்! அட! கண்றாவி என்கிறீர்களா? காலம் மாறிப் போச்சுங்க!

# பந்தாடும் காளை

ஒரு பந்தைக் கூட ஒழுங்காக 'கட்ச்' பிடிக்க முடியாமல் கோட்டை விடுகிறவர்கள் இருக்கிறார்கள். இவரோ ஐந்து பந்துகளை வைத்துக் கொண்டு வித்தை காட்டுகிறார்.

ஓடிக் கொண்டிருக்கும்போது ஐந்து பந்துகளையும் ஒவ்வொன்றாக மேல் நோக்கி எறிந்து, அதனை ஒவ்வொன்றாக கீழே விழாமல் ஏந்தி, மீண்டும் மேலே எறிந்து, மீண்டும் ஏந்தி..... இவ்வாறாக 100 மீட்டர் தூரத்தை ஓடிக்கடக்க வேண்டும். உங்களால் முடியுமா? முயன்றுதான் பாருங்களேன்.

பந்தாடியபடியே 100 மீட்டர் தூரத்தை ஓடிமுடிக்க இவர் எடுத்துக்கொண்ட நேரம் 13.8 செக்கன். ஒரு முறைகூட பந்து கீழே விழக்கூடாது. இவரது பெயர்; ஒவென் மோர்ஸ். அமெரிக்காவைச் சேர்ந்தவர். பந்தாடும் கலையில் வல்லவன்.



# சினி விசிட்

## 'காதல் மாளிகை'

'காதல் கோட்டை' படத்தின் வெற்றிக்குப் பின்னர் அதையொட்டிய பெயர்களில் பலபடங்களுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது தெரியும் அல்லவா.

இதோ மற்றொரு படம். சூட்டப்பட்டுள்ள பெயர்: 'காதல் மாளிகை' கதாநாயகி கல்கத்தாவைச் சேர்ந்த புதுமுகம். கதாநாயகனாகவும் புதுமுகம் ஒருவரே நடிக்க இருக்கிறார்.

பக்திப் படங்களை இயக்கிப் புகழ் பெற்ற ஏ.பி.நாகராஜனிடம் உதவியாளராக பணிபுரிந்த ஏ.பி.என். துரைராஜ் தான் 'காதல் மாளிகை' இயக்குநர்.

'வசந்தமாளிகை' படத்தைப்போல 'காதல் மாளிகை' படமும் பேசப் படும் என்கிறார் துரைராஜ்.



பார்த்திபன்-ரக்ஷனா
படம்: வாய்மையே வெல்லும்

## ஒரு ரசிகையின் காதல் கடிதம்
## "மனதில் ஒரு இடம் வேண்டும்"

நடிகர் விஜய் வீட்டில் ஒரே கடிதக் குவியல். ரசிகைகளின் கடிதங்கள்தான் அதிகம். அதிலும் பெரும்பாலானவை காதல் கடிதங்கள்.

தனக்கு வந்த காதல் கடிதங்களை பெயர், முகவரியை மட்டும் பாதி மறைத்துவிட்டு தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு கொடுத்துள்ளார் விஜய். வாராவாரம் பிரசுரமாகும் அக்கடிதங்களில் உதாரணத்திற்கு ஒரு கடிதம்.

**"டியர் விஜய் அவர்களுக்கு-**

உங்கள் அன்புக்குரிய தூர்க்கா எழுதுவது. நலம், நலமறிய ஆவல்.

விஜய் என்மேல் கோபமா? நான்வேறு உங்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதி சங்கடத்தை ஏற்படுத்தி வருகிறேன்.

உங்கள் மனதை வேதனைப்படுத்தி, என் மனதையும் வேதனைப் படுத்தியது போதும். இனியும் உங்களை நான் கட்டாயப்படுத்த மாட்டேன். காதல் என்பது அவரவர் மனதில் இருந்து உருவாக வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன்.

உங்கள் மனதில் என்றாவது ஒருநாள் என்னைப் பற்றித் தோன்றி, என்னை ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு- காதல், காதல், காதல் இல்லையேல் சாதல் என்ற முடிவுடன் முற்றுப் புள்ளி வைத்து விட்டு, உங்கள் மனதில் ஒரு இடம்பிடிக்க விரும்புகிறேன்.

வருகிற 20ம் திகதி முதல் உங்களை உயிர் நண்பனாக ஏற்றுக் கொள்கிறேன்.

நண்பனா, காதலனா? இந்தப் போட்டியில் வெற்றிபெற என்னை நீங்கள் முதலில் ஆசீர்வாதம் செய்ய வேண்டும். நான் வெற்றிபெற வேண்டும் என்று நீங்களும் இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

நீங்கள் எதையும் மறக்கக்கூடாது. உங்களுக்கு கஷ்டம் ஏற்பட்டாலும், அல்லது அதிக சந்தோஷம் ஏற்பட்டாலும் அதில் எனக்கும் பங்கு தரவேண்டும்.

மற்றும் உங்களுக்கு பிடித்த கலர்? பிடித்த இலைகளுக்கு அவசியம் பதில் தரவேண்டும்.

மறக்காமல் உங்கள் பிறந்த தேதியையும், நட்சத்திரமும் பொய் சொல்லாமல் எழுதி அனுப்பவும்.

உடம்பை நன்றாகக் கவனித்துக்கொள்ளுங்கள் ... டம் என்று உடம்பைப் பட்டினி போட்டு விடாதீர்...

உங்கள் காதலியாகவோ, நண்பியாகவோ எப்படி ... னும் சரி, உங்கள் இதயத்தில் ஒரு இடம் வேண்டும் ... யாக நுழைந்து காதலியாக மாறிவிடுவேன் என்ற ந... எனக்கு இருக்கிறது.

I LIKE YOU.

என்றும் உங்கள் தூர்க்கா.

## இரட்டிப்பு பூரிப்பு

உலக அழகுராணிப் போட்டியில் 'அந்த ... கடலோரம்' பாட்டுக்கு லண்டன் அழகிகளோடு ... பிரபுதேவா. பலத்த கைதட்டல், பலத்த பாராட்டு... பயங்கர சந்தோசத்தில் இருக்கிறார்.

இந்திப் படமொன்றிலும் நடிக்கப் போகிறார் பிர... அவருக்கு ஜோடியாக ... போவது முன்னாள் உல... ஐஸ்வர்யாராய். இரட்டிப்... சியில் இருக்கிறார் பிர... "இடை நடுவே ஏற்பட்... வில் இருந்து மீண்டு... என்கிறார்.



## 'பம்பாய் காதலி'

தெலுங்கில் ரம்பா கவர்ச்சியில் கலக்கல் பண்ணிய படங்களை தேடிப்பிடித்து தூசிதட்டி தமிழில் மொழிமாற்றத் தொடங்கிவிட்டார்கள்.

அவ்வாறு வெளியாகும் படங்களில் ஒன்றுக்கு 'பம்பாய் காதலி' என்று பெயர் சூட்டியுள்ளனர். ஸ்ரீதேவியின் சின்னம்மா மகளான மகேஸ்வரியின் காதலன் சக்கரவர்த்திதான் கதாநாயகன். மற்றும் வாணிபுஷ்பா, சுதாகர் ஆகியோரும் நடிக்கின்றனர்.

ரம்பாவை சற்று விபரமாகவே அறியக்கூடிய வகையில் கவர்ச்சி விருந்து படைக்கப்பட்டிருக்கிறதாம்.

## விநோதமான பெயர்

தமிழ்ப்படவுலகில் படங்களுக்கு பெயர் சூட்டுவதற்கு கடுமையான பெயர் பஞ்சம் நிலவுகிறது. அதனால் விநோதமான பெயர்கள் எல்லாம் சூட்டப்பட்டு வருகின்றன.

'சிறை', 'மனக் கணக்கு', 'பத்தினிப் பெண்' போன்ற படங்களை இயக்கியவர் இயக்குநர் ஆர்.சி. சக்தி. அவர் இயக்கும் புதிய படத்திற்கு சூட்டியுள்ள பெயர்: இத்தனை நாள் எங்கிருந்தாய்! ஒரு பாடலில் வரும் வரிகளைத்தான் படத்தின் பெயராக சூட்டியிருக்கிறார்கள்.

'இத்தனை நாள் எங்கிருந்தாய்' படத்தில் பாபு கணேஷ்-ஊர்வசி ஜோடியாக நடிக்கின்றனர். இசை: தேவா.

## வசதி...

சென்னையில் மகாபலிபுரம் கடற்கரையில் பங்களா ஒன்றை வாங்கியுள்ளார் நக்மா. தினமும் அங்கு தங்கமாட்டார்.

கதை விவாதம், முக்கிய புள்ளிகளைச் சந்திப்பது இ... வைத்துக்கொள்கிறார்.

நெருக்குப்புறமான பங்களாக்களை விலைக்கு வாங்... வழிகளில் உதவியாக ... முன்னணி நடிகைகளு... பங்களாக்களை வாங்...

## சம்மதம்...

தான் நடிக்கும்... கவர்ச்சியான உடை... காதலரின் அனுமதி...

'கோபாலா கோ...மான உடைகளில் ... உடைகளைப் பார்வை... ராம் சுந்தர்.

இதனால் படப்பி... குஷ்பு வீட்டுக்கு அவ... அனுப்பிவைக்க வேண்...

## தேவதிக்கு வி...

இப்போதெல்லாம்... அதிக அக்கறை காட்... " படங்களில் நடிக்க... லையோ?" என்று ... படியில்லை" என்று ...

"ஒரே மாதிரியான... வருகின்றன என்பது... படங்களில் இதுவரை... டேன். ஒரே விதமான... களில் நடிக்க விரும்... இதுவரை ஏற்றிராத ... என்னை அடையாள... டக்கூடிய பாத்திர... கிடைத்தால் நிச்சயம்... பேன்" என்கிறார்.



ராமராஜன்-சுகன்யா
படம்: கோபுரதீபம்

## காதோடு சொல்லுகிறோம்

தமிழ்நாட்டில் முன்னாள் அரசாங்கத்தில் சில பேரங்களைப் படியவைக்க பயன்படுத்தப்பட்ட நடிகைகளின் பட்டியல் சிக்கியிருக்கிறதாம். வெளிநாட்டுத் தொழிலதிபர்களை வசியம் செய்வதற்காக நடிகைகள் சிலர் பயன்படுத்தப்பட்டனராம். தற்போது ஓய்வுபெற்றுவிட்ட கவர்ச்சி நடிகை ஒருவரும் நன்கு உதவிக்கரமாக இருந்தாராம். இரகசியமாக விசாரிக்கப்பட்டபோது பல தகவல்களை ஒப்புவித்துவிட்டதால் அவர்மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவைத்திருக்கிறார்கள்.

நக்மான நடிகையின் ஒரு தங்கை நடிக்க ஆரம்பித்துவிட்டார் 'கா' நடிகரின் சிபாரிசு மூலமாக வாய்ப்புப் பெற்றுக் கொடுத்தார் நக்மான நடிகை. இப்போது மற்றொரு தங்கைக்கும் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க தீவிரமாக முயன்றுவருகிறார். அதற்காக பிரபல இந்திப் பட தயாரிப்பாளர்கள் சிலரை விசேஷமாக கவனித்திருக்கிறாராம். கவனிக்கப்பட்டவர்கள் "கவலையே படாதே கண்ணு வாய்ப்புக் கொடுக்கிறோம்" என்று வாக்குறுதி வழங்கியிருக்கிறார்களாம். தங்கைகளை முன்னேற்றும் தியாகத் திருவிளக்கு அல்லது மெழுகுவர்த்தி என்று பட்டம் கொடுக்கலாம்.

தற்போது வெளியாகியுள்ள இந்திய சுதந்திரப் போராட்ட வீரரின் பெயர்கொண்ட படத்தின் நாயகி அவர். மொடலிங் செய்து பிழைத்தவருக்கு சினிமா உலகம் பிடித்துவிட்டதாம். அவரது தாராளமான பழகும்முறை காரணமாக மொடலிங் உலகிலும் நிறைய நண்பர்கள் இருந்தார்களாம். இப்போது கோடம்பாக்கத்திலும் பசையுள்ள பல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்களாம். ஒட்டிக் கொண்டு கோடம்பாக்கத்திலேயே குடியேறினாலும் ஆச்சரியமில்லை.

'ரம்ப' நடிகை மீது தாறுமாறான கோபத்தில் இருக்கிறார் 'மீன்' நடிகை. சூப்பர்ஸ்டாருடன் ஜோடிசேரும் பாக்கியத்தை கொடுத்துவிட்டது ஒரு காரணம். தெலுங்கில் 'மீன்' நடிகைக்கு வேண்டப்பட்ட சில தயாரிப்பாளர்கள் 'ரம்ப' நடிகையின் வலையில் விழுந்துவிட்டது மற்றொரு காரணம். 'மீன்' நடிகையின் கோபம் போதாது என்று, அவரது தாய்க்குலமும் 'ரம்ப' நடிகையை கிட்டத்தட்ட கெட்டவார்த்தைகளுக்கு சடான வார்த்தைகளால் வசைபாடுகிறாராம்.

**'கௌ'** நடிகை பொறுத்துப் பொறுத்து பார்த்துவிட்டு முடிவு செய்துவிட்டார். அமெரிக்காவுக்கு சொயிங் என்று பறக்கப்போகிறார். அவர் பிரபலமாக இருந்தபோது நட்பான தொழிலதிபர் ஒருவர்தான் விசேஷ விருந்தினராக வந்து தங்குமாறு அன்பான அழைப்பு விடுத்துள்ளாராம். அங்கு என் சகோதரர் இருக்கிறார். தங்கியிருந்து படிக்கப்போகிறேன் என்கிறார் 'கௌ' நடிகை. என்னதான் படிக்கபோகிறாரோ?

## கனவு நாயகன் அப்பாஸ்

'காதல் தேசம்' படத்தின் பின்னர் அப்பாஸ் அலை வீசுகிறது. அதனால் பாதிப்பு அஜித்குமாருக்கு.

சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றிலும் அப்பாஸை கல்லூரிப் பெண்களின் கனவு நாயகனாகச் சித்தரித்திருக்கிறார்கள்.

அஜித்குமார் மீது மொய்த்துக் கொண்டிருந்த ரசிகைகள் அப்பாஸ் பக்கமும் திரும்பிவிட்டதில் அஜித்குமாருக்கு லேசான வருத்தம்தான்.

"அப்பாஸ் வருகையால் தனக்குப் பாதிப்பில்லை" என்று துணிந்து சொல்கிறார் விஜய். விஜய், சுவாதி ஜோடியாக நடித்துவரும் 'செல்வா' படம் ஒன்னே முக்கால் கோடி ரூபாய்க்கு விலை போயிருக்கிறதாம்.

தமிழில் சரியாக ஒரு நாலு வார்த்தை கூட பேசத்தெரியாதவர் அப்பாஸ். ஆனாலும் அதிஷ்டக் காற்று அவரை எங்கேயோ தூக்கி வைத்து விட்டது.

## தேங்காய் உடைத்தார் ரஜினி

ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் அருணாச்சலம் படத்திற்காக ரஜினி காந்த் மீண்டும் மேப்-அப் போட்டு நடித்திருக்கிறார். ரஜினி இறுதியாக நடித்த படம் 'முத்து'.

அதன்பின்னர் கடந்த மாதம் நவம்பர் 21ம் திகதிதான் ரஜினி மேக்-அப் போட்டு நடித்தார்.

"பிள்ளையாரப்பா இனிமே போற காரியம் நல்ல படியாய் நடக்கணும்" என்று கூறியபடி ரஜினி தேங்காய் உடைக்கும் காட்சிதான் முதன் முதலாகப் படமாக்கப்பட்டது.

பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது ரஜினியின் செண்டிமெண்ட். 'அண்ணாமலை', 'வீரா', 'பாட்ஷா', 'முத்து' போன்ற படங்களிலும் ரஜினி பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கும் காட்சியோடுதான் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகின.

"இத்தனை நாளும் மொட்டையடித்து தாடியுடன் இருந்தேன். எனக்கே என்னை மீண்டும் பார்க்கும் ஆசை வந்துவிட்டது. இப்போது பழைய ரஜினியாகி விட்டேன்." என்று படப்பிடிப்பில் நிருபர்களிடம் ஜோக் அடித்தார் ரஜினி.

இயக்குநர் சி. சுந்தர் ரஜினியின் காலைத் தொட்டு வணங்கிவிட்டு படப்பிடிப்பு வேலையைத் தொடங்கினார். குஷ்பு நேரில் சென்று ரஜினிக்கும், சுந்தருக்கும் வாழ்த்துக் கூறினார்.

ரஜினியுடன் ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், ராஜா, வி.கே.ராமசாமி, மனோரமா, ஜனகராஜ், வடிவுக்கரசி, அஞ்சு அரவிந்த் ஆகியோர் முதல் நாள் காட்சியில் இணைந்து நடித்தனர்.

இப்போதே இந்திய மதிப்பில் 18 கோடி ரூபாய்க்கு 'அருணாச்சலம்' விற்பனையாகியுள்ளது. மேலும் பல ஏரியாக்களுக்கும் விற்பனையாகி முடியும்போது மேலும் பல கோடிகள் குவியப் போகின்றன. படப்பிடிப்பு முடிவடைய முன்னரே படத்தைவாங்கு வதற்கு பலத்த போட்டி.

## பாதிக்கப்பட்ட ஜோடி

கோபுரதீபம் படத்தில் ஜோடியாக நடிக்கும் ராமராஜனும், சுகன்யாவும் ஒரேவிதமான பாதிப்புக்கு உள்ளானவர்கள். ஜெயலலிதாவுக்கு ஆதரவாக இருந்தமையால் ராமராஜன்மீது கோபத்தில் இருக்கிறது தி.மு.க.ஆட்சி. முன்னாள் அமைச்சர் கண்ணப்பனுடன் நெருக்கமாக இருந்தமையால் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பவர் சுகன்யா.

இருவரும் தமது பாதிப்புக்களை மனம்விட்டுப் பேசிக் கொள்கிறார்களாம். "அரசியலின் பக்கமே தற்போதைக்கு தலைவைத்துப் படுக்கமாட்டேன்," என்கிறார் ராமராஜன்.

## ரஞ்சிதா...

தெலுங்கு ... வுலகுக்கு செ... நடிகைகள் அங்... ஹீரோவையோ, ... நரையோ கெட்டி... பிடித்துக் கொ... வழக்கம்.

தெலுங்குப் ... மொன்றில் நடி... சென்ற ரஞ்சித... அதற்கு விதிவிலக்... தெலுங்குப் பட... ஹீரோ ஜெகபதிபா... மிக வேகமாக நெ... விட்டாராம். ரஞ்சி... காக விழுந்து வி... சிபாரிசு செய்கிற... ஜெகபதிபாபு.

## வளருகிறது கூட்டாளி

கார்த்திக் நடித்துவரும் படம் 'கூட்டாளி' வீதிகளில் குத்துச்சண்டை, கோழிச்சண்டை போடுபவராக நடிக்கிறார் கார்த்திக்.

ஈஸ்வரிராவ், ஊர்வசி ஆகியோர் கார்த்திக்கின் ஜோடிகளாக நடிக்கின்றனர்.

கஸ்கான், வடிவேலு, ராணி, பாண்டு, ஆர். சுந்தர்ராஜன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

'உள்ளத்தை அள்ளித்தா' பட வெற்றியின் பின்னர் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில்தான் கார்த்திக் நடித்து வருகிறார். 'கூட்டாளி' படத்திலும் கார்த்திக், கவுண்டமணி கூட்டணியின் நகைச்சுவைக்குத்தான் முதலிடம். படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது.



பிரசாந்த்-கவுண்டமணி
படம்: மன்னவா

### சினிமா விமர்சனம்

## சேனாதிபதி பார்க்கலாம்

எந்தப் பாத்திரமானாலும் சோபிக்கக்கூடிய நடிகர்களில் ஒருவர் சத்யராஜ். கம்பீரம் கலந்த அசத்தலான வேடம் கிடைத்துவிட்டால் புகுந்துவிளையாடி விடுவார். 'சேனாதிபதி' படத்திலும் சத்யராஜ் அசத்தல்ராஜதான்.

படம் ஆரம்பித்ததில் இருந்து முடிவுவரை தொய்வில்லாமல் செல்கிறது. 'வேதம் புதிது' படத்தில் சத்யராஜ் நடித்த பாலுத்தேவர் பாத்திரத்தை இடைக்கிடையே நினைவூட்டுகிறார். சேனாதிபதியாக வரும் சத்யராஜ் மூடநம்பிக்கை, சாதிவெறி என்பவற்றை நயமாகச் சாடுகிறார்.

சண்டைக் காட்சிகளில் ஆவேசம். சுகன்யாவோடு சரசத்தில் கிளுகிளுப்பு. தம்பி சத்யராஜுக்காக விஜயகுமாரிடம் பெண்கேட்டுப்போய் ஏமாற்றத்துடன் திரும்பும்போது சோகம் என்று நடிப்பு ராஜாங்கமே நடத்தியிருக்கிறார் சத்யராஜ்.

சுவுந்தர்யா துடுக்கான பெண்ணாகவும், மனம் திருந்தியபின்னர் சாதுப் பெண்ணாகவும் திருப்தியான நடிப்பு. சுகன்யாவை அண்ணன் சத்யராஜுக்கு ஜோடி சேர்த்துவிட்டார்கள்.

படத்தின் கலகலப்புக்கு கவுண்டமணி செந்தில் கூட்டணியும் உண்டு. விஜயகுமார் கச்சிதம். பொன்னம்பலமும், மணிவண்ணனும்தான் வில்லன்கள்.

புதிய இயக்குநர் எம். ரத்னகுமார் ஏமாற்றவில்லை. தேவாவின் இசையில் துள்ளல் தெரிகிறது.

தீபாவளிக்கு வெளியான படங்களில் பார்க்கக்கூடிய படங்களில் ஒன்று சேனாதிபதி. விரும்பினால் வீடியோவில் பார்க்கலாம்.

## ஊர்வசிக்கு பிரசாந்த் உபதேசம்

'வைகாசி பொறந்தாச்சு' படம் மூலம் அறிமுகமாகி இளம் ஹீரோக்களின் பட்டியலில் இருப்பவர் பிரசாந்த். சம்பத்திய பிரசாந்த் படங்கள் சரியாகப் போகவில்லை. அதனால் அடுத்து வரப்போகும் 'மன்னவா' படத்தை எதிர்பார்க்கிறார்.

தீபாவளிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட 'மன்னவா' தாமதமாகிவிட்டது. தீபாவளிப் பந்தயத்தில் பத்தோடு பதினொன்றாக மாட்டிக்கொள்ளக் கூடாது என்ற ஜாக்கிரதையோ தெரியவில்லை. 'மன்னவா' படத்தின் பின்னர், ஷங்கர் இயக்கும் 'ஜீன்ஸ்' படத்தைத்தான் மலையாக நம்பியிருக்கிறார் பிரசாந்த்.

காதல் பற்றி பிரசாந்த் என்ன நினைக்கிறார்?

"காதலிக்கிறதுக்கு வயது முக்கியமில்லை. மனதுதான் முக்கியம். காந்தியைவிட கஸ்தூரிபாய்க்கு வயசு அதிகம். அவங்க கல்யாணம் பண்ணி சந்தோஷமாக குடும்பம் நடத்தலையா? டெண்டுல்கரைவிட அவர் மனைவிக்கு வயது அதிகம். லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கலையா? திரும்பவும் சொல்றேன் லவ் பண்றதுக்கு மனது முக்கியமே தவிர வயது அல்ல" இது பிரசாந்தின் விளக்கமல்ல. மன்னவா படத்தில் ஊர்வசியிடம் பிரசாந்த் பேசும் வசனம்.

## மினி சினி

- விஜயகாந்தை வைத்து 'தமிழ்செல்வன்' படத்தைத் தயாரித்தவர் சத்யராஜின் மனேஜர் ராமநாதன். தற்போது சத்யராஜ் நடிக்கும் 'வள்ளல்' படத்தைத் தயாரித்து வருகிறார். இது முடிந்ததும் பிரபு நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
- அண்மையில் படங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் ஃபிலிம் சேம்பரில் 'கவலைப்படாதே சகோதரா', 'ரஜினி வி லவ் யூ', 'சென்னை', 'கோடம்பாக்கம்' போன்ற பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ரவளி தயாரிக்க, அவரது சகோதரன் கதாநாயகனாக நடிக்கும் 'காதல் யுத்தம்' படத்தை இயக்குபவர் சூர்யா. இவர் உமாசங்கர் என்ற பெயரில் 'மண்ணைத் தொட்டுக் கும்பிடணும்' என்ற படத்தை இயக்கியவர்.
- மணிரத்னத்தின் 'ஆனந்தம்' (பெயர் மாற்றப்படலாம்) படத்தில் நடித்து வரும் மோகன்லால் இது முடிவடைந்ததும் புதிய தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இந்தப்படத்தை 'மகாபிரபு' வெங்கடேசனின் உதவியாளர் பாலாஜி என்பவர் இயக்கவுள்ளார்.
- கலைப்புலி எஸ். தாணு தயாரிக்கும் 'வி.ஐ.பி.' படத்தில் அப்பாஸுக்கு ஜோடியாக நடித்து வரும் ரம்பா, தெலுங்கில் அப்பாஸ் கதாநாயகனாக நடிக்கும் படத்திலும் கதாநாயகியாக நடிக்கிறார்.
- வில்லனாக இருந்த சரத்குமாரை 'பாலைவனப் பறவைகள்' மூலம் கதாநாயகனாக்கியவர் செந்தில்நாதன். 'ரகசிய பொலிஸ்' படத்திற்குப் பின்னர் சரத்குமார் தயாரிக்கும் புதிய படத்தை செந்தில்நாதன் இயக்கவுள்ளார்.
- நடிகர்கள் பலர் இயக்குநர்களாகி வருகின்றனர். இந்த வரிசையில் புதிதாக சேரவிருப்பவர் ராம்கி. அடுத்த ஆண்டு இவர் ஒரு படத்தை இயக்கவுள்ளார். அதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் நடந்துவருகின்றன.
- தமிழில் 'நினைவும் என்னைக் கவனி', 'மன்னவா', 'பகவதசிங்' ஆகிய படங்களில் நடித்துவரும் சங்கவி, தெலுங்கில் நடித்த 'பொப்பிலிதுரை', 'நாயுடுகாரு குடும்பம்' இரண்டும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இரண்டு தெலுங்குப் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.
- அமிதாப்பச்சன் தமிழில் தயாரிக்கும் 'உல்லாசம்' படத்திற்கு இசையமைத்து வருகிறார் கார்த்திக்ராஜா. இவரது இசையமைப்பில் தந்தை இளையராஜாவும், தங்கை பவதாரிணியும் இணைந்து 'யாரோ யார் யாரோ...' என்ற பாடலைப் பாடியுள்ளனர்.
- ராம்கி-குஷ்பு-ஊர்வசி நடித்து வெற்றி பெற்ற 'இரட்டை ரோஜா' படத்தை கன்னடத்தில் 'கங்கா ஜமுனா' என்ற பெயரில் தயாரிக்கவுள்ளனர். இதில் சிவராஜ்குமார் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

## ஒருநாள் சம்பளம் ஒரு இலட்சம்

ஒரு படத்தில் நடிக்க ஐம்பது லட்சம் சம்பளம் கேட்ட கவுண்டமணியை ஓவர் டேக் செய்துவிட்டார் மணிவண்ணன்.

மணிவண்ணனின் கைவசம் நாற்பது படங்களுக்கு மேல் இருக்கின்றன. ஒரு படத்தில் ஒரு நாள் மட்டும் நடித்துக் கொடுக்க மணிவண்ணன் கேட்கும் சம்பளம் ஒரு இலட்சம். அதனால் மணிவண்ணன் ...சம்பந்தப்பட்ட காட்சிகளை குறைந்த நாட் ...களுக்குள் வேகமாக சூட் பண்ணி... ...ளித் தள்ளுகிறார் ...ளாம்.



ரோஜா
படம்: வள்ளல்



சங்கவி
விஜயகாந்த்-விஜய்
படம்: மன்னவா

பிரபு-சாக்ஷி
படம்: மாப்பிள்ளைக் கவுண்டர்

## "எப்படியும் நடிக்கலாம்"

"சினிமாவுக்கு எல்லோரும் வர்றதே நிறைய சம்பாதிக்கணும், கார், பங்களா வாங்கணும் என்பதற்காகத்தான். யாராவது சமுதாய சேவை செய்ய சினிமாவுக்கு வருவாங்களா?

அதிகமாகத் தர்றோம், கொஞ்சம் கவர்ச்சியாக நடித்துக் கொடுங்கன்னு கேட்டா செய்றோம்.

நாங்க ஆடுறதாலே சமுதாயம் கெட்டுப்போச்சு, இளைஞர்கள் கெட்டுப் போகிறார்கள் என்று சொல்லி தியேட்டர்ல போய் போஸ்டர் கிழிக்கறது, போராட்டம் நடத்துறது, இதெல்லாம் வேண்டா." இப்படி பட்டுப்பட்டென்று உண்மையைச் சொல்லியிருப்பவர் விசித்ரா.

அதிக பணம் கொடுத்தால் எப்படி வேண்டுமானாலும் நடிப்பேன் என்று விசித்ரா பேட்டி கொடுத்தும்கூட யாரும் அவரைச் சரியாக உபயோகப்படுத்தியதாகத் தெரியவில்லை.

## விஜயகாந்த்தின் தாராளம்

ஏழைக்கு உதவவேண்டும் என்ற இரக்க சிந்தனை உள்ளவர் விஜயகாந்த்.

"இருக்கிறவன் இல்லாதவனுக்கு உதவணும். ஏழை எளிய மக்களுக்கு உதவுறதைப்போல சந்தோஷமான ஒரு விஷயம் எதுவும் இல்லை." என்று கூறும் விஜயகாந்த், எம்.ஜி.ஆர். காது கேளாதவர்கள் பள்ளிக்கு மட்டும் 50 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்திருக்கிறார்.

விஜயகாந்த் நடித்து தீபாவளி வெளியீடாக வந்துள்ள படம் அலெக்சாண்டர். விஜயகாந்தின் சண்டைக்காட்சிகள் தவிர குறிப்பிட்டுச் சொல்லும்படியாக படம் அமையவில்லை என்று அவரது ரசிகர்களுக்கு வருத்தமாம். அதனால் அடுத்தடுத்த படங்களில் கதை, விவாதங்களில் நேரடியாகவே தலையிடப்போகிறாராம்.

## நல்ல பெயர் எடுத்தவர்

புதிதாக வந்துள்ள நடிகைகளில் அனுசரித்துப் போகக்கூடிய நடிகை என்று பெயரெடுத்துள்ளவர் நிவேதிதா. 'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுனின் ஜோடியாக நடிக்கிறார். படப்பிடிப்புக்காக சுவிஸர்லாந்து சென்றபோது ஆக்ஷன் கிங் மனம் கோணாதபடி நடந்து நல்ல பெயரெடுத்துள்ளார் நிவேதிதா.

விஜயசாந்தி நடிப்பதாக இருந்து விலகிக்கொண்டதால், நிவேதிதாவுக்கு ஆக்ஷன் கிங்குடன் ஜோடி சேரும் பாக்கியம் கிட்டியது.

## மன்மதன் ப்ளஸ் மோகினி

குருதிப்புனலுக்கு பின்னர் பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்யும் படம், 'மன்மதன் ப்ளஸ் மோகினி'. கதாநாயகனாக நடிப்பவர் பிரபுதேவா. ஐஸ்வர்யாராயை கதாநாயகியாக நடிக்க வைக்க முடிவு செய்துள்ளனர். ஐஸ்வர்யாராய்தான் மோகினி.

இந்தியிலும் பிரபுதேவாவுடன் நடிக்க இருக்கிறார் ஐஸ்வர்யாராய்.

'மன்மதன் ப்ளஸ் மோகினி' படத்தை தயாரிப்பவர் மணிரத்னத்தின் உதவியாளர் கிருஷ்ணா. இயக்குநரும் அவர்தான்.

ஏற்கனவே பிரபுதேவா நடிக்கும் ஒரு படத்திற்கு 'மன்மதன்' என்று பெயரிட்டிருந்தனர். பின்னர் வி.ஐ.பி. என்று பெயர் மாற்றிவிட்டார்கள்.

## உறவுகளுக்கும் ஓர் இடம்

பிரபல நடிகைகள் சிலர் தங்கள் சகோதர சகோதரிகளை நடிக்க வைத்து அழகு பார்த்து வருகின்றனர். குஷ்புவின் தம்பியும் படத்தில் நடிக்கிறார். ரவளியின் தம்பி, சங்கீதாவின் தம்பி, ரம்பாவின் தம்பி ஆகியோரும் படங்களில் நடித்து வருகின்றனர். நக்மாவின் சகோதரியும் நடிக்கிறார்.

இதையெல்லாம் அறிந்த விவிதா தனது தம்பிக்கும் நடிக்கும் வாய்ப்புத்தேடி தயாரிப்பாளர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கிறார்.

## சங்கவி சபதம்

சில நடிகைகள் சேலை அணிந்து நடித்தால் ரசிகர்கள் டென்ஷனாகி விடுகிறார்களாம். சங்கவியும் அவர்களில் ஒருவர். தனது ரசிகர்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்து வைத்திருக்கிறார் சங்கவி. அதனால் சேலை கட்டவே மாட்டேன் என்று சபதம் செய்துள்ளாராம். யாரும் பயப்படவேண்டாம். நவீன உடைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் அணிந்து கொண்டுதான் நடிப்பார்.

# முகத்திற்கு முகம் கண்ணாடி

## அகம் எப்படி முகம் அப்படி!

இன்றைய விஞ்ஞான யுகத்தில், உங்களை அழகுபடுத்திக் காட்ட அழகு நிலையங்கள், கிளப்புகள், ஆரோக்கிய நிலையங்கள் பல இருக்கின்றன. முடி அலங்கார நிபுணர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் போன்றவர்களும் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கின்றார்கள்.

நீங்கள் அழகாக இருக்கின்றீர்கள் என்று நீங்கள் உணர்ந்தால், உங்கள் மனதில் ஓர் ஒழுங்கு ஏற்படுவது இயற்கை, அழகு என்பது வில் போன்று வளைந்த புருவம், அழகுப் போட்டியில் கலந்து கொள்ளத் தேவையான உடலமைப்பு, இடுப்பைத் தாண்டி நிற்கும் கூந்தல் இவற்றில் மட்டும் இல்லை.



உலகில் பிறந்த எவருமே, அழகில் நூறு சதவிகித முழுமை பெற்றுவிடுவதில்லை. அழகு, நாம் இந்த உலகத்தை இனிமையுடையதாக ஆக்கிக் கொள்ளும் பொருட்டு நாம் நமக்குப் போட்டுக் கொள்ளும் முகமூடி.

அழகும் ஆரோக்கியமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. சுய ஒழுக்கம், சுய கட்டுப்பாடு இவை ஆரோக்கிய வாழ்வை அளிக்கின்றன. முறையான உடற்பயிற்சி, சரிவிகித உணவு இல்வாழ்விற்குச் சிறந்த அடிப்படையாக அமைந்து விளங்குகின்றன. இத்தகைய வாழ்வை மேற்கொள்ளும் பொழுது, உங்களுக்கு இயற்கையாக ஏற்படும் தன்னம்பிக்கை, உங்களுடைய மனதில் எழும் உற்சாகம் ஆகியவற்றால் ஏற்படும் மகிழ்ச்சியே அலாதி.

'முகத்திற்கு முகம் கண்ணாடி' என்பது பழமொழி. அடுத்தவர்களை நீங்கள் உபசரிக்கும் பண்பு, பாசத்தோடு பழகும் விதம்- இவை உங்கள் மனதின் அழகை அதிகப்படுத்துகின்றன. மனதின் அழகு முகத்தில் பிரதிபலிக்கின்றது. அழகுபடுத்திக் கொள்வதன் மூலம் உங்களுக்கு இருக்கும் அடிப்படை அழகைச் சிறப்பாக்கிக் காட்டமுடியும். இதற்கென அழகு சாதனங்களுக்காக நீங்கள் அதிகம் செலவழிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அழகு சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வது முக்கியமில்லை. எந்த முறையில் உபயோகப் படுத்துகிறீர்கள் என்பது தான் முக்கியம்.

சிறந்த முறையில் அழகுபடுத்திக் கொள்வதன் மூலம், நீங்கள் உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம், அடுத்தவர்களின் நன்மதிப்பையும், பாராட்டையும் சுலபமாகப் பெறமுடியும். அழகு படுத்திக் கொள்வதற்கென்று ஒவ்வொரு நாளும் சிறிது நேரத்தைக் கண்டிப்பாக ஒதுக்க வேண்டும். இப்படி நீங்கள் செய்து வந்தால், எந்த வயதிலும் நீங்கள் அழகாக இருப்பதை உங்களால் உணர முடியும்.

உங்களுடைய முடி அலங்காரம், முக அலங்காரம், உடை அலங்காரம் உங்களுடைய அழகை மேலும் அழகு படுத்திக்காட்டுகின்றன. உங்களுடைய சுய அறிவு அந்த அழகைச் சரியான முறையில் உலகிற்கு வெளிப்படுத்துகின்றது. மிகச் சாதாரண முக அமைப்பை உடையவர்கள் பலர் தங்களுடைய சிறந்த முயற்சிகளினால் அழகாகத் தோற்றமளிக்கிறார்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

தங்களுடைய அழகில் முழுத்திருப்தி அடைபவர்கள் இந்த உலகத்தை மிக மகிழ்ச்சியோடு பார்க்கிறார்கள். உங்களிடம் இருக்கும் குறைகளைப் பெரிதுபடுத்தாமல், அவை உங்களை மற்றவர்களிடமிருந்து ஏதோ ஒரு வகையில் தனிமைப்படுத்திக் காட்டுகின்றது என நம்புங்கள்.

எடுத்துக்காட்டாக, உயரமாக இருக்கும் ஒரு பெண், தான் ஒட்டகச்சிவிங்கி போல உயரமாக இருக்கிறோம் என்ற நினைப்பில் உடலைக் குறிக்கிக் கூன் போடத் தேவையில்லை. முகத்தில் தெரியும் மச்சம், பெரிதாகத் தோன்றும் பல், இவற்றிற்கெல்லாம் ஏதோ ஒரு தனித்தன்மை இருப்பதாக உணருங்கள்.

நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் அழகாகத்தான் இருக்கிறோம். நம்முடைய முகத்தின் ஒவ்வொரு பகுதியும் அழகாக இருக்கிறதா என்று யாரும் கவனிப்பது இல்லை. ஒட்டு மொத்தமாக நாம் அழகாக இருக்கிறோமா என்றுதான் பார்க்கிறார்கள். உங்கள் முகத்தில் உள்ள குறைகளை

## அழகுக்கு மனம் அழகு



ஏதோ ஒரு முறையில் குறைத்துக் கொள்ள முடியும். உங்களுடைய உதடுகள் அகலமாக இருப்பதாகத் தோன்றினால், மென்மையான நிறங்களையும், பளபளப்பான உதட்டுச் சாயத்தையும் தவிருங்கள். மிதமான நிறங்களை உபயோகிப்பதன் மூலம் உங்கள் உதடுகளைச் சிறியதாகக் காட்டமுடியும்.

கழுத்து சற்றுச் சிறிதாக இருந்தால் கழுத்தை மூடும் விதத்தில் உடை அணியாதீர்கள். V வடிவ கழுத்துள்ள உடைகள் கழுத்தை நீளமாகக் காட்டும். உங்கள் முடியைக் கீழே கழுத்தைச் சுற்றிப் பரவலாக விடாமல் நன்றாக மேற்புறம் தூக்கி வாருங்கள். நீளமான முகம், கீழ்நோக்கிய சிகை அலங்கரம் ஆகியவை நீளக் கழுத்தை உடையவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும்.

அகலமான நெற்றியா? நெற்றியின் மீது இறக்கி முடியை வாரி விடுவதன் மூலம் நெற்றியின் அகலத்தைக் குறைத்துக் காட்ட முடியும். கண்களுக்கு அதிகம் வேலை கொடுப்பதன் மூலம் கண்களுக்கு அடியில் சுருக்கம் ஏற்படும். கண்களுக்கு நன்கு ஓய்வு கொடுங்கள். காற்றோட்டமான இடத்தில் உறங்குங்கள்.

இப்படி ஒவ்வொரு குறைபாட்டிற்கும் ஏதோ ஒரு வகையில் நம்மால் தீர்வு காண முடியும்.

# பெண் பயணிகள் கவனிக்கவும்!

தவிர்க்க முடியாத காரணத்தால் தனியாக ஒரு பெண் நெடுந்தொலைவுப் பயணம் மேற்கொள்ள நேரிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அவள் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்னென்ன என்று பார்ப்போமா?

கூடுமானவரை அதிகளவு தொகைப் பணத்தை எடுத்துச் செல்லாதீர்கள். காசோலை வசதி இருந்தால் எடுத்துச் செல்லுங்கள். பணமாக எடுத்துச் செல்வதானால் எடுத்துச் செல்லும் பணத்தை மொத்தமாக ஒரே இடத்தில் வைக்காமல், பரவலாக இரண்டு, மூன்று இடங்களில் வைக்கவும்.

தனியாகப் பயணம் செய்யும்போது, உங்கள் உறவினர் விலாசம், ஃபோன் இலக்கத்துடன் கூடிய முகவரிப் புத்தகத்தைக் கைவசம் வைத்திருப்பது நல்லது. ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தொடர்பு கொள்ள எளிதாக இருக்கும்.

பயணத்திற்கு முன்பாக மிதமான உணவையே எடுத்துக் கொள்ளவேண்டும். அஜீரணக் கோளாறுகள் ஏற்பட்டால் பெட்டி மற்றும் சாமான்களை வைத்து விட்டு அடிக்கடி 'பாத்றூம்' செல்ல நேரிடும்.

பஸ் பயணமானால் இரவில் தனியாக இறங்கி பாத்றூம் செல்வதற்காகப் போகக் கூடாது. பக்கத்தில் பயணம் செய்யும் பெண்ணைத் துணைக்கு அழைத்துச் செல்லலாம்.

சக பிரயாணிகளிடம் அளவாகப் பேசுவதே நல்லது. உங்கள் வீட்டு விஷயங்களை அவர்களிடம் சுவாரஸ்யமாக விவரிக்க வேண்டாம். முக்கியமாக உங்கள் வீட்டு விலாசம்,



உங்கள் உறவினர் முகவரி இவைகளைச் சொல்லக்கூடாது.

அநாவசியமாக யாரிடமும் வம்புக்குப் போகாதீர்கள். குறிப்பாக அரசியல் பற்றி உங்கள் விருப்பு வெறுப்புக்களைச் சத்தம் போட்டுப் பேசாதீர்கள். தனியாகச் செல்கிறீர்கள் என்பதை ஒவ்வொரு நிமிடமும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பக்கத்தில் உள்ளவர்களிடம் மிகவும் பழகி விட்ட மாதிரியாக 'ஹாண்ட் பேக்'கைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு தண்ணீர் பிடிக்கப் போகாதீர்கள். சிறிய கைப்பை தானே! உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்.

ரயிலில் ஏறியதுமே உங்கள் பெட்டிகளை இருக்கைக்குக் கீழே உள்ள கம்பியுடன் செயின் கொண்டு பூட்டி விடலாம்.

பொதுவாகவே பயணத்தின் போது பெட்டி மற்றும் ஹாண்ட்பேக்கில் நகைகள் எடுத்துச் செல்லாதிருப்பதே நல்லது. கைகளிலும், கழுத்திலும் அணிந்து செல்வதே பாதுகாப்பானது.

தாலிக்கொடியை பின்போட்டு ஜாக்கெட்டுடன் இணைத்துக்கொள்வது அவசியம். மேலும் தாலிக்கொடியை உள்ளே, வெளியே கொடுத்து பிளவுஸ் பட்டணை மாற்றி மாட்டிக் கொண்டால் செயின் மிகவும் பாதுகாப்பாக இருக்கும்.

திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு நகைகள் எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமானால் தங்க முலாம் பூசிய வெள்ளி நகைகள் ஏற்றவை. தொலைந்து போனாலும் பாதிப்புக்கள் அதிகம் இருக்காதல்லவா?

தனியாகப் பயணம் செய்யும்போது அடக்கமான உடை அணிந்து செல்வதே நல்லது. கவர்ச்சிகரமான உடையலங்காரங்களைக் கண்டிப்பாகத் தவிருங்கள். கூடப் பயணம் செய்பவர்கள் அனைவருமே நல்ல மனோபாவம் உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

முன்பின் தெரியாதவர்கள் தரும் குளிர் பானம், தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடாதீர்கள். புன்முறுவலுடன் மறுத்து விடுங்கள்.

ரயில் பயணத்தின்போது ஜன்னல் பக்கத்தில் கைப்பைகளை வைத்திருக்காதீர்கள். திருடர் தொல்லைகளிடமிருந்து தப்பிக்கலாம். இரவில் ஜன்னல் பக்கம் தலை வைத்துப் படுக்காதீர்கள்.

தனியாகப் பயணம்செய்யும்போது சுற்றுப்புறச் சூழ்நிலையை மறந்து புத்தகங்களில் ஆழ்ந்து மூழ்கி விடாதீர்கள். அடுத்த ஸ்டேஷனில் இறங்குபவர்கள் உங்கள் உடமைகளைக் கிளப்பிக் கொண்டு போய் விடுவார்கள்; கவனம்! ஆழ்ந்த உறக்கத்தைத் தரும் செடேடிவ் மாத்திரைகளை (தூக்க மாத்திரைகளை) பயணத்தின்போது போட்டுக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

கையில் டோர்ச் எடுத்துச் செல்வது அவசியம். வழிப்பறி செய்பவர்களுக்கு நீங்களே வாய்ப்பு அளிக்காதவரை உங்கள் பயணம் இனிய பயணம்தான்.

# உலக அழகிப் போட்டி-96

* இந்திய மதிப்பில் 5 கோடி ரூபாய்க்கு மேல் டிக்கெட்டுகள் விற்பனை மூலம் குவிந்தது.
* உலக அழகிப் போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இந்தியா உட்பட 150 நாடுகளில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டன. கிட்டத்தட்ட 300 கோடி மக்கள் கண்டு களித்தனர்.
* அழகிப் போட்டிக்காக ஒத்திகை நடத்திக் கொண்டிருந்த அழகிகள் சிலர், 'பூனை நடை'ப் பயிற்சியின்போது தடுக்கி விழுந்தனர்.
* செஷல்ஸ் தீவில் நீச்சல் உடைப் போட்டி நடைபெற்றபோது அங்கு குழுமியிருந்த பார்வையாளர்களது உற்சாக மழையில் அழகிகளுக்கு ஜலதோஷம் பிடிக்காதது தான் குறை. செஷல்ஸ் தீவில் காணப்பட்ட உற்சாகத்தை பெங்களூரில் காணமுடியவில்லை என்று ஒரு அழகி கவலை தெரிவித்தார். என்ன செய்வது, அங்கே நடந்தது நீச்சல் உடைப்போட்டியாச்சே!
* பெங்களூரில் போடப்பட்ட மேடையின் விஸ்தீரணம் போதவில்லை என்பது அழகிகள் பலரின் ஆதங்கம். தாராளமாக நடந்துவந்து தங்கள் நடை உடை பாவனைகளைக் காட்ட முடியவில்லையே என்று சோகத்துடன் சொன்னார்கள்.
* "ஆபாசத் திரைப்படங்களை சகித்துக் கொள்பவர்கள் அழகிப் போட்டிகளை மட்டும் ஏன் எதிர்க்கிறார்கள்" என்று கேட்டார் பிரபல பின்னணிப்பாடகி லதா மங்கேஷ்கர்.
* அழகிப் போட்டிக்கு செல்லும் பார்வையாளர்கள் எலக்ற்ரோனிக் சோதனைக்கு



உட்படுத்தப்பட்டனர்.

* "அழகிப் போட்டி அரங்கில் சயனைட் வில்லைகளை விழுங்கி தற்கொலை செய்வோம்" என்று மகளிர் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

# அழகின் நிறம் என்ன?

அழகிகளுக்குப் பிடித்த நிறம் என்ன? இதற்கு பெங்களூரில் குழுமிய 88 நாட்டு அழகிகளிடமும் விடை கிடைத்தது.

பெங்களூர் கிறீன் வேலி கார்டனில் 'மிஸ் பெர்சனாலிட்டி' போட்டி சனிக்கிழமை (16.11.96) நடந்தது. ஒவ்வொரு அழகியின் அழகு குறித்தும் மற்ற அழகிகள் கருத்துக் கூறியதால் போட்டி விறுவிறுப்பாகவும், சுவாரஸ்யமாகவும் சென்றது.

கறுப்பு, வெள்ளை, சிவப்பு, பழுப்பு என்று வானவில் வண்ணங்களில் உடையணிந்து அழகிகள் தங்களது நடையழகையும், முக அழகையும் காட்டிச் சென்றனர்.

எத்தனை வண்ணங்கள் வந்தால் என்ன, கறுப்புக்கு ஈடாக முடியுமா? என்று சவால் விடும் வகையில் கறுப்பு நிற உடையணிந்த அழகிகள் எண்ணிக்கைதான் அதிகமாக இருந்தது. பார்வையாளர்கள் வரவேற்பும் இவர்களுக்கு அதிகம் இருந்தது.

அழகோடு, அறிவும், பழகும் தன்மையும் இந்தப் போட்டியில் கவனிக்கப்பட்டது. கலந்து கொண்ட 88 அழகிகளும் படித்தவர்கள் என்பதோடு பொறுப்பான பல்வேறு துறைகளில் இருப்பவர்கள். ஆடையழகு, நடையழகு, அறிவுத்திறன் போன்ற அனைத்தும் கவனிக்கப்பட்டன.

போட்டியில் கலந்து கொண்ட பெரும்பாலானோர்க்குக் கறுப்பு நிறம்தான் பிடித்துள்ளது என்பதை அவர்கள் அணிந்திருந்த ஆடைகள் உணர்த்தின.

கறுப்பும் வேண்டாம், வெள்ளையும் வேண்டாம். சிவப்புத்தான் சிறந்தது என்று **பங்களாதேஷ், பிரேஸில், கௌதமாலா, தாய்வான்** ஆகிய நாட்டு அழகிகளின் ஆடையலங்காரம் கூறியது. பழுப்பாக இருந்தால் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது **கனடா, ஃபின்லாந்து, ஹொங்கொங், ஃபிலிப்பைன்ஸ், வெனிசுலா** நாட்டு அழகிகளின் ஆடைகள்.

இவர்களோடு சேராமல் பசுமை நிற உடையுடன் தனித்துக் காணப்பட்டனர், **மிஸ் ஜெர்மனி, மிஸ்.ஸ்லோவாக்கியா, மிஸ்.உகண்டா, மிஸ்.ஸாம்பியா**,ஆகியோர் இவர்கள் யாரோடும் சேராமல் ரோயல் நீலத்தில் வந்தார் **மிஸ். லாட்வியா.**

**மிஸ்.அருபா, மிஸ்.பெல்ஜியம், மிஸ்.பல்கேரியா, மிஸ். கொலம்பியா, மிஸ். குரோஷியா, மிஸ். எஸ்தோனியா, மிஸ். ஃபிரான்ஸ், மிஸ். அயர்லாந்து, மிஸ். இஸ்ரேல், மிஸ்.லிதுவேனியா, மிஸ்.பெரு, மிஸ்.போலந்து, மிஸ்.பியூர்டோரிகா, மிஸ்.ரஷ்யா, மிஸ்.சிங்கப்பூர், மிஸ்.தென் ஆபிரிக்கா, மிஸ். ஸ்பெயின், மிஸ்.சுவாஸிலாந்து, மிஸ்.துருக்கி, மிஸ்.இங்கிலாந்து, மிஸ்.ஸிம்பாப்வே** என்று கறுப்பு நிற உடையுடன் கரம் கோர்த்து வந்த ஆதரவாளர்கள் எண்ணிக்கை நீள்கிறது.

உயரம், குட்டை, நீண்ட தலைமுடி, குட்டைத் தலைமுடி, சிவப்பு நிறத் தலைமுடி, பழுப்பு நிறமுடி, பூனைக்கண், நீலக்கண் என்று அனைத்துத் தரப்பு அழகிகளும் சொல்லிவைத்ததுபோல கறுப்பு நிற ஆடையுடன் அணிவகுத்து வந்தனர். கறுப்பு பிடிக்காத நபர்களும் உண்டு.

கறுப்புடன், வெள்ளையும் கலந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தோ, என்னவோ **மிஸ்.மெக்ஸிக்கோ, மிஸ்.நோர்வே மிஸ்.பனாமா, மிஸ்.உக்ரைன்** ஆகியோர் இரண்டு வண்ணங்களும் கலந்த உடையுடன் வந்திருந்தனர்.

வெள்ளைதான் அழகு என்ற கருத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் **மிஸ்.ஈக்குவடோர், மிஸ்.ஜமைக்கா, மிஸ்.கென்யா, மிஸ்.நியூஸிலாந்து, மிஸ்.தஹிதி, மிஸ்.உருகுவே** ஆகியோர் வெள்ளுடையில் வலம் வந்தனர்.

மிஸ். பெர்சனாலிட்டியில் வித்தியாசமான உடையில் வந்து அனைவரையும் கவர்ந்தவர்களில் **தென்கொரிய** அழகி குறிப்பிடத்தக்கவர். கைகளால் பின்னப்பட்ட பாரம்பரிய உடையில் வந்த அவர் வெள்ளை, பசுமை மற்றும் பழுப்பு நிறக் கலவையாகக் காட்சியளித்தார்.

**தான்சானிய** அழகியின் தலையில் இருந்த



தலைப்பாகை வினோதமாக இருந்தது. அவரது உடையில் தான்சானியாவின் பாரம்பரியம் எதிரொலித்தது.

ஹொலண்ட், தாய்லாந்து, ட்ரினிடாட்-டொபாக்கோ அழகிகள் இந்தியப் பட்டால் செய்யப்பட்ட ஆடைகளில் வலம் வந்தனர். ட்ரினிடாட் அழகியை அலங்கரித்தது பனாரஸ்பட்டு. பார்வையாளர்களை வசீகரித்தவர்களில் இவர்களுக்கு அதிக வரவேற்புக்கிடைத்தது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** AT

பெயர்:...........................

முகவரி:...........................

...........................

கையொப்பம்:...........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-12-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? ருவான்வெல்ல வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான். | |
|---|---|
| | **சு. மனோன்மணி** 121/11, பிரதான வீதி, ருவான்வெல்ல. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தீக்குள் ஒரு தேன்நிலா

நிலவு பாலள்ளிக் கொட்ட
ஓர் ஆயிரம் பூ வெள்ளி
எட்டி நின்று
விடுப்புப் பார்க்குமே....?
அந்நேரமெல்லாம்
எனக்கு
படுக்கை கடிக்கும்!
•••
தலையணைக்கு அடியிலும்
ஆசை எறும்புகள்
மொய்த்துக் கிடக்கும்.
என்னவரே!
எப்போது வருவீர்கள்
என் முகம் பார்க்க...?!
•••
சகதி குளித்த எருமைக்கு
கானல் பட்டாலும்
உடம்பு சிலிர்க்கும்,
சிலிர்க்காதா என்ன....!
•••
என்ர ராசாவே...!
உங்கள் மயில் வாடுது;
மனம் காயுது;
உடல் தேயுது;
முற்றத்து மல்லிகைக்கும்
பனி
முக்காடு போடுதல்லோ....?
•••
மெத்தை
விரிப்பே இல்லாமல்
பிறந்த மேனிக்காக
உத்தரிக்குது....
•••
சூரியனைத் தேடி
இங்கு ஒரு தாமரைப் பூ
பகலில் மலர்ந்து...
இரவில் வாடி..
வாழ்ந்து கொண்டிருக்குது.
•••
கோதாரிக் காற்று வந்து
குடிசையையும் பிய்க்குதே....!
குளிர்வாடைத் தென்றல்,
கதவை மூடினாலும்
கழுத்தை நீட்டிப் பார்க்குதே...!
•••
கூட்டுக்குள் போட்டடைத்த
செம்பாட்டுச் சேவல்
சிறகுதட்டிக் கூவும்
விடி சாமமெல்லாம்....
•••
வறுத்துக் கொட்டும்
பகலெல்லாம்....
•••
கறுப்புப் பூசினாற்போல
உங்கள் மனக்கிளிக்கு...
மனைவியென்னும் பாதிக்கு
ஒரே இருட்டுத்தான்!
•••
கடல் சீறித்தான் இரையுது—
மனசும் தான்...!
•••
எதுக்கும்
லீவெடுத்து வந்துபோங்க...
தீ அணைக்க!
•••

**நீலாபாலன்.**

## தேன் கிண்ணம்

## பிட்டும் தேங்காய்ப்பூவும்

என்னை நினைவிருக்குதா
உனக்கு..?
★
நான் ஒரு 'கந்தனாகவும்'
நீ ஒரு 'காசிமாகவும்' இல்லாமல்...
கண்ணிலே சேர்ந்திருக்கும்
கறுப்பும், வெள்ளையுமாய்
கலந்திருந்த காலமும்
நினைவிருக்குதா உனக்கு..?
★
பால்ய வயதினில்
பள்ளிச் சோலையின் சிட்டுக்களாய்,
பாதையோர பாடகர்களாய்,
பவனி வந்த பூமியில்—
இன்று நெருப்பா விளைகிறது..?
★
அன்று—
பந்துகளைத்தான் காலால் உதைத்தோம்;
இன்ற சிரசுகளையுமா...?!
★
அன்று—
நீயும் நானும் 'நாம்'...!
இன்று—
நீ வேறு
நான் வேறா...?
★
கதிர் விளைந்த கழனியில்
காற்று சதிராடும்;
நிலா ஒளியில் தங்கத் தடாகம் அது...!
கிழங்கு சுட்டுத் தருவார் உன் வாப்பா—
தின்று படுத்துக் கிடப்போம் பரணில்—
அன்று பேதம் இல்லை...!
★
என் வீட்டுப் பொங்கலும்
உன் வீட்டுப் பலகாரமும்
அன்று இனிப்பாய்த்தானே இருந்தது..?
★
கோவில் மணியோசையும்
மசூதி பாங்கோசையும்
மதங்களையா பிரித்துக் காட்டியது..?
★
பிரிந்தது நீயும் நானும்;
'பிரித்தது' யார்...?
★
மூட்டை முடிச்சுக்களுடன்
நாங்கள் காடேறியது கண்டு—
நீயும் கண்ணீர் விட்டிருப்பாய்..!
★
வெடிபட்டு வீழ்ந்த
உன் தம்பியின் இரத்தமும்
என் அண்ணனின் இரத்தமும்
சிவப்பாய்த்தானே இருந்தது..!
★
அந்த சிவப்பு நாட்கள்தான்
இந்த கறுப்பு நாட்களின்
கருவறைகள்..!
★
சிந்தித்துப் பார்...!
கட்டி வைத்த கட்டடத்தில்
கல் வேறு...
மண் வேறா..?
★
எரிவது வீடு—
இதில் கதவு வேறு...
யன்னல் வேறா..?
★
விழிகளில் குத்திய விரல்களை
மன்னித்து விடு;
வசந்தம் அழைக்கிறது
வா தோழா—
உன் வீட்டு முற்றத்தில்
'நிலாச்சோறு' உண்போம்..!
★

**சிந்தனைப்பித்தன்.**

அன்பில் கனிந்த அமுதா!
அம்மானிடம் நீ வரைந்து
கொடுத்து விட்ட
அன்பு மடல் கிடைத்தது;
படித்தபின் இதை எழுதினேன்!
▫▫
இப்போது என் மனநிலை
இங்கு நிம்மதியற்ற—ஒரு
காகித ஓடம்—அமுதா!
▫▫
"புனர் வாழ்வு!
போரிலே அழிவுபட்ட
பொருட்களுக்கு
இழப்பீடு!"
"மீண்டும் யாழ்நகர்
பொலிவு பெற்று(ப்)
புதுவாழ்வு!"
▫▫
இவையெல்லாம்
அரசு சார்ந்த அறிவிப்பு!
ஒருவகையான
இன்ப உணர்வோடு
புதுவாழ்வு காண்பமெனப்
புறப்பட்டு இங்குவந்தேன்!
▫▫
வாழுகின்றார்கள் சிலபேர்—
வழுக்கி விழுந்த வாழ்வு!
போலித் தனங்களுக்குள்
புகுந்து விட்ட சனநாயகம்...
மூர்க்கத் தனங்களுக்குள்
முடங்கிவிட்ட
தனிமனித சுதந்திரம்....
கேலிக்கிடமோ நம்மவர் வாழ்வு?
▫▫
நாம் வாழ்ந்த அழகுமனை—
நாய் படுக்கவும் இடமில்லை!
தோட்டத்தை உழுதால்
கொழுநுனியில் எலும்புக்கூடு!
கூட்டிற்குள் முடங்கிக்கிடந்த
வாழ்க்கை!
▫▫
கோடை கண்ட குயிலாக
மாரிகண்ட மயிலாக—நீ
ஆடிப்பாடித் திரிந்தாய்;
முற்றத்து மாமரத்தின்கீழ்
முழுநிலவாக இருந்து
முத்து முத்தாய் சிரிப்பாய்;
அந்தமண்...! அந்தமண்....! இம்.....
வேண்டாம்! வேண்டாம்!
▫▫
இங்கே 'சொல்லுப் பல்லக்கு(த்)
தம்பி கால் நடை'—நீ
என்னைத் தேடி
வந்து விடாதே! வந்துவிடாதே!
▫▫
பொன்விளையும் பூமியெல்லாம்
மனிதப் பிணங்கள்.....
உன்னைப் புதைக்கவும்
இடமில்லை!
உப்புக்கடலுக்கு
உரமாகி விடாதே!
▫▫
அன்பே அமுதா!
இன்னும் கொஞ்ச நாள்தான்
இங்கும் 'சோமாலியா!'
▫▫

**முல்லைக்கவி.**

## அது இராக்காலம்

அது மழைக்காலம்!
குப்பை மேடுகள்
துர்நாற்றம் வீசியது.
▫▫
இன்று இருந்தோம்;
நாளை இருப்போமா?
என்ற நிச்சயமற்ற
வாழ்க்கையில்
மனிதம்...
▫▫
மலை முகட்டினில்
சூரியன் முட்டி
மோதியதைக் கண்ட
துப்பாக்கி
பொம்மைகள்,
வாய்விட்டுச்
சிரித்துக் கொண்டிருந்தன.
▫▫
தேசமெங்கும்
அமைதி முத்திரை
குத்தப்பட்டு
இருள் செடி
படர்ந்து கொண்டிருந்தது.
▫▫
நாய்கள்
ஓலமிட்டு
நரிகள்
ஊளையிட்டன.
மழைத்துளிகள்
குருதிகளோடு
ஒட்டி
உறவாடின.
▫▫
மனித
சரீரங்கள்
காக்கைகளாலும்
கழுகுகளாலும்
ஏலம் விடப்பட்டன.
மனித உயிர்கள்
சந்துகளிலும்
பொந்துகளிலும்
ஓடி ஒளிந்து
கொண்டிருந்தன.
▫▫
இயற்கை—
இரவை
நிராகரித்து
விடியலை
நேசித்தது.

[illegible]

## அந்த நாள் ஞாபகம்



இந்தச் சுட்டிக் குழந்தைகள் யார் என்று தெரிகிறதா? ஒருவர்—இப்போதும் திரையுலகில் மின்னும் தாரகை—மீனா. (இடது புறம்) மற்றவரும்—இடையில் மின்னிவிட்டு இப்போது துணைப்பாத்திரங்களில் நடித்துவரும் அஞ்சு. அப்போதும் அழகுதான்.



ஒரு பேட்டிக்காக சென்றபோது, ரஜினியும், லதாவும் கண்ணோடு கண்நோக்க காதல் வயப்பட்டனர். தற்போது லதாவுக்கு உயர்ந்த பட்ச சந்தோசத்தில் உடலும் பெருத்துவிட்டது. ஜெயலலிதா மாதிரி இருக்கிறார். லதாவின் இளமையான தோற்றத்தைப் பாருங்கள். ரஜினியைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லைத்தானே!





## இந்த வாரம் உங்கள் பலன்

**(08.12.96 தொடக்கம் 14.12.96 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், வெள்ளி. |
| தனு | - வியாழன், புதன். |
| கும்பம் | - சனி. |
| மீனம் | - கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |

★ சந்திரன்—துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| **செவ்வாய்**- வீண் முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| **புதன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- மனக் கலக்கம், தெய்வானுகூலம். | மு.ப. 10 மணி |
| **சனி**- பொருள் பேறு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, கௌரவம். | மு.ப. 10 மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | மு.ப. 9 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. 10 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1**

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| **திங்கள்**- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| **புதன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | பகல் 12 மணி |
| **சனி**- உறவினர் பகை, வீண் விரோதம். | மு.ப. 10 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- முயற்சி மேன்மை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| **புதன்**- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| **வியாழன்**- வீண் விரோதம், தொழில் நஷ்டம். | பகல் 12 மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6**

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பண வரவு, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | மு.ப. 9 மணி |
| **புதன்**- வீண் முயற்சி, பொருள் நஷ்டம். | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், உறவினர் பகை. | பி.ப. 4 மணி |
| **வெள்ளி**- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **சனி**- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3**

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, பொருள் பேறு. | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- வீண் முயற்சி, தொழில் மந்தம். | பி.ப. 2 மணி |
| **புதன்**- பணக் கஷ்டம், மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| **வெள்ளி**- பலவித பேறு, கடன் தொல்லை நீங்கும். | மு.ப. 10 மணி |
| **சனி**- பொருள் பேறு, பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-5**

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| **செவ்வாய்**- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| **புதன்** - தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, இனசன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- பொருள் நஷ்டம், கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| **புதன்**- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |
| **வியாழன்**- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| **வெள்ளி**- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| **செவ்வாய்**- பலவித நன்மை, பண வரவு. | பி.ப. 1 மணி |
| **புதன்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- பண வரவு, உறவினர் உதவி. | பி.ப. 1 மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | பி.ப. 2 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| **வெள்ளி**- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| **சனி**- தொழில் பேறு, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 4 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- கௌரவம், பொருள் பேறு. | பி.ப. 2 மணி |
| **புதன்**- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- பலவித பேறு, கடன் தொல்லை நீங்கும். | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| **சனி**- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 3 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**


### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| **புதன்**- கௌரவம், தேகசுக நன்மை. | பி.ப. 3 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், உயர்ச்சி நிலை. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4**





## வெற்றியுடன் திரும்பிடுவீர்

தோளில் பையைச் சுமந்து கொண்டு
துள்ளிக் குதித்துப் பள்ளி சென்று
ஊக்கமுடன் கல்வி கற்கும் சிறுவரே!
உயரவேண்டும் நாளை யுங்கள் கைகளே!
***
ஆடிப்பாடி ஒற்றுமையாய் அனைவரும்
அரிய பல நூல்கள் கற்று வாழ்விலே
பேரறிஞ ராகி இந்த நாட்டுக்குப்
பெருமை தன்னைச் சேர்த்திடுவீர் பாலரே!
***
அரவணைத்து அன்பு காட்டும் அன்னையை
ஆசி கூறி வழியனுப்பும் தந்தையை
அறிவை யூட்டி யுமை வளர்க்கும் குருவினை
ஆதரித்துப் போற்ற வேண்டும் நீங்களே!
***
நாணயமாய் மக்களுடன் நடந்திடுவீர்!
நல்ல உயர் பண்புகளை வளர்த்திடுவீர்!
வீறுநடை போட்டு நீங்கள் சென்றிடுவீர்!
வெற்றியுடன் அனைத்திலுமே திரும்பிடுவீர்!
***
காரைதீவூர், சின்ன நாகராஜன்.

உடன்பிறந் தார்களைப் போல-இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்- இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?
-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# நரியும், ஆட்டுக்குட்டியும்

ஒரு காட்டில் ஆட்டுக்குட்டி ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. இதை நரி ஒன்று பார்த்துவிட்டது. ஆட்டுக்குட்டியைப் பிடிப்பதற்காக நரி ஓடி வந்தது. நரி ஓடிவருவதைக் கண்ட ஆட்டுக்குட்டி உயிரைக் காப்பாற்ற ஓட்டம் பிடித்தது.

நரி விடாமல் தன்னைத் துரத்துவதைக் கண்ட ஆட்டுக்குட்டி அங்கிருந்த ஒரு பாழடைந்த கோயிலுக்குள் நுழைந்து, அதன் கதவுகளை மூடிக்கொண்டது.

துரத்தி வந்த நரி, தனது வேலை எளிதாகிவிட்டது என்று எண்ணி அக் கோயிலுக்குள் சென்றது. ஆனால் கதவுகள் மூடியிருப்பதைக்கண்டு திடுக்கிட்டது. கோயிலுக்குள்ளே நுழைவதற்கு வேறு வழியே இல்லை.

எனவே வேகமாகக் கதவைத் தட்டியது. ஆனால் ஆட்டுக்குட்டி கதவைத் திறக்கவில்லை. எப்பாடுபட்டாவது இந்த ஆட்டுக்குட்டியை வெளியே கொண்டு வந்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டது நரி.

"என்னருமைக் குழந்தையே! உன்னை நான் விளையாட்டுக்குத் தானே துரத்தி வந்தேன். நீ பயந்து விட்டாயே. இந்தப் பாழடைந்த மண்டபத்தில் ஒளிந்திருப்பதனால் உனக்கு நிறைய ஆபத்து வரலாம். பாம்புகள், தேள்கள் போன்ற விஷமுள்ள ஜந்துகள் இங்கே உள்ளன. நான் உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டேன். கதவைத் திற கண்ணா!" என்று அன்பொழுகப் பேசியது நரி.

ஆனால் ஆட்டுக்குட்டி இதற்கு மசியவும் இல்லை. கதவைத் திறக்கவும் இல்லை.



இதனால் பொறுமையிழந்த நரி ஆட்டுக்குட்டியை நோக்கி கோபமாக,

"ஏய் முட்டாள் ஆட்டுக்குட்டியே! நீ என்னிடமிருந்து தப்பிக்க எண்ணிக் கோயிலுக்குள் நுழைந்தாய். எனக்குப் பயந்து நீ கோயிலுக்குள் இருந்தாலும் உனக்கு ஆபத்துத் தான் என்பதைத் தெரிந்துகொள். நான் உன்னை விட்டுச் சென்று விடுவேன். ஆனால் எனக்குப் பின்னர் இந்தக் கோயில் பூசாரி உன்னைக் கண்டவுடன் இந்தக் கோயில் சாமிக்கு உன்னைப் பலியிட்டு விடுவான். எனவே மரியாதையாக வெளியே வந்து விடு" என்று மிரட்டியது.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டி,

"கொடிய எண்ணமும், திருட்டுப்புத்தியும், வஞ்சகக் குணமும் கொண்ட நரியே! சற்றுமுன் நயமாகப் பேசி என்னை வெளியே வரவழைத்து என்னைக் கொன்று தின்னப் பார்த்தாய். ஆனால் நான் வெளியே வரவில்லை.

இப்போது என்னை மிரட்டிப்பயமுறுத்திப் பார்த்தாய். நான் வெளியே வந்து பாவியான உன்னுடைய கையில் அகப்பட்டு உயிர் விடுவதைவிட, புனிதமான இந்தக் கோயிலில் பலியாகினால் எனக்குப் பெருமையும், மேன்மையும் கிட்டும்.

ஏய் முட்டாள் நரியே! ஆளில்லாமல், இந்த அடர்ந்த காட்டுக்குள் ஒரு கோயில் இருப்பதே ஒரு விசித்திரம். அப்படி இருக்க இந்தப் பயங்கரமான காட்டுக்குள் ஏன் பூசாரி வரப்போகிறார்?

நீ என்ன சொன்னாலும் சரி, நான் இங்கேயே இருந்து உயிரை விட்டாலும் விடுவேனே தவிர, உன்னிடம் சிக்க மாட்டேன்," என்று நரியைப்பார்த்துப் பதில் சொன்னது.

ஆட்டுக்குட்டியிடம் தன் பருப்பு வேகாது என்று உணர்ந்த நரி ஏமாற்றத்துடன் வந்த வழியே ஓடிச் சென்றது. நரி ஓடுவதைக் கதவிடுக்கின் வழியே பார்த்த ஆட்டுக்குட்டி சில மணிநேரம் கழிந்த பின்னர் தன் இருப்பிடத்தை நோக்கி ஓடிப்போனது.

## வாரம் ஒரு நாடு
### சுவிற்ஸர்லாந்து

தலைநகர்-பேர்ன்
பரப்பு - 41,293 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை- 72 இலட்சம்
மொழி-. ஜெர்மன், ஃபிரெஞ்சு, இத்தாலியன்
எழுத்தறிவு - 99%
சமயம்-கிறிஸ்தவம்
நாணயம்-சுவிஸ் ஃபிராங்
தனிநபர் வருமானம்- 36,410 டொலர்.

**அமைவிடம்:**

மத்திய ஐரோப்பாவில் சுவிற்ஸர்லாந்து அமைந்துள்ளது.



**வரலாறு:**

புனித ரோமப் பேரரசில் இருந்து 1648ல் சுவிஸ் சுதந்திரம் பெற்றது. 1815 முதல் தனது தனித்துவத்தைப் பேணி வருகிறது. 1919ல் 'லீக் ஒவ் நேஷன்ஸ்' உருவாக்கப்பட்டபோது அதன் தலைமையகம் ஜெனிவாவில் தான் செயற்பட்டது. சுவிஸ் அதில் உறுப்பினரானது. ஆனால் இரண்டாம் உலகப்போரை அடுத்து, லீக் ஒவ் நேஷன்ஸ், 'ஐக்கிய நாடுகள் சபை'யாக பரிணமித்தபோது சுவிஸ் அதில் இணையவில்லை. ஆனாலும் ஐ.நா.வின் பல கிளை நிறுவனங்களின் தலைமையகம் ஜெனிவாவிலேயே உள்ளன.

பாராளுமன்றம் இரு சபைகளைக் கொண்டது. அவை; கவுன்சில் ஒவ் ஸ்டேட் மற்றும் நாஷனல் கவுன்சில். 1971 முதல் பெண்களும் வாக்குரிமை பெற்றுள்ளனர். பாராளுமன்றத்தால் நான்கு வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஃபெடரல் கவுன்சில், ஒருவருட காலத்திற்கு அதிபரையும், துணை அதிபரையும் தேர்ந்தெடுக்கின்றது.

**பொருளாதாரம்:**

கடிகாரங்கள் மற்றும் இயந்திரப் பொருட்கள் உற்பத்தியில் உலகப் புகழ் பெற்றுள்ளது. வங்கித் தொழிலில் உலகின் மிக முக்கிய மையம். பழவகைகள் முக்கிய விவசாயப்பொருட்கள். சுற்றுலாத்துறை மூலம் அதிக வருமானம் கிடைக்கின்றது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.12.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 170
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 168

பரிசுக்குரியவர்:
லிங்கநாதன் சிகிவாஹினி,
கங்கொடை வீதி, இறக்குவானை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வி. நளாஜினி, வ/சைவப் பிரகாச வித்தியாலயம், வவுனியா. | ஜே. ஷி.ஃபானா, முஸ்லிம் வித்தியாலயம், பலான்தோட்ட. |
| ம. சுமங்கலா, உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில், சுன்னாகம். | எஸ். செந்தூரன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வவுனியா. |
| எம். முஹமட் நிலூஜான், ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. | எம்.எப்.எப். றம்சியா, மத்ரஸா ஒழுங்கை, மன்னார் வீதி, புத்தளம். |
| சி. தவேந்திரம், இந்து தமிழ் வித்தியாலயம், புத்தளம். | பி. அமர்நாத், வெஸ்லி கல்லூரி, கொழும்பு-09. |
| இ. ஜெனிட்டா, இந்து மகா வித்தியாலயம், பாண்டிருப்பு-01, கல்முனை. | பாத்திமா மும்தாஜ், பாரதி தமிழ் வித்தியாலயம், பதுளை. |

## தீ ஆயுதம் (ஃபிளேம் துரோவர்)

* **தீ ஆயுதம் (ஃபிளேம் துரோவர்) என்றால் என்ன?**

எதிரிகள் மீது தீயைப் பாய்ச்சும் ஆயுதம். கூரான முனையுடன் துப்பாக்கி போல் இது இருக்கும். இது போர் வீரர்களின் முதுகில் உள்ள இரண்டு எரிபொருள் சிலிண்டர் மற்றும் ஒரு அழுத்தக் காற்று சிலிண்டருடன் இணைக்கப்பட்டிருக்கும்.

* **இதில் உபயோகிக்கப்படும் எரிபொருள் என்ன?**

பெட்ரோல் ஜெல்லி.



* **முதன் முதலில் இந்த ஆயுதம் எப்போது பயன்படுத்தப்பட்டது?**

முதலாம் உலகப்போரின் போது ஜெர்மனிய வீரர்கள் இதைப் பயன்படுத்தினார்கள்.

* **எவ்வளவு தூரத்தில் இருந்து இதை இயக்கலாம்?**

சிறிய கையால் தூக்கக்கூடிய ஆயுதத்தை வைத்து 60-70 மீட்டர் தூரத்திற்குப் பாய்ச்சலாம். பெரிய பீரங்கிகள் போன்ற அளவுகளிலும் இவை உள்ளன. இவற்றின் மூலம் நீண்ட தூரங்களுக்குக் குறிவைத்துப் பாய்ச்சலாம்.

* **போர்களைத் தவிர இவை வேறு எவற்றிற்காவது உபயோகிக்கப்படுகின்றனவா?**

ஆம். பனியை உருக வைக்கவும், பெரிய பண்ணைகளில் அறுவடைக்குப் பின்னர் நிலத்தில் எஞ்சியிருக்கும் வைக்கோல் மற்றும் சருகுகளை எரிக்கவும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

## அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்

தொலைவில் இருக்கும் ஒருவருடன் பேசுவதற்கு தொலைபேசி உதவுகிறது. இதைக் கண்டுபிடித்தவர் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்.

இவர் 1847ம் ஆண்டு ஸ்கொட்லாண்டில் பிறந்தார். இங்கிலாந்தில் படித்துப் பட்டம் பெற்றார்.

1870ம் வருடம் பெல் குடும்பத்தார் கனடாவில் குடியேறினர். 1871ம் ஆண்டில் பொஸ்டன் நகரில் காதுகேளாதவர் பள்ளியில் ஆசிரியரானார் கிரஹாம் பெல். பின்னர் பொஸ்டன் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இரவு நேரங்களில் இவர் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்தார்.

வீணையில் ஒரு தந்தியை மீட்டினால் அது அதிர்ந்து ஒலி உண்டாகிறது. இந்த ஒலி அதிர்வுகள் ஒலி அலைகளாகச் சென்று காதுகளில் விழுகின்றன. அப்போது ஒலியைக் கேட்கிறோம்.

இதே போன்று ஒருவர் பேசினால் காற்றில் ஒலி அலைகள் பரவுகின்றன. பேச்சின் மூலம் எழும் ஒலி அலைகளை மின்சக்தியாக மாற்றமுடியும். இந்த மின் சக்தியைக் கம்பிகளின் மூலம் நெடுந்தூரம் செலுத்தலாம். அங்கு இந்த மின்சக்தியை மீண்டும் ஒலி அலைகளாக மாற்றலாம். இந்த அடிப்படையில்தான் கிரஹாம்பெல் ஆராய்ச்சிகளை நடத்தினார்.

இவருக்கு தோமஸ் வட்சன் என்பவர் உதவியாளராகப் பணியாற்றினார். 1874ம் ஆண்டு ஒருநாள் ஓர் அறையில் இருந்து மறறோர் அறைக்கு வட்சன் உண்டாக்கிய ஓர் ஒலியைப் பரிசோதனைக் கருவியில் கேட்டார். வட்சன் உண்டாக்கிய ஒலி எவ்வாறு கடத்தப்பட்டது என்று கிரஹாம் பெல்லுக்கு விளங்கியது. மறுநாளே இவர் தொலைபேசிக் கருவியை அமைத்தார்.



இவர் தொடக்கத்தில் அமைத்த தொலைபேசிக் கருவியில் சில குறைபாடுகள் இருந்தன. பின்னர் இவர் குறைபாடுகளைத் திருத்தியமைத்தார். திருத்தி அமைக்கப்பட்ட தொலைபேசிக் கருவி 1876ம் ஆண்டு ஃபிலடெல்பியாவில் நடைபெற்ற உலகப் பொருட் கண்காட்சியில் வைக்கப்பட்டது.

பின்னர் தொலைபேசியில் புதிது புதிதாக சில கருவிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்த கிரஹாம்பெல் 1922ம் ஆண்டு இறந்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. அகோரத் தாய்க்கு ஐம்பது குஞ்சுகள்,
பிஞ்சுகள் வாயெல்லாம் நஞ்சுகள்.
அது என்ன?
2. உள்ளூர் உத்தமிக்கு உள்ளங்கையில்
ஓட்டை.
அது என்ன?
3. நோயின்றி மருந்து சாப்பிடுவான்,
வாயின்றி கூச்சல் போடுவான்.
அவன் யார்?
4. காண உருவம் உண்டு,
கட்டிப்பிடிக்க உடல் இல்லை.
அது என்ன?
5. அதிசயக்குளத்தில் அற்புதக் குருவி
ஒன்று வாலினால் தண்ணீரை
வற்ற வற்றக் குடிக்குது.
அது என்ன?
6. இரண்டு பேர் சேர்ந்து
இடித்திடித்துக் கொன்றார்,
கைவிரலால் அமுக்கிக் கயிறாய்த்
திரித்தார்,
கொதித்து வரும் குளத்தில் முக்கி முக்கி
எடுத்தார்,
கும்மாளம் போட்டுக் கொண்டு
பல்லினால் கடித்தார்.
அது என்ன?

**விடைகள்**

1. தீப்பெட்டி 2. உழுந்து வடை
3. பட்டாசு 4. புகை
5. விளக்குத்திரி 6. முறுக்கு

தொகுப்பு:
ஏ. றொஷானா.

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் -சுஜாதா-

# அனிதா இளம் மனைவி 4



## இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்–
ஆனந்த்–மல்லிகா.
இருவரும் சந்தோஷமாக இருக்க
தனியான மலைப்பகுதிக்குச் சென்றனர்.
அங்கே புதர் ஒன்றுக்குள்
ஒரு பிணம் கிடக்கிறது.
ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான்.
பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம்.
கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து
அவரது வீட்டுக்குச்சென்று
அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள்.
மனைவி பெயர் அனிதா.
ஷர்மாவின் இரண்டாவது மனைவி.
கொலையான ஷர்மாவின்
முதல் மனைவியின் மகள்
மோனிகா.
சட்டத்தரணி கணேஷின்
உதவியை நாடுகிறாள்
மோனிகா.

இனி...

"அனிதா என் அப்பாவை உபயோகித்த விதம் எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுடைய இரண்டாவது ஹனிமூன் நாட்களில் நான் ஒரு குறுக்கீடாக இருந்தேன். நானே விலகிக் கொள்ளப் பிரயத்தனம் செய்தேன். அமெரிக்காவில் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அப்பா சந்தோஷமாக போயிங்கில் ஃபஸ்ட் கிளாஸ் டிக்கட் வாங்கிக் கொடுத்து என்னை அனுப்பி வைத்தார். பிறகு அனிதாவுடன் தனியாக இருக்கலாம் அல்லவா? இந்தப் பெண்ணைச் சினிமாவுக்குப் போ, ஜிம்கானா கிளப்பில் போய் டென்னிஸ் ஆடு என்று துரத்த வேண்டியதில்லை.....

இரண்டு வருஷம் அன்னிய நாட்டில் இருக்கிறேன். இரண்டு அல்லது மூன்று கடிதம் வந்திருக்கும். அதில் கூட, 'ஸோனி டேப்ரிக்கார்டர் அனிதாவுக்கு வேண்டுமாம். ஷார்ப் டெலிவிஷன் செட் வேண்டுமாம். மறக்காமல் வாங்கி வா!' என்பதுதான் விஷயம்.

எனக்கு எப்பொழுதுமே அப்பா கிடையாது. கடைசியில் அப்பா எப்படிச் செத்துப்போய் இருக்கிறார். இன்று அனிதா ஒரு விதவை. அழுகிறாள். கண்ணீர் நிஜம் போலத்தான் தோன்றுகிறது. இவளை ஒரு சமயம் நினைத்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. மறு சமயம் என் அப்பாவின் சொத்தில் பாதிக்குச் சற்று மேல் அவளுக்குப் போகப்போகிறது என்கிற ஞாபகமும் வருகிறது. அவ்வளவுதான் கதை."

"என் உதவி ஏதோ தேவை என்றாயே?"

"ஆமாம் மறந்து விட்டேன். நீங்கள் லாயர் இல்லையா?"

"ஆம்."

"என் அப்பா ஒரு உயில் எழுதி வைத்திருக்கிறார். அதன்படி அனிதாவுக்குப் போனது போக மற்றது எனக்கு வருகிறது. அந்த உயிலை நான் படித்தேன். பாஸ்கர் காட்டினான்."

"பாஸ்கர்?"

"அப்பாவின் காரியதரிசி; நல்லவன்."

"ம்."

"அந்த உயில் எனக்குத் தலைகால் புரியவில்லை. பெரிய பெரிய நீளமான வாக்கியங்களாய் இருக்கிறது. எனக்கென்னவோ அதில் ஏதோ சிக்கல் இருப்பதாகப்படுகிறது. அந்த உயிலை நீங்கள் பார்க்க வேண்டும். பார்த்து அதில் எனக்கு எவ்வளவு கிடைக்கும். கிடைப்பது சீக்கிரம் எனக்கு வந்து சேர நான் என்ன செய்ய வேண்டும். வரி கட்ட வேண்டுமா, எந்த ஆபிஸில் போய் நிற்க வேண்டும், யாரைப் பார்த்துச் சிரிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்ல வேண்டும்."

கணேஷ் சிரித்தான். "நான் எல்லாம் கவனித்துக் கொள்கிறேன். என்னைப் பார்த்துச் சிரித்தால் மட்டும் போதும். சிரி பார்க்கலாம்."

அவள் மெல்லச் சிரித்தாள். ஒரு கணம் அவர்கள் பார்வைகள் கோர்த்துக் கொண்டு விலகின; அவள்தான் விலகி விட்டாள்.

"தட்ஸ் பெட்டர். இனி சில கேள்விகள். உன் அப்பா இறந்து போனதற்கு சர்டிபிகேட் இருக்கிறதா?"

"தெரியாது. பாஸ்கருக்குத் தெரிந்திருக்கும்."

"டெத் சர்டிபிகேட் வேண்டும். உனக்கு எத்தனை வயது?"

"21. இதை வேறு நிரூபிக்க வேண்டுமா?"

"ஆம். நீ ஒரு மைனர் பெண்ணல்ல என்பது தெரியவேண்டும்."

"என்னிடம் டிரைவிங் லைசென்ஸ் இருக்கிறது. விஸ்கன்ஸினில் கார் ஓட்டி இருக்கிறேன்."

"உன் எஸ்.எஸ்.எல்.ஸி. சர்டிபிகேட் இருக்கிறதா?"

"தேடிப்பார்க்க வேண்டும்."

"உனக்கு வரும் பணத்தை என்ன செய்வதாக உத்தேசம்?"

"செலவழிப்பதாக."

"அந்த உயிலை நான் பார்க்க வேண்டும்," என்றான் கணேஷ்.

"என் வீட்டுக்கு வாயேன். வஸந்த் விஹார். அழகான பெகினீஸ் நாய் இருக்கிறது. பெயர் ஷோபா. அழகான என் சித்தி இருக்கிறாள். பெயர் அனிதா. நீ பார்த்திருக்கக்கூடிய அழகிகளையெல்லாம் சாப்பிடக் கூடிய அழகு."

"நீ அந்த அனிதாவை அதிகம் விரும்பவில்லை என்பது தெரிகிறது."

"வா (ஹ்) ரே வா! மை டியர் ஷெர்லக் ஹோம்ஸின் மகனே!"

எவ்வளவு துடிப்பான பெண் இவள் என்று எண்ணிக் கொண்டான் கணேஷ். எவ்வளவு சகஜமாகப் பேசுகிறாள் இந்த வயதில். மனித இயல்பைப் பற்றி ஒரு புலனறிவு– ஓர் ஆறாவது அறிவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பெண் முன்னுக்கு வருவாள். தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விடுவாள்.

"என்ன பார்க்கிறாய்?" என்றாள் மோனிகா.

"யூ ஆர் ஓ கே என்றான்."

"ஏன்?"

"நீ பிழைத்து விடுவாய். உன்னை ஒருவரும் ஏமாற்றமுடியாது..... மேலும் நானிருக்கிறேன், கவலைப்படாதே."

"நீ நினைப்பது அதில்லை. 'இந்தப் பெண் அப்பா இறந்து போய் ஐந்தாம் நாளில் இப்படிப் பைசாக் கணக்குக்கு வந்துவிட்டாளே! இவள் எப்படிப்பட்டவளோ!' என்றுதானே யோசித்தாய்?"

"இல்லை, இல்லவே இல்லை."

"யோசி. எனக்குக் கவலையில்லை மறுபடி சொல்கிறேன், எனக்கு அப்பாவே கிடையாது. என்னைப் பெற்றதாய் எனக்கு ஞாபகத்தில் வெறும் அம்மா எனும் மூன்று எழுத்து. என் அப்பா ஒரு மெஷின். பணம் செய்து குவித்துவிட்டுப் பிறகு காதலில் சரணடைந்து நின்றுபோன மெஷின். அந்த மெஷினுக்காக என்னால் அழமுடியவில்லை. என் கண்ணீர் எல்லாம் பதினைந்து வயதிலேயே தீர்ந்து போய் விட்டது."

"கண்ணீர் வேண்டாம். கொக்கா கோலா!"

"வா, எங்கேயாவது போய்ச் சாப்பிடலாம். இந்த அறையில் அச்சாபீஸ் வாசனை அடிக்கிறது."

"இரு, என் காரை எடுத்து வருகிறேன்."

"உன்னிடம் கார் இருக்கிறது என்று காட்டிக் கொள்ள வேண்டாம். வா, நடக்கலாம்."

கணேஷ் தன் அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பினான். அவனுக்காகச் சாலையில் காத்திருந்தாள். 'இன்று கோர்ட்டுக்குப் போக முடியாது. ஓர் அட்ஜர்ன்மெண்ட் வாங்க வேண்டும். சுனில் குமாருக்குப் போன் செய்து விடலாம் ஹோட்டலிலிருந்து.....'

"ஸோ கணேஷ், என்னிடம் பணம் கிடையாது இப்பொழுது."

"என்னிடம் இருக்கிறது."

"எனக்காக ஒரு அக்கவுண்ட் திற. என் கணக்கில் செலவழிப்பதெல்லாம் எழுதிக் கொண்டே வா. என் அப்பாவின் பணம் வந்ததும் தீர்த்து விடுகிறேன்."

"சரி."

"கம பதனி."

"ஸில்லி கர்ல்!"

"ஏன் தள்ளி நடக்கிறாய்-வெட்கமா?"

"மரியாதை."

"மை ஃபுட்!"

"மோனிக்கா, மற்றவர்களுக்காகவாவது சில நாட்கள் நீ அடக்கமாக இருக்க வேண்டும்."

"என் லாயரின் உபதேசப்படி நடக்கிறேன்."

☆☆☆

ஹாலில் கணேஷ் காத்துக் கொண்டிருக்க, மோனிக்கா மாடிப் படிகளை இரண்டு இரண்டாக ஏறிமேலே சென்றாள்.

கணேஷ் தன்னைச் சுற்றிப் பார்த்தான். ஹால் முழுவதும் பண வாசனை. ஓவியங்கள், திரைகள், சில்க் எனாமல் மோஸேய்க், ப்ளாஸ்டிக் வெள்ளி வர்ணக் கண்ணாடி, மென்மையாக கார்ப்பெட்- சுவரிலிருந்து சுவர்வரை, வெளியே பச்சைப்புல், தண்ணீர் தெளிக்கும் சக்கரம், சதீஷ் குஜரால், ஏர்கண்டிஷனர், டெலிவிஷன் இன்னும் என்ன பாக்கி?

"கணேஷ்!"

மேலேயிருந்து மோனிக்கா குனிந்து கூப்பிட்டாள். கணேஷ் அவளைப் பார்த்தான். கழுத்துத் திறப்பில் அவள் உள்ளாடை தெரிந்தது. "மேலே வா," என்றாள்.

கணேஷ் மெதுவாகப் படி ஏறினான். தன் தலையைச் சரி செய்து கொண்டான்.

"சீப்பு வேண்டுமா?" என்றாள்.

"வேண்டாம்," என்றான்.

அந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

'இவள்தான் அனிதாவா? இவள்தான். இவள்தான்.' கணேஷ் சற்றுத் தயங்கினான். விசில் அடிக்கும் ஆசையைப் பிரயத்தனப் படுத்தி அடக்கிக் கொண்டான். வாட் எ வுமன்!

அனிதா கடல் நீலத்தில் ஸாரி அணிந்து கொண்டிருந்தாள். நின்று கொண்டிருந்தாள். அந்த அறையில் அவளால் ஒரு தனி வெளிச்சம் இருந்தது. அவள் அணிந்திருந்த ஸாரி தோள் வரை வருவதற்குச் சற்றுக் கஷ்டப்பட்டிருக்கும். குட்டையான ஸாரி. மிக மெலிதாகப் பவுடர் தீற்றி இருந்தாள். உதடுகள், கண்கள், நாசி, காதில் ஜொலித்த ஒற்றைக்கல், கூந்தல், வெள்ளத்தின் நடுவில் பின்னிரவில் ஜொலிக்கும் ஒற்றைக் கழுத்து வளைவு, மார்பு, இடுப்புச் சரிவு, பாதங்கள், விரல்கள், கைவிரல்கள், கண்ணிமைகள், புருவங்கள்... எங்கேனும் குறை இருக்கிறதா?

"அனிதா, இது கணேஷ். கணேஷ், இது அனிதா. இது பாஸ்கர்."

"ப்ளீஸ் டு மீட் யூ," என்றான் பாஸ்கர்.

"இவர் யார்?" என்றாள் அனிதா.

"என் லாயர்," என்றாள் மோனிகா, "பாஸ்கர், இவரிடம் அப்பாவின் உயிலைக் காட்டு."

பாஸ்கர் அனிதாவைப் பார்த்தான். அனுமதி கேட்கும் பார்வை.

"ஜஸ்ட் எ மினிட். அவ்வளவு அவசரம் வேண்டாம். நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். என் பெயர் கணேஷ். சொல்லியாகிவிட்டது. நான் வந்திருப்பது காலம் சென்ற ஷர்மாவின் உயிலைப் படித்துப் பார்ப்பதற்கு. படித்துப் பார்த்து மிஸ் ஷர்மாவுக்கு அதைப் புரிய-வைப்பதற்கு!"

"ஹீ இஸ் மை லாயர். பார்த்தால் சற்று மாஸ்ட்ரி யோவான்னி போல இல்லை?"

"மோனி!" என்றாள் அனிதா.

"எஸ் மை டியர் கோ ரெஸ்பாண்டெண்ட்! கோ ரெஸ்பாண்டென்ட் தானே அந்த வார்த்தை?"

"மோனி, உன் அப்பா இறந்து போயிருக்கும் இந்தச் சமயத்தில் நீ இப்படி..."

"ஐ நெவர் ஹாட் எ ஃபாதர் அனிதா!"

அனிதா மௌனமானாள். அவள் முகத்தில் சோகத்திரை படிந்தது. கணேஷ் பதட்டத்துடன், "மோனிக்கா, நான் இவர்களுடன் கொஞ்சம் பேச வேண்டும். தனியாக, சற்று நேரம். நீ இருந்தால் பேச்சு நடக்காது, ப்ளீஸ்."

மோனிக்கா, "நான் அரை மணியில் வருகிறேன் அனிதா! காரை எடுத்துக் கொண்டு போகிறேன். என் காரை," என்றாள்.

"பாஸ்கர் நீயும் வெளியே போ!" என்றாள் அனிதா.

ஜன்னலில் திரை ஆடியது, கணேஷின் மனம் போல. அனிதா உட்கார்ந்தாள். அவனை நேராகப் பார்த்தாள். சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"மோனிக்காவை எவ்வளவு நாட்களாகத் தெரியும் உங்களுக்கு?" என்றாள்.

"சென்ற ஒரு மணி முப்பது நிமிஷங்களாக."

"மோனிக்கா என்னைப் பற்றிச் சொன்னாளா?"

"நிறைய. அவள் சொன்னதெல்லாம் சரி!"

"என்ன சொன்னாள்?"

"அனிதா-அதுதானே உங்கள் பெயர்-மிக அழகானவள் என்று."

"சட்!" என்று அவள் அலுத்துக் கொண்டாள். "மோனிக்காவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"அவள் ஒரு குழந்தை. இளமையின் கோபம் இலக்கில்லாமல் எங்கும் பரவுகிறது."

"அவள் என்னை வெறுக்கிறாள்- அவள் அப்பாவின் மரணத்துக்கு நான் எப்படியோ காரணம்- எப்படியோ சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று நினைக்கிறாள்."

"அவள் அப்படிச் சொல்லவில்லை."

"அவர் சொத்துக்காக வந்தவள் என்று சொல்லியிருப்பாள்."

"அப்படியும் சொல்லவில்லை. அந்தப் பெண் தனியான பெண். அவள் தேடுவது பாசத்தை. அது அவளுக்கு இதுவரை கிடைக்கவில்லை."

"உண்மை."

"அவள் விரும்புவது ஒரு வீடு. வீடு என்றால் பௌதிக அர்த்தத்தில் இல்லை. மாலை திரும்பிச் செல்ல ஓர் இடம். இள வயதின் ஞாபகங்கள் படிந்திருக்கும் ஓர் இடம். அதுவும் அவளுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. அதுதான் அவள் கோபத்துக்குக் காரணம். அவள் வெறுப்புக்குக் காரணம், நிலையில்லாத குழந்தைப் பருவத்துச் சம்பவங்கள். உங்களை அவள் வெறுக்கவில்லை."

"இல்லை. அவள் என்னை ஒரு காரணத்துக்காக வெறுக்கிறாள். அவள் அப்பாவை அவள் அடையப் போகும் தருணத்தில் நான் வந்துவிட்டேன். அதனால்."

"இருக்கலாம்."

"உங்கள் வயதென்ன?"

"முப்பத்திரண்டு."

"கல்யாணம்? குழந்தைகள்?"

"இன்னும் இல்லை இரண்டும்."

"ஏன்?"

"தொழில் ஊன்றவில்லை."

"என் வயது எவ்வளவு இருக்கும்?"

"இருபத்தெட்டு. மோனிக்கா சொன்னாள்."

"இருபத்தொன்பது."

"அப்படித் தெரியவில்லை."

"இருபத்தொன்பது வயதில் நான் கணவனை இழந்தவள், விதவை. எனக்கு என்ன கிடைத்திருக்கிறது? மோனியின் தனிமையைப் பற்றி பேசினீர்களே, என் தனிமையைப் பற்றிச் சொல்கிறேன். என்னை அவர் விலைக்கு வாங்கினார். சந்தித்தார். விரும்பினார். அடைந்தார். ஜஸ்ட் லைக் தட்–கடையில் போய் டெரிலின் சட்டை வாங்குவது போல."

"அப்படியா?"

"நான் சொத்துக்கு ஆசைப்பட்டு கல்யாணம் செய்து கொண்டேன் என்றுதான் எல்லாரும் சொல்கிறார்கள். இன்று, இப்பொழுது, இந்த நிமிஷம் தஸ்தாவேஜு தயாரித்துக் கொண்டு வாருங்கள். கையெழுத்திடுகிறேன். எல்லாம் மோனிக்காவுக்கே சேரட்டும். இந்த வீடு, பட்டேல் நகர் வீடு, கிளார்க்ஸ் ஓட்டல், கடைகள், கம்பெனி ஷேர்கள், தங்கம், வைரம்- எல்லாம் சகலமும் அவளுக்கே போகட்டும். இதை அவளிடம் நீங்கள் போய்ச் சொல்லுங்கள். அனிதாவின் ஆழம் அவளுக்குத் தெரியாது."

"எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை? இரண்டு மணி நேரத்தில் ஏகப்பட்ட சம்பவங்கள்!"

"அவளிடம் அதையும் சொல்லுங்கள், அவள் அப்பாவிடம் நான் பட்ட பாட்டை! என்னை மணந்து கொண்டுவிட்டுப் பொறாமையால் சந்தேகத்தால் மோகத்தால் என்னை அவர் படுத்திய பாட்டை!"

"ரியலி மிஸஸ் ஷர்மா, இந்தப் பேச்சு அளவுக்கு மீறிய அந்தரங்கங்களில் செல்கிறது என நினைக்கிறேன்!"

"என்னை அனிதா என்று கூப்பிடுங்கள். ஷர்மாவிடமிருந்து நான் விடுதலை அடைந்து விட்டேன். என்னைத் தங்கக் கூண்டில் அடைத்து நாள் தவறாமல் ஆப்பிள் கொடுத்துப் படுக்கைக்குத் தயார்ப்படுத்திய கிராதகரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். எனக்கு அவர் சொத்தில் ஒற்றைப் பைசா தேவையில்லை. நான் படித்தவள், எங்கேயாவது வேலை கிடைக்கும். நான் என்னைக் கவனித்துக் கொள்வேன்! கணேஷ், நீங்கள் ஒரு லாயர்... எனக்காக இந்தக் காரியம் செய்யுங்கள். எனக்கு இந்த வீட்டிலிருந்து விடுதலை தாருங்கள்."

"இரண்டு பேருமே சற்றுக் கோபம் தணிந்ததும் ஓர் ஒப்பந்தத்துக்கு வரமுடியும் என நினைக்கிறேன்."

"என் கோபம் இந்த ஜன்மத்தில் தணியாது."

"மிஸஸ் ஷர்மா, நான் ஒரு கேள்வி மட்டும் கேட்கிறேன்; உங்கள் கணவர் ஏன் கொலை செய்யப்பட்டார்?"

"அவர் துரத்தித் துரத்திச் சம்பாதித்த பணம் அவரைக் கொன்றது. கேவலம் பிச்சைக் காசு பதினான்காயிரத்துக்குப் பலியானார். வேலைக்காரன் கொன்று விட்டான்."

"வேறு ஒரு காரணமும் இல்லை?"

"இல்லை. ஏன், வேறு காரணம் இருக்கும் என்று நினைக்கிறீர்களா?"


"இல்லை."

"பின் ஏன் கேட்டீர்கள்?"


"தோன்றியது, கேட்டேன். மறந்து விடுங்கள். உங்கள் நிலைமையின் தீவிரத்தை நான் முழுதும் உணர்கிறேன். இன்னும் உங்கள் வாழ்க்கை அஸ்தமித்து விடவில்லை. தற்காலிகமான கோபத்தில் உங்களை வந்தடைந்துள்ள சொத்தை உதறிவிடாதீர்கள். இதுவரை நீங்கள் பட்ட கஷ்டத்திற்கு அதை ஒரு சிறிய நஷ்ட ஈடாக நினைத்துக் கொள்ளுங்கள். பதட்டத்தில் ஏதும் செய்யாதீர்கள்!"

**(தொடர்ந்து வரும்)**


## அரங்கம்




பெயர்: ஜெ. ஜெயகாந்த்.
வயது: 23
முகவரி: 133, உடுவறை, ஹாலி-எல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். முஸ்னி.
வயது: 18
முகவரி: 154, மடலஸ்ஸ, கெக்குணகொல்லை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.




பெயர்: சதாநந்தன்.
வயது: 26
முகவரி: P.O.BOX-5489, JEDDAH-21422, K.S.A.
பொழுதுபோக்கு: ரீ.வி, சினிமா.



பெயர்: எம். அமிஹர்.
வயது: 20
முகவரி: 166, மெலிபன் வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: பி. விமலேஸ்வரி.
வயது: 24
முகவரி: 236/7, லேயாட்ஸ் புரோட்வே, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: அன்வர் சாதிக்.
வயது: 26
முகவரி: P.O.BOX-20422, SAFAT-13065, KUWAIT.
பொழுதுபோக்கு: பேனா நட்பு.

பெயர்: எம். அன்சார்.
வயது: 21
முகவரி: கைரியா நகர், மூதூர்-05.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: ஆர். சதாத்.
வயது: 18
முகவரி: புதிய வீதி, உப்புக்குளம், மன்னார்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். சுதா.
வயது: 23
முகவரி: MOHLERN STR-71, 3098, KONIEZ-BERN, SWITZERLAND.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், புகைப்படம் எடுத்தல்.

பெயர்: என். நகுலேந்திரன்.
வயது: 25
முகவரி: 180/44பி, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-12
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: கணேசன் குலேந்திரன்.
வயது: 16
முகவரி: 60/1, தெவு சிரிபுர, தலவாக்கலை.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: எம். ஜரூல்.
வயது: 22
முகவரி: BLOCK NO.3, STREET NO.39, HOUSE NO.25, AEDILIYAH, KUWAIT
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.

# 05 தூக்கு மேடைக் குறிப்பு

ஜூலிஸ் பூசிக்

## இதுவரை

**செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர். ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார். அவர் இறந்துவிட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. இனி...**

நான் இறந்து விட்டதாகச் சொல்லப்பட்டபோது என் மனைவியின் மனதில் என்னென்ன எண்ணங்கள் தோன்றினவோ?

பைத்தியம் பிடித்தவள்போல சிறை முற்றத்தில் சுற்றிச் சுற்றி ஓடினாள்.

பெண் காவலாளி ஒருத்தி அவள் முகத்தில் ஓங்கிக் குத்தினாள். அதையும் அவள் கவனிக்கவில்லை.

அவளுடைய கருணைமிகுந்த கண்கள் பகல் முழுவதும் சிறைச்சுவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

அழக்கூட முடியாதளவுக்கு அவளுடைய மனம் உடைந்துவிட்டது.

மறுநாள் அவள் வேறு ஒரு வதந்தியைக் கேள்விப்பட்டாள்.

சித்திரவதையினால் நான் சாகவில்லை என்றும், வலிபொறுக்காமல் நான் தற்கொலை செய்துகொண்டதாகவும் அறிந்தாள்.

அந்தச் சமயத்தில் நான் என் படுக்கையில் உடலை முறித்துக் கொண்டிருந்தேன்.

ஒவ்வொரு மாலையிலும் சுவர்ப் பக்கம் திரும்பி என் அருமை மனைவி குஸ்தினா மிகவும் விரும்பிப் பாடிய பாட்டைப் பாடினேன்.

ஆனால் அது அவள் காதுக்கு எட்டவில்லை. உணர்ச்சி முழுவதையும் கொட்டி நான் பாடியபோது, அது எப்படி அவள் காதுக்கு எட்டாமல் போயிற்று?

பரவாயில்லை. இன்றைக்கு அவளுக்குத் தெரியும். இன்றைக்கு அந்தப்பாட்டை அவளால் கேட்க முடியும். அவள் காதுக்கு இது எட்டும்.

ஏனெனில் 267ம் இலக்க அறையில் தினசரி பாட்டுச் சத்தம் கேட்கிறதென்பது எல்லாக் காவலாளிகளுக்கும் தெரியும். இப்போது இது வழக்கமாய்ப் போய் விட்டது.

சப்தம் போடாதே என்று அவர்கள் கதவைத் தட்டி அசத்துவதில்லை.

அதனால் இன்று உரத்துப் பாடப் போகிறேன். என் இனிய குஸ்தினாவின் காதுக்கு எட்டும் வரை பாடப்போகிறேன்.

சூரியன் இல்லாமல் எப்படி வாழ்வு இல்லையோ, அதேபோல் பாட்டு இல்லாமல் வாழ்க்கை இல்லை.

இங்கே எங்களுக்கு இருமடங்கு அதிகமான பாட்டுத் தேவை.

ஏனெனில், இங்கே எங்களை சூரியன் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை.

267ம் இலக்க சிறை அறை வடக்குப் பக்கம் அமைந்திருக்கிறது. கோடைகாலத்தில் ஒரு சில நாட்கள் மட்டுமே சூரியனின் ஒளிக்கிரணங்கள் கிழக்குப் பக்க ஜன்னல் வழியாக அறைக்குள் பிரவேசிக்கும்.

என் அறையில் இருக்கும் சககைதியான 'அப்பா' தன் படுக்கைமேல் ஏறிநின்று சூரியனைப் பார்ப்பார். அவன் அவசரமாக ஓடிவிடுவான்.

### குணவிசேஷங்கள்

சரித்திரத்தில் இந்தக் கட்டத்தில் வாழ்ந்து, கடந்து செல்கிறவர்கள் எல்லோரையும் நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுகிறவர்களை ஒருபோதும் மறக்காதீர்கள்! நல்லவர்களையும் கெட்டவர்களையும் ஞாபகத்தில் வைத்திருங்கள்!

உங்களுடைய நல்வாழ்வுக்காகவும், தங்களுடைய வாழ்வுக்காகவும் உயிர்த்தியாகம் செய்த எல்லோரையும் பற்றி உங்களால் முடிந்த அளவுக்கு குறிப்புக்களைச் சேகரியுங்கள்.

நிகழ்காலம் எதிர்காலச் சரித்திரமாவது நிச்சயம். இது சரித்திரத்தை உருவாக்கிய ஊர் பெயர் தெரியாத வீரர்களுடைய மகத்தான சகாப்தம் என்று அப்போது அழைக்கப்படும்.

அவர்கள் எல்லோருக்கும் பெயர்கள் இருந்தன. முகங்கள் இருந்தன. நம்பிக்கைகள் இருந்தன. ஆசைகள் இருந்தன.

நினைவிலே நிற்கும் பெயர்களை உடையவர்கள் பட்ட கஷ்டங்களைவிட, பெயர்கள் தெரியாதவர்கள் பட்ட கஷ்டங்கள் எவ்விதத்திலும் குறைந்ததில்லை.

நான் விரும்புவது எல்லாம், நீங்கள் அவர்களையும், உங்கள் குடும்பத்தினரை நினைப்பது போல, அல்லது உங்களையே நினைப்பதுபோல மனதில் வைத்திருக்க வேண்டும; உங்களில் ஒருவராகப் பாவிக்க வேண்டும் என்பதுதான்.

வீரர்கள் நிறைந்த குடும்பங்கள் எத்தனையோ முழுவதும் கொல்லப்பட்டிருக்கின்றன.

அவர்களில் ஒருவரை உங்கள் சொந்தப் புதல்வனை அல்லது புதல்வியைப்போல நேசியுங்கள்.

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையிலேயே நாட்களைக் கழித்து, எதிர்காலத்தை அழகுடையதாக்கும் முயற்சியில் உயிரைவிட்ட ஒவ்வொருவரும் கற்சிலையாக செதுக்கப்பட வேண்டியவர்கள்.

இவர்களுக்கு எதிராக வேலைசெய்தவர்கள் புரட்சிப் பெருவெள்ளத்தை அடைக்க இறந்தகால தூசியைக் கொண்டு அணைகட்ட முயற்சித்தவர்களாவர்.

தோளில் உயர்பதவிப் பதக்கங்களை அவர்கள் தரித்திருந்தாலும் மங்கிப்போகும் மரப்பொம்மைகளேயாவர். இந்த உருவங்களையும் நாம் உயிருடன் காணவேண்டும்.

அவர்களுடைய கேவலமான வெறியாட்டமாடும் நிலையை அறிய வேண்டியது அவசியம். ஏனெனில் இவர்களும் நம்முடைய எதிர்காலத்தைப் பற்றிய கண்ணோட்டத்திற்கு விஷயங்களை அளிக்கின்றனர்.

கீழே நான் சில நபர்களைப் பற்றிய குணவிசேஷக் குறிப்புக்களைத் தருகிறேன். இவை போர்க்களத்தில் ஒரு குறுகிய முனையில் அமர்ந்து நான் குறித்தவை.

### ஜிலினிக் தம்பதி

ஜோசப், அவர் ஒரு பஸ் நடத்துநர். மேரி, அவள் ஜோசப்பின் மனைவி. அவர்களுடைய இல்லத்தை நீங்கள் பார்க்க வேண்டும்.

வழவழப்பான சாதாரணமான தரை; நவீன மேசை, நாற்காலி வகைகள்; ஒரு புத்தக அலுமாரி; ஒரு சிலை; சுவரில் சில படங்கள். பரிசுத்தம் என்றால் பரிசுத்தம்.

அதைப் பார்த்தவுடன் மேரி வீட்டிலேயே அடைபட்டிருப்பவள் என்றும், வெளி உலகம் தெரியாதவள் என்றும் நீங்கள் நினைப்பீர்கள்.

ஆனால் அவள் வெகுநாட்களாக இரகசிய இயக்கத்தில் வேலை செய்திருக்கிறாள். சமூக விடுதலை பற்றிய கனவுகளைக் கண்டிருக்கிறாள். அவர்கள் இருவரும் ஆரவாரம் இல்லாமல், மிக விசுவாசத்துடன் வேலை செய்தனர்.

எதிரியின் படையெடுப்பு மிகவும் கடுமையான இரகசிய வேலையை அவர்கள் பேரில் திணித்தபோதும், அவர்கள் சிறிது கூடப் பின்வாங்கவில்லை.


மூன்றுவருடம் தலைமறைவாக இருந்த பின்னர், அவர்கள் வீட்டை உடைத்து பொலிஸ் புகுந்தது.

ஜோசப்-மேரி இருவருமே கலங்கவில்லை. அஞ்சவில்லை. இணைபிரியாமல் கைகளை தலைக்கு மேல் தூக்கி ஒருவர் பக்கத்தில் ஒருவராக நின்றனர். மிகவும் உருக்கமான காட்சி அது.

### மே 19, 1943

இன்றிரவு- என் அருமைக் குஸ்தினாவை அவர்கள் போலந்துக்கு கடின வேலைகள் செய்வதற்காக இழுத்துப் போனார்கள்.

அப்படியென்றால்? கொலைக்களத்திற்கு, நோயிலும் துன்பத்திலும் பலியாக இழுத்துப்போகிறார்கள்.



என் இனிய தேவதைக்கு இன்னும் சில வாரங்கள்தான் ஆயுள் இருக்கும்.

என்னுடைய வழக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. சிறையில் சுமார் நான்கு வாரங்கள் விசாரணை நடக்கும்.

அதன் பின்னர் முடிவுக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் இருக்கும். நான் எழுதும் இந்தக் குறிப்பு ஒருபோதும் முற்றுப்பெறாது.

அடுத்த சில நாட்களில் சந்தர்ப்பம் கிடைத்தால் எழுத முடிந்தளவுக்கு முயற்சிக்கிறேன்.

இன்று என்னால் எழுத முடியாது. என் மனமும், இதயமும் குஸ்தினாவைச் சுற்றியே வருகின்றன.

அவள் நற்குணப் பெண். அன்புள்ள மனைவி. மிகவும் ஆழமான, ஆனால் அமைதியற்ற போராட்ட வாழ்க்கையில் விலைமதிப்பற்ற உயரிய சிநேகிதி.

ஓ! என் தைரியமிக்க தோழியே! உன் சிறிய உருவத்தில்தான் எத்தகைய பலம்! அந்த வதனத்தில்தான் எத்தகைய உறுதி! அந்த மகத்தான கண்களில்தான் எத்தகைய கனிவு!

முடிவற்ற போராட்டங்களும், அடிக்கடி நிகழ்ந்த பிரிவுகளும் நம்மை நிரந்தரக் காதலர்களாக்கிவிட்டன.

புதுக்காதலர்களுக்கு முதல் சந்திப்பில், முதல் அணைப்பில், முதல் முத்தத்தில் உண்டாகும் இன்பகரமான உணர்ச்சிகள், பழையவர்களான போதிலும் நம் இருவருக்கும் இடையேயும் நூற்றுக் கணக்கான தடவை தோன்றி நம்மை மகிழ்வித்தன.

நம் இதயங்கள் இரண்டாக இருந்த போதிலும், அவற்றின் துடிப்பு ஒன்றுதான்.

மகிழ்ச்சியிலும், துக்கத்திலும், படபடப்பிலும் நாம் விடுகின்ற மூச்சும் ஒன்றுதான்.

பல ஆண்டுகளாக நானும், என் இனிய குஸ்தினாவும் சேர்ந்து இரகசிய இயக்க வேலை செய்திருக்கிறோம்.

ஒரு நண்பன் இன்னொரு நண்பனுக்கு உதவுவதுபோல, ஒருவருக்கொருவர் உதவி வந்திருக்கிறோம்.

பல ஆண்டுகளாக நான் எழுதும் கட்டுரைகளை முதலில் வாசிப்பவளும், விமர்சிப்பவளும் அவள்தான்.

அவளுடைய கண்கள் என்மீது இல்லாத சந்தர்ப்பங்களில் எழுதுவது எனக்கு சிரமமாக இருந்தது.

பல ஆண்டுகளாக நாங்கள் இருவரும் போராட்டங்களில் இணைபிரியாமல் சேர்ந்தே நின்றோம். நாங்கள் நேசிக்கிற நாட்டில் கையோடு கை கோர்த்து சுற்றித் திரிந்திருக்கிறோம்.

என் இனிய குஸ்தினாவும், நானும் ஒருமுறை சிறைக்குள் சந்தித்துக் கொண்டோம். அப்போது என் குஸ்தினாவின் உறுதியை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

**"ஓ! எனது தைரியம் மிக்க தோழியே! உன் சிறிய உருவத்தில்தான் எத்தகைய பலம்! அந்த வதனத்தில்தான் எத்தகைய உறுதி! அடிக்கடி நிகழ்ந்த பிரிவுகள் நம்மை நிரந்தரக் காதலர்களாக்கிவிட்டன."**

மீண்டும் ஒரு முறை என் குஸ்தினாவை சிறைக்குள் சந்தித்திருக்கிறேன்.

நான் செத்துவிட்டேன் என்ற நாசகாரமான வதந்திகளைக் கேட்டு, மனம் உடைந்து, தனிச்சிறை அறையில் அவள் தத்தளித்துப் போராடிக்கொண்டிருந்த பிறகு ஒரு நாள் அது நடந்தது.

அவளை என் அறைக்கு அழைத்து வந்தார்கள். இரகசியப் பொலிஸ் அதிகாரி அவளை என் எதிரே அமரவைத்தான்.

அங்குமிங்கும் உலாவியவாறு அவளிடம் கூறினான்;

"இவனுக்கு நீ புத்தி சொல்! ஒழுங்காக நடந்து கொள்ளும்படி எடுத்துக்கூறு! இவன் தன்னைப் பற்றி நினைக்கவில்லையென்றால் உன்னைப் பற்றியாவது நினைக்கும்படி தூண்டு!

ஒரு மணி நேரம் அவகாசம் தருகிறேன். நன்றாகச் சிந்தித்துப்பார்!

நீங்கள் இன்னமும் பிடிவாதம் பிடித்தால் இன்று இரவு இருவரையும் ஒன்றாகவே நிறுத்தி சுட்டுக் கொன்று விடுவோம்!"

என் இனியவள், என் அருமைத் தோழி, என் உயிர் மனைவி- அதைக் கேட்டு கலங்கி விட்டாள். துடிதுடித்துப் போனாள் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை.

அவள் சொன்னாள்- திடமான குரலில் சொன்னாள்:

"இப்படிப்பேசி என்னைப் பயமுறுத்திவிடலாம் என்று நினைக்காதீர்கள். அதுதான் என் கடைசி விருப்பம்; பெரிய ஆசை. இவரைச் சுட்டுக் கொன்றால் என்னையும் சுட்டுக் கொன்று விடுங்கள்!"

இதுதான் என் குஸ்தினா! ஆழ்ந்த அன்பு! மகத்தான உறுதி!

குஸ்தினா! இவர்கள் நம் உயிரைப் பருகலாம்; இல்லையா? ஆனால் நம் காதலையோ, மானத்தையோ பறிக்க முடியாது.

இவையெல்லாம் கடந்தபிறகு, நாங்கள் எப்போதாவது சந்திப்போமானால் எப்படி வாழ்வோம் என்று உங்களால் நினைத்துப் பார்க்க முடியுமா?

நாங்கள் ஆசையுடன் நேசித்த இலட்சியங்களை அடைந்துவிட்ட பிறகு மிகப் பொறுமையுடன் நாங்கள் உழைத்துவரும் இலட்சியங்கள் பூர்த்தியான பின்பு, இப்போது எங்கள் உயிர்களைக் காணிக்கையாகக் கேட்கும் இலட்சியங்கள் ஈடேறிய பிறகு மீண்டும் கூடினால் எப்படி வாழ்வோம்?

நாங்கள் செத்துவிட்டாலும் உங்களுடைய மகத்தான மகிழ்ச்சியில் துளிப்பங்கு கொள்வோம்.

ஏனெனில் அதில் நாங்கள் எங்கள் உயிர்களை உரமாகப் போட்டிருக்கிறோம். விட்டுப் பிரிய மனமில்லாவிட்டாலும் அது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

நாங்கள் இருவரும் விடை பெற்றுக் கொள்வதற்கோ,கட்டியணைத்துக் கொள்வதற்கோ கையைப் பிடித்து குலுக்குவதற்கோகூட அவர்கள் அனுமதி அளிக்கவில்லை.

குஸ்தினா! நாம் ஒருவரை ஒருவர் இனி மீண்டும் சந்திக்கவே மாட்டோம் என்பது உனக்குத் தெரியும்; எனக்கும் தெரியும்.

இருந்தாலும், என் இனிய குஸ்தினா! வெகு தொலைவில் நின்று, "அன்பே, போய் வாருங்கள்! மீண்டும் கூடும் வரை!" என்று நீ கூறுவதை நான் கேட் கிறேன்.

என் குஸ்தினா! வணக்கம்! மீண்டும் கூடும்வரை!

(தொடர்ந்து வரும்)

# யார் அவள்?

ஏ.பி.வி கோமஸ்



தியாகு, கண்டியில் 'டிக்கற்' எடுத்துக்கொண்டு மாத்தளை பஸ்ஸில் ஏறினான்.

தியாகு மட்டக்களப்பு சிவானந்தாவிலிருந்து பேராதனை பல்கலைக்கழகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவன். நண்பர்களிடம் பழகுவதில் அலாதி விருப்பமுடையவன்; பண்பானவன்; பாசம் நிறைந்தவன். அன்பின் இலக்கணத்தை நன்கறிந்தவன்.

கலைப்பிரிவில் இரண்டாமாண்டு படித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது பல்கலைக்கழகத்தில் விடுமுறை காலம். ஏதோ தன் நண்பன் பீட்டர் வீட்டுக்கு, மாத்தளைக்குப் போய் வரவேண்டும் என்று எண்ணினான். மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கு வந்து மாத்தளை போக பஸ் ஏறிவந்தான்.

தான் வருவதாக, அன்பால் பிணைக்கப்பட்டிருந்த பீட்டருக்கு கடிதம் எழுதி, மாத்தளையில் பஸ் நிற்குமிடத்தில் வந்து தன்னை சந்திக்கும்படி கேட்டிருந்தான்.

பஸ்ஸுக்குள் அழகான பெண் வீற்றிருந்தாள். பதினாறு பதினேழு வயதிருக்கும். பருவமங்கை; நீண்ட கூந்தல்; சற்றே நீண்ட மூக்கு, ரோஜா மலர் முகம்; மா நிறம்; மதுரமான கன்னங்கள். ஒரு முறை பார்த்தால் மீண்டும், மீண்டும் பார்க்கத் தூண்டும் முகவிலாசம்.

பஸ்ஸில், தியாகுவுக்குப் பின்னாலிருந்த ஆசனத்திலேயே அவள் அமர்ந்திருந்தாள்.

அதுவும் வசதிதான்- நினைத்த நேரத்திலெல்லாம் திரும்பிப்பார்த்துக் கொள்ளலாம்தானே!

கண்டதும் காதல்.... சே.... அப்படியிருக்காது. ஆனால் அவன் மனத்தில் ஒரு கிலேசம். ஒரு துள்ளல்; ஏதோ ஒரு வருடல். தியாகு, பல்கலைக்கழகத்தில் நூற்றுக் கணக்கான இளம் பெண்களுடன் பழகியிருந்தாலும் இது போல் ஓர் எண்ணம், ஓர் உணர்ச்சி, ஓர் உந்துதல் எழுந்ததேயில்லை. இதுதான் காதலா? இது தான் கடவுளின் சித்தமா? இயற்கையின் நியதியா?

அடிக்கொரு தடவை, திரும்பிப்பார்த்துக் கொண்டான். கையிலிருந்த 'தினமுரசு' காற்றிலாடிக்கொண்டிருந்தது. சிந்தை அதிலே செலுத்தப்படவேயில்லை.

'அவனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' என்றிருக்கவில்லை. அவன் நோக்கினாலும் அவள் வெளியேயே பார்த்துக் கொண்டிருந்தாள். கவனித்ததாகவே தெரியவில்லை.

"மாத்தளை பெரியாஸ்பத்திரிகிட்ட என்னை இறக்கி விட்டுடுங்க" என்று ஏலவே பஸ் கண்டக்டரிடம் சொல்லியிருந்தான்.

நண்பன் பீட்டர்-அவனை அங்கே தான் சந்திப்பதாக இருந்தது.

பஸ் நின்றது. அவள் இறங்கி நடந்தாள்.

"இதுதான் ஆஸ்பத்திரி சந்தி- இறங்குங்க" என்ற ஒலிகேட்டு தியாகு இறங்கினான்.

அங்குமிங்கும் நண்பன் இருக்கிறானா என்று பார்த்துக் கொண்டே அவள் போகும் திசையையும் அவதானித்தான். அவள் தன் பாட்டுக்குப்போய்க் கொண்டிருந்தாள்.

ஆனால் நண்பன்...?

அங்குமிங்கும் பார்த்தான். காணவில்லையே.. ஏதோ ஒரு உந்துதல். நண்பன் எதிர்ப் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டான்.

"ஃபிரண்ட் ஒருத்தன் வந்தான்; அவனோடு பேசிக் கொண்டிருந்துட்டு வாறன்," என்றான் பீட்டர்.

தியாகுவின் மனதில் ஏதோ ஒரு ஆவல்.

"என்ன போவோமா?" என்று கேட்டுக் கொண்டே பீட்டர் அந்த அழகி போன பாதையிலேயே நடந்தான். தியாகுவின் மனத்தில் ஏதோ ஒரு குளிர்ச்சி. நல்லவேளை அவள் போய்க் கொண்டிருந்தாள்.

"அந்தப் பெண்ணும் இந்த பஸ்ஸில் தான்டா வந்தா. யாருடா அது?"

"ஏன்டா அவ்வளவு அக்கறை?"

"இல்ல சும்மாதான்...." சமாளித்தான் தியாகு. பீட்டர் மெளனமாக நடந்தான்.

'மாத்துங்கையா' கடைவந்தது. "தியாகு கொஞ்சம் நில். சில சாமான்கள் வாங்கயிருக்கு. வாங்கிட்டு வந்திடுறேன்." என்று பீட்டர் தாமதித்தான்.

தியாகுவின் மனம் ஏனோ அடித்துக் கொண்டது. 'இந்த நேரம் பார்த்து இவன்..... அவள் மறைந்து விடுவாளே....'

பலாமரத்துக்கடியில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டாள். 'என்ன செய் வது....காலம்' என்று எண்ணினான். ஒரு நீண்ட பெருமூச்சுடன் தியாகு மெளனமானான்.

பீட்டர் தியாகுவுடன் வீட்டை அடைந்தான். சிறிய வீடுதான்.

"ப்.... பூ..... சரியான களைப்பாக இருக்கு...... கொஞ்சம் தண்ணியிருந்தா நல்லது." தியாகு சொன்னான்.

"ரோசி......கொஞ்சம் தண்ணி கொண்டு வா...." பீட்டர் தன் தங்கைக்கு குரல் கொடுத்தான்.

தண்ணீர் கிளாசுடன் ரோசி வந்தாள். கண்ட தியாகு சிலையானான்.

ரோசிதான் பஸ்ஸில் கண்ட பெண் அழகி.

# பாடாத காவியம்

**~தமிழோவியன்~**

**"கார்னிவேல் களியாட்டம் பார்க்க என் கரங்களைப் பற்றியவாறு நடந்தாள் 'ஞானா.' நாங்கள் சொர்க்கத்தில் மிதந்தோம்"**

ஓடிவந்து பயணிகள் வண்டியில் ஏறினேன். "சிரமத்தைப் பார்க்காமல் எப்படியும் உள்ளுக்குள் நுழைந்திடுங்க" வழியனுப்ப வந்த நண்பர் கருணாகரன் என்னைப் பார்த்துச் சொன்னார்.

வாரக் கடைசி. சம்பள வாரம். கூட்டத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? ஒரே நெரிசல்...! பயணிகள் எப்பாடுபட்டாலும் கவலையில்லை. பணம் வந்து சேர்ந்தால் போதும். இதுதான் வண்டிச் சொந்தக்காரர்களின் முடிவு. இதை நினைவு படுத்தும் வகையில், பயணிகள் மூச்சுவிடவே சங்கடப்பட்டு, வியர்த்துக் கொட்டும் நிலையில் திணறிக் கொண்டிருக்கையில், கீழே நின்றவாறு,

"பொயிட்டு வாங்க ஐயா...!"-என்று நண்பர் கருணாகரன் கையை ஆட்டினார்.

இன்னும் நாலுபேராவது வந்து ஏற மாட்டார்களா? என்ற ஏக்கத்தோடு, பண்டாரவளையிலிருந்து பயணிகள் வண்டி பதுளையை நோக்கி, முக்கி முனகியபடி புறப்பட்டது. பத்துமாதக்காரியைப்போல் நின்று கொண்ட எனது கையிலிருந்த பையை வலது பக்க ஆசனத்திலிருந்த அன்பர் கையில் வைத்தேன். வேண்டா வெறுப்பாக அவர் அதை வாங்கி மடியில் வைத்துக் கொண்டார்.

"பையில் குண்டிருக்கா?"

பையைத் தடவிப் பார்த்த அன்பர் கேலியாகக் கேட்டார். எனக்கு சுருக்கென்றது. சிரித்தேன்.

"சந்தேகமாக இருந்தால் திறந்து பாருங்கள்!" உண்மையின் உணர்வு என்னை உடனே பதில் சொல்லத் தூண்டியது.

எனது பேச்சைக் கேட்ட அன்பரின் பக்கத்தில் அமர்ந்திருந்த பெண்மணி, என்னைப் பார்த்தார். அவரது விழிகள் துடித்தன. வியப்பின் ரேகை அந்த முகத்தில் விரவின. ஆச்சரியப்பட்ட கண்கள், என்னை உற்றுப் பார்த்தன. அந்தப் பழகிய அழகிய முகம் மறுபக்கம் திரும்பியது. நெஞ்சம் விம்மியது! பெருமூச்சு விட்டது! பேதலித்தது!

சற்று நேரம் அமைதி நிலவியது! மீண்டும் அந்த அறிந்தமுகம், திரும்பி, நிமிர்ந்து என்னைப் பார்த்தது.

'ஏன், என்னை இன்னும் தெரியவில்லையா?' அந்த பெண்மணியின் பார்வை தடுமாறிய என்னைப் பார்த்துக் கேட்பது போல் மருண்டது.

முன் ஆசனத்தில் சிரித்துக் கதைத்தபடி வீற்றிருந்த ஒரு ஆண், இரு பெண் பிள்ளைகள் என்னைப் பார்த்தனர். "அம்மா, குடிக்க தண்ணீர் தாங்க!" முன் ஆசனத்திலிருந்த ஆண்பிள்ளை என்னைப் பார்த்தபடி, அந்தப் பெண்ணிடம் கேட்டான்.

"ஞானா, பேக்கைத்திறந்து திலக்கைக்கு தண்ணீரைக் கொடுங்க!" எனது வலது பக்கமிருந்த அந்த மனிதர்-மனைவி ஞானாவைத் தொட்டு, மகனுக்கு நீரை ஊற்றிக் கொடுக்கச் சொன்னார்.

"ஞானா!"- இப்படி அந்த அன்பர் சொன்னதும் நான் தேடியதைப் பிடித்து



விட்டேன். அன்புகனிந்த முகத்தால், என்னை ஆர்வத்தோடு நோக்கிய அந்தப் பெண், 'ஞானா! என்னும் ஞானாவதி'தான் என்ற அடையாளம் எனது இதயத்தைத் தாக்கி தடவியது! தடுமாற வைத்தது!

அகன்று உயர்ந்த மலைகளின் நடுமையந்தான்-நான் பிறந்து, வளர்ந்து, பயின்ற தோட்டம் இருக்கும் இடம். சவுக்கு மரங்கள் வரிசையாக வளர்ந்து காட்சி தரும் கோலம், இரதங்கள் மெதுவாக அசைந்து ஊர்வலம் போவது போல் தெரியும். இதனூடறுத்துச் செல்லும் குறுக்குப் பாதையின் ஏற்றம் நான் நாள் தோறும் பாடிக்கொண்டு ஞானாவதியின் நாட்டு வீட்டுக்குப் போகும் வழி. எத்தனையோ லயங்கள் அங்கு மிங்குமாக இன்னும் ஏகாதிபத்தியம் சாகவில்லை என்பதை எடுத்துக் காட்டியபடி. உள்ளன. இது என்ன தூரமா?

குணபால மேசன் எனது அண்ணனிடம் வீடுவந்து வேண்டிக் கேட்டபடி நான் ஞானாவதிக்கு ஆங்கிலமும் தமிழும் போதித்தேன். எனக்கு ஞானா சிங்களம் எழுதக் கற்றுக் கொடுத்தாள். பாரதி கல்லூரியில் பயிற்றுவிக்கும் ஆசான் அன்று நான்.

தொடாத வாலிபம் என்னைத் துடிப்பு மிக்க காளையாக நடமாடச் செய்தது. மற்ற எல்லா வேலைகளையும் தட்டி, ஒதுக்கி விட்டு, குணபால மேசன் வீட்டுக்கு ஓடுவது; எனக்கு அன்று கடவுளிட்ட கட்டளையாகப் பட்டது. ஞானாவதியை வீட்டார் "ஞானா" என்றழைப்பதே வழக்கம். "சேர்" என்று அவள் என்னைக் கூப்பிட்டபடி தேநீரும் கித்துல் கருப்பட்டியும் தருவது தினசரி உபசரிப்பு. ஆகக் கடைக்குட்டி ஞானாவதி. அவளின் தாய் வயலுக்கும்-சேனைக்கும் சென்று அந்திப் பொழுதில் தான் வீடு வருவாள்.

★ ★ ★

அவளுடைய வீட்டுக்குப் பக்கம் உள்ள கிராமப்பள்ளிக் கூடத்தில் ஞானா இப்போது ஆசிரியை. வாகனப் போக்குவரத்திற்கு வசதியற்ற ஈனராங்கலக் கிராமத்தில், ஞானாவதி ஆங்கிலம் அறிந்த ஆசிரியையாக மதிக்கப்பட்டாள்.

குணபாலமேசன் குடும்பத்தாருக்கு இச்செய்தி- ஒரே பாராட்டாகப் பரவசமளித்தது. இதனால் அவர்கள் என்னைக் கண்டால், பூரித்து நிற்பார்கள்.

சித்திரைப் பௌர்ணமி விசாகைத் திருநாள்- அதுதான் வெசாக் பண்டிகை அன்று-

பதுளை முத்தியாங்கன விகாரை, வெசாக் திருநாளை ஒட்டி புனிதமயமாகத் திகழ்ந்தது. வெசாக் தோரணங்களும், ஒளியளிக்கும் கூடுகளும் காண்போர்களின் உள்ளத்தில் பக்தி உணர்வை எழச் செய்தன. முன்னேற்பாடின்படி, ஆலய முகப்பில் காத்து நின்ற ஞானா, வெள்ளையுடையில் விரியுலகின் அழகின் உச்சியாக, உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளாக, என்னருகே ஓடி வந்தாள்.

பக்திப் பரவசமான சூழ்நிலை, புத்த பெருமானின் அன்புருவான தரிசனம் பெற பூக்களை ஏந்திச் செல்லும் பக்தர்களாக நானும் ஞானாவும் நடந்தோம். எவரையும் பற்றி நாங்கள் எண்ணவே இல்லை. விகாரையின் அருகில் சென்று பூக்களைச் சொரிந்தோம். மெழுகுவர்த்தி, பத்தி பற்ற வைத்தோம். வலம் வந்தோம். எல்லோரையும்போல் இருவரும் அமர்ந்து சித்தம் ஒருமித்து புத்த பெருமானை நினைந்து வழிபட்டோம். கோயிலைச் சுற்றி இருவருமாகவே வழிபட்டு வந்தோம். ஈனாராங்கலை கிராமத்தவர்கள், எனது தோட்டத்தவர்கள் எத்தனை பேர்கள் எங்களைக் கண்டார்களோ?

ஏனையவர்கள் எங்களை இளந்தம்பதிகளாக எண்ணினார்களோ?

கார்னிவேல்- களியாட்டம் பார்க்க, என் கரங்களைப் பற்றியவளாய், தோளோடு தோள் சாய்த்து நடந்தாள் ஞானா. சொர்க்கத்தில் மிதந்தோம்! நெடுநாள் சந்திப்பு. நெருங்கிய உறவிற்கு இணைப்பு! ஞானாவும் நானும் இதை நடப்பாக்கிக் கொண்டிருந்தோம்.

'83 ஆடிக் கலவரம்' எல்லோரையும் பெரும் நெருப்பாக எரித்தது. 'அண்ணன்-தம்பி மாமம்-மச்சான்' என்றந்த உறவு முறையில் பழகிக் களித்த எனது தோட்டத்தவர்களும், ஞானாவின் கிராமத்தவர்களும் கீரியும்-பாம்புமாக சீறிக் கொண்டனர்.

எங்கள் தோட்டத்திலுள்ள பத்தாம் நம்பர் லயத்தில் உள்ளவர்களை அடித்து விரட்டி, உள்ளதை எல்லாம் சுருட்டிக்கொண்டு தீ மூட்டிய கும்பலுக்கு, ஞானாவின் அண்ணன் தான் தளபதி.

பச்சை மலையிலுள்ள கணக்கப்பிள்ளை எனது மச்சான். அவரது மனைவி என் அக்காள். அவர்களை அரட்டி, மிரட்டி, இரவோடு இரவாக வெளியேற்றிவிட்டு டி.வி.,ரேடியோ, பணம், நகைகள் எல்லாம் சூறையாடியதும் ஞானாவின் அண்ணனின் கும்பல்தான். எல்லாம் நம்ப முடியாதபடி நடந்து-குமைந்தது. நீர் நெருப்பானது. நான் முன்போல், நெஞ்சங்கனிந்த பாசநிலையில் ஞானா வீட்டுக்கு, அந்த நாட்டுக்குப் போக இயலவில்லை.

ஞானாவும், அவளின் தாயாரும் சோறு கட்டிக்கொண்டும், பாணி ஒரு போத்தலோடும், கித்துல் கருப்பட்டியோடும் என் வீட்டுக்கு வந்தபோது, நான் அகதி முகாமில் உள்ள என் மாமா-மாமி, குடும்பத்தாரைத் தேடிப்போய்விட்டேன்.

கலங்கிய கண்களோடு "சேரை வரச் சொல்லுங்கள் அக்கா!"-என்றாளாம் ஞானாவதி.

"அடுத்த மாதம் ஞானா ஆங்கில ஆசிரியைக் கலாசாலைக்குப் பயிற்சி பெறப் போகிறா"-ஞானாவின் தாயார் அண்ணியிடம் சொல்லி ஆனந்தமடைந்தாராம்.

ஒட்டிக் கொள்ளவே முடியாத சுட்ட மண்ணும் சுடாத மண்ணுமாக நாங்கள் எட்டிப்போய்விட்டோம்.

பழைய சுவடுகளைப் புரட்டிப் பார்த்தது எனது இதயம்.

"ஞானா! பதுளை வந்துட்டோம்! என்ன யோசனை? இறங்குங்க..."

ஞானாவின் கணவன் கைப்பையை என்னிடம் நீட்டிவிட்டு, மனைவி, மக்களோடு ஒரு சேர இறங்கி நடந்தான். என்னைத் திரும்பிப் பார்த்த ஞானா, அவர்கள் பின்னே வேகமாக ஓடினாள்.

---

# அவளுக்கு டாட்டா

**கரீமா மாறுமுகம்**

**அவளைக் காதலிக்க ஆரம்பித்து ஐந்து வருடங்கள்.... கத்தரிக்க பல முறை முயற்சி செய்தான்.**

இரவு பாதியை விழுங்கியிருந்தது. பாஸ்கரன் தவித்துக் கொண்டிருந்தான். நித்திரை நெருங்க மறுத்தது. இதயம் விழித்திருந்தது. இமை மட்டும் மூடி என்ன பயன்...?

கட்டிலில் இருந்து எழுந்தான். லைற் போட நினைத்துவிட்டு கட்டிலிலேயே அமர்ந்திருந்தான். தன்னைப் பற்றிக் கொஞ்சம் கிளறிப் பார்த்தான். வானொலி அறிவிப்பாளன் பாஸ்கரன். அத்தோடு பாடகனுங் கூட.

"இன்னும்....தொடராதா....?"

அவனால் முடிவெடுக்க முடியவில்லை. இன்னும்.....இன்னும் யோசித்தான். தனக்குள் தான் பேசினான்.

குழம்பினான் பாஸ்கரன். நினைவுகள் அவனைக் குழப்பின.

"நீங்....க இத....உட்டுப் போடுங்....க" அவனின் மேலதிகாரி மட்டுமா? அவனை அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் அத்தனை பேர்களும் சொன்னார்கள்.

அவன் அவளைக் காதலிக்க ஆரம்பித்து ஐந்து வருடங்களாகின்றன. அவளைக் கத்தரிப்பதற்கு பலமுறை முயற்சி செய்திருக்கின்றான்.

முடியவில்லை.

அவளைத் தொடுவதற்கு முன் கெட்ட பழக்கம் என்று யோசித்திருந்தால் அவன் அவமானப்பட்டிருக்கத் தேவையில்லை.

அவளோடு பழகும்போது நோக்கும் விழிகள் உமிழ்கின்றன.

"இன்டைக்கு ஒரு முடிவெடுத்தாகணும்!"

எழுந்தான். பேனையும் தாளும் எடுத்தான். லைற்றைப் போட்டான். எண்ணங்களைக் காகிதத்தில் விதைத்தான். நன்மைகள் தீமைகள் என்று தரம் பிரித்தான்.

தீமைகளின் வரிசைதான் நீண்டு



கிடந்தது. வெறும்போலிச் சந்தோஷ உணர்வு மட்டுந்தான் நன்மையாகப்பட்டது.

உடனடியாகக் கத்தரிப்பது சாதனைதான்! அதுதான் அவனின் சோதனையாகவும் உள்ளது.

அவனின் முடிவு பற்றி விளம்பரப் படுத்த வேண்டும். அதற்காக அவனின் நண்பன் நாசரிடம் சென்றான்.

"ஓ...! அப்படியா...?"

"இதப் போல....ஆயிரம் பேரப் பாத்திருக்கன்...."

"ஹிஹ்ஹி....ஹிஹ்ஹி...ஹி...நடக்கிற விசயமா....இது....?"

"ஒன்னப் பத்தி எனக்கா தெரியா.... எத்தன நாளைக்கெண்டு பாப்பமே..?"

"நீயாவது விடுறதாவது....?"

"உலகமழிஞ்சாலும் ஒன்னால அது முடியா...?"

அவனின் நண்பர்களுடைய கருத்துக்கள்.

'என்னை யார் நம்பாட்டியும்....என்ன நான்.... நம்புறன்....'

தனக்குள் இந்த வரிகளை எழுதினான் பாஸ்கரன். வீட்டுக்கு வந்தான்.

கைகால் முகம் கழுவினான். இதயத்தைக் கழுவுவதுபோல் இருந்தது. பசித்தது.

மேசையில் சாப்பாடு காத்திருந்தது.

யாரிடமும் ஒன்றும் பேசவில்லை. அமைதியாக இருந்து சாப்பிட்டான். வழமையைவிட கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டது வியப்பைக் கொடுத்தது அவனுக்கு.

சாப்பிட்டு முடிந்ததும் அவனால் இருக்க முடியவில்லை. பொறுக்க முடியவில்லை. அவளைச் சந்தித்து முத்தங் கொடுத்தாக வேண்டும் போலிருந்தது. சிறிது நேரம் அங்குமிங்கும் உலாவினான். உணர்வு தணிந்தது. ஆனால்; சாப்பிட்டவற்றை வாந்தியெடுத்தான்.

"ஏ...சத்தியெடுக்குறீங்க....?"

மனைவி கேட்டாள். அந்த நிலையிலும் அவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

'பிரண்ட்ஸ்ஸே நம்பல்ல; இவளா நம்பப் போறாள்...?' நினைத்தான்.

என்றாலும் சொன்னான். அந்த உறுதியான இறுதியான உண்மையைச் சொன்னான்.

"நான்.....நான் சிகரட் பத்துறத உட்டுட்டன்." அவளின் இதயம் கனி உண்டது போலானது. சுவனம் கண்டது போலானது.

"அப்புடியா...? எவ்வளவு... எவ்....வளவு....சந்தோஷமா இருக்கு...தெரியுமா...?"

"ஒனக்கு சந்தோஷம்...எனக்கு...?"

"உங்களுக்கு ஒண்டுமாகா....இந்தாங்க இதத் தின்னுங்க." அவள் பாக்குக்கொடுத்தாள். அவன் மென்றான்.

"இனிக் காசு மிஞ்சும்...." அவன் தான் சொன்னான்.

"காசா...? அத உடுங்க...அத எப்பவும் தேடிக்கலாம். உங்கட உடம்புத்தான்.... எனக்கு... முக்கியம்...." அவன் அந்த வார்த்தைகளைக் கேட்டு தேனாக இனித்தான்.

"நான்...இன்னமும் வாழணும்... என்ர... மனைவிக்காக...! இன்னமும் வாழணும்...!"

அவனின் உயிர் உணர்வு அத்தனையும் பேசின.

**"டோன்ற் கிஸ் சிகரட்"**

---

# ஆசை மயக்கம்

**பாண்டியூர் கனி**

இளைய சூரியன் மட்டுவாவியில் முகம் பார்த்துக்கொண்டிருந்த காலைப் பொழுது. மெல்லிய வெயிலின் கதகதப்பில் தனியார் பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான் அரவிந்தன். அவனது மனமோ இரண்டடி முன்னே நடந்து கொண்டிருந்தது.

'கல்முனை' எனும் பெயர்ப்பலகையோடு காத்துக்கிடந்த வேன்களைக் கண்டதும்; இராணுவ முகாமிலிருந்து விடுதலையாகி வெளியே வரும் இளைஞனின் மனதைப் போல மகிழ்ச்சி ஊற்றெடுத்தது அவனுக்கு.

உள்ளே ஏறியவன் யன்னலோர இருக்கையொன்றில் அமர்ந்துகொண்டான். வேன் நிரம்புவதற்கு சுமார் முப்பது



நிமிடங்கள் கடக்க வேண்டியிருந்து. அந்த முப்பது நிமிடங்களில் முன்னூறு தடவை கைக்கடிகாரத்தைப் பார்த்திருப்பான். அத்தனை ஆதங்கம் அரவிந்தனுக்கு.

வேன் புறப்பட்டது. "ஆனந்தம் ஆனந்தம் பாடும், மனம் ஆசை உஞ்சலில் ஆடும்"... பாடலும் ஒலிக்கத் தொடங்கியது. ஆஹா! இதுவல்லவா பயணம்! அரவிந்தனது மனமும் ஆசை ஊஞ்சலில்தானே ஆடிக் கொண்டிருக்கிறது.

"மேலேறுங்க, மேலேறுங்க" கிளீனர் வினாடிக்கொருதடவை கத்திக்கொண்டே பயணிகளை ஏற்றினான். வேன் நிரம்பி வழிவதைப்பார்த்து ஏறுவதற்குத் தயங்கியவர்களிடம், "சீற்றிருக்கு ஏறுங்க" என்றும் கூறிக்கொண்டான். "சீற்றிருக்கு, ஆனால் அதிலே ஆளிருக்கு" என்றான் ஒரு குறும்புக்கார வாலிபன். இவையெல்லாம் அரவிந்தனுக்கு கனவுலகில் நடப்பவை போலவே இருந்தன.

அவனது சிந்தனையெல்லாம் கல்முனைக் கணனி வகுப்பைச் சுற்றியே வட்டமடித்தன. எல்லாம் அவளால்தான் (?). அவளுக்கு எத்தனையோ கடிதங்கள் அனுப்பினான்.. கடிதங்களா அவை? காதல் விண்ணப்பங்கள். அத்தனைக்கும் "கணனி வகுப்பில் நாளை சந்திக்கவும்" என்று ஒரே வரியில் ஒரு பதில் அனுப்பியிருந்தாள் நேற்று. அரவிந்தனைப் பொறுத்தவரையில் அந்த நேற்று, தபாற்காரன், கடிதம், இரண்டு ரூபா முத்திரை அத்தனையுமே அழகானவை. வாழ்க்கையில் மறக்கவே முடியாதவை என்று எண்ணிக்கொண்டே கல்முனையை வந்தடைந்தவன், இதயக்குடிசைக்குள்ளே பலவிதமான ராகங்கள் அலைபாய கணனி வகுப்பிற்குள் கால் வைத்தான்.

அவள்... அவளேதான்! மயில் நீலப் பஞ்சாபி உடையில் புதைந்திருந்தாள். முன்னர் போல் குனிந்த தலை, முகம் தவறிய பார்வையெல்லாம் இல்லை. அரவிந்தனை நேராகப் பார்த்தாள்.

"என்ன கதைக்கவேணும்?" முதல் வசனமே கேள்வியாகப் பாய்ந்தது, அவளிடமிருந்து. சற்றுத்தயங்கிய அரவிந்தன்,

"நான் உங்கள விரும்புறன்" என்றான். அவள் முகத்திலோ எந்தவித மாற்றமுமில்லை.

"எப்ப கல்யாணம்"? இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பாராத அரவிந்தன் அதிர்ந்து போய் விட்டான், சில வினாடிகளை மௌனம் குடித்தபின்னர்,

"நான் வெளிநாடு போகப் போறன்; அஞ்சு வருசத்துக்குப் பிறகு வந்து..." அரவிந்தன் வசனத்தை முடிக்கவில்லை.

"அஞ்சு வருசத்துக்குப்பிறகு நான் இதே வடிவோட இருப்பனெண்டு என்ன நிச்சயம்? உங்கட மனம் மாறாதெண்டு யார் கண்டது? அஞ்சு வருசம் உங்களுக்காகவே காத்திருந்து, ஒருவேள நீங்க வேணாமெண்டால் என்ர வாழ்க்கைக்கு என்ன முடிவு? என்னில விருப்பமெண்டா இப்ப முடியுங்க, இல்லாட்டி தொல்லை தராதீங்க!" இடைவெளி விடாமல் பேசிமுடித்தவள் இடத்தைவிட்டு நகர்ந்து சென்றாள். அந்த நடையில் தளர்வு இல்லை.

அவளது வார்த்தைகளில்தான் எத்தனை உண்மைகள். இப்போது அவளைத் திருமணம் செய்துகொள்ள, வாழ்க்கை நடத்த அரவிந்தனுக்குச் சக்தி இருக்கிறதா?

இன்னும் ஐந்து வருடங்கள் கடந்து சென்றபின், அவளுடைய அழகு குறைந்து போனால் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அவனுக்கு உண்டா? அவனது காதலின் எடை என்ன? சிந்தித்தான்.

அவள் வீசிச்சென்ற வார்த்தைக் காற்றில் ஆசைமயக்கம் கலைய நின்றான் அரவிந்தன்.

# பலிக்காத சாபம்!

மானோ, மயிலோ, மயக்கும் இவள்
மனிதப் பெண்ணோ? மாயத் தேவதையோ?
சகுந்தலையின் அழகில் துஷ்யந்தன் வியந்தான்.

"யார் நீர்? இங்கே ஏன் வந்தீர்?
யார் நீர்? பின்னால் ஏன் வந்தீர்?"
சகுந்தலை சினம் கொண்டாள்.

"நான் யார் என்பதை மறந்தேனே
நான்தான் உன்னிடம் தொலைந்தேனே
நீதான் நானாய் மாறிவிட்டேன்
நீதான் சொல்லு யாரென்று?"

"பின்னால் வந்தீர் பொறுத்திருந்தேன்
பிதற்றல் நிறுத்தி மெய் பேசும்
கண்ணால் என்னை உண்ணாமல்
கண்ணியம் காத்து மெய் சொல்க!"

"கண்ணின் மீது குற்றமில்லை-வண்ணப்
பெண்ணின் அழகை உண்பதற்கு
எண்ணம் எழுந்து விரட்டுமடி!"

"உண்ணும் கனியோ பெண் உமக்கு?
கண்ணும், பேச்சும் பிழை உமக்கு!"

"கண்ணும் கண்ணும் நோக்கியதால்
விண்ணும், மண்ணும் மறைந்தாச்சு!
பெண்ணே நீதான் எங்கும் நிறைந்தாச்சு!
எங்கும் நீதான், எனக்கு நீதான்;
பொங்கும் அழகே மறுக்காதே!
என்னை மறந்தேன், உன்னை நினைத்தேன்
கண்ணைக் குற்றம் சொல்லாதே
பெண்ணே என்னைப் பிரிக்காதே!"

துஷ்யந்தன் கெஞ்சினான்,
தூயவார்த்தைகளால் கொஞ்சினான்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
உரைப்பார் உரைத்தால் இதயமும் கனியும்
சகுந்தலை இதயம் நழுவியது
சம்மதம் புன்னகை சொல்லியது!

"மறப்பீரோ என்னை?
துறப்பீரோ உறவை?"
இரு தேகம் கலந்த வேளையிலே
சந்தேகம் கேட்டாள் சகுந்தலையாள்!

"மறப்பதா? அடியே மாணிக்கமே!
உயிர் துறப்பதேயானாலும்
மறக்காத உறவடி நம் உறவு!"


"வான் உள்ளவரை வாழுமா
தேனாக இனிக்கும் இந்தக் காதல்?"

"வானே இடிந்து விழுந்தாலும்
தேன் அள்ளிக் கொண்டிருப்போம் நாம் மட்டும்.
வையகமே அழிந்து போனாலும்
வாழ்ந்து கொண்டிருக்கும் நம் காதல் மட்டும்!
வாடாத மலரே! வற்றாத ஊற்றே!
யாரும் தேடாத எல்லைக்கு செல்வோம் வா!"

அங்கங்கள் வேக ஒரு யாகம்!
அங்கங்கள் தேய்ந்து சந்தனவாசமடித்தன!
'தங்கமே!' என்றவன் உதடுகள் அழைக்க
தஞ்சமே நீயென தன்னைக் கொடுத்தனள்!

வனமானைத் துரத்தி வந்தவன்
பெண் மானைக் கலந்து நின்றான்
வேட்டை நடத்த காட்டுக்கு வந்தவன்
மனக் கூட்டைத் திறந்து யாகம் நடத்தினான்!

'சென்று வருகிறேன், சில நாள் பொறுத்திரு!
திரும்பிவரும்வரை திடமாய்க் காத்திரு!'



## இலக்கிய நயம்

துஷ்யந்தன் சொல்ல சகுந்தலை கலங்கினாள்.
உள்ளே அழுதவள் உதட்டால் சிரித்தாள்.

"சென்று வாரும், என்று நீர் வருவீரோ
அன்றுதான் திரும்பும் என் உயிரும்!
உதிர்ந்த பூ மீண்டும் கொடி சேராது
விழுந்த கனி மீண்டும் மரத்திலேறாது
உமக்கென ஆனேன், இனி நீரின்றி
உயிர் வாழ நினைத்தாலும் முடியாது!"

தழுவிப் பிரிந்தனர். துஷ்யந்தன் சென்றனன்.
தணலிடையிட்ட மெழுகானாள் சகுந்தலை.

"சகுந்தலை! அடியே சகுந்தலை!"
துர்வாச முனிவர் உரத்து அழைத்தார்.
"மகளே சகுந்தலை! மகளே சகுந்தலை!"
மறுபடி அழைத்து எதிரே வந்தார்.

சகுந்தலைதானிவள்-ஆனால்
சகுந்தலையாக இல்லை!

நினைவினில் மூழ்கிய சகுந்தலை
நேரில் நின்ற முனிவரை அறியாள்.
அழைத்ததை அறியாள்! வந்ததை அறியாள்!
அணைத்தவன் நினைவில் ஆழ்ந்துபோயிருந்தாள்!

"என்னை மறந்தாள், என் குரல் மறந்தாள்
உன்னை நினைத்து என்னை மறந்தாள்
தந்தையை மறந்தாள், தன்னையே மறந்தாள்
மறந்துபோ துஷ்யந்தா!- என் மகளை
நீ மறந்துபோ துஷ்யந்தா!"
முனிவரின் கோபம் சாபமானது.

சகுந்தலை நகைத்தாள்.
"காலம் கடந்து வாழும் காதலை
ஒரு சாபமா அழிக்கும்?"

நெற்றி நரம்புகள் புடைத்திட
முனிவர் உரத்து முழங்கினார்;
"என் சாபம் பலிக்கும்
உன் காதல் ஒழியும்!"

"தடைகளைத் தாண்டி வளர்வதே காதல்
மடை திறந்த வெள்ளமென-தடை
உடைத்துப் பாய்வதே காதல்!"

"பாவம் நீ தோற்கப் போகிறாய்!
என் சாபம் பலிப்பதைப் பார்க்கப்போகிறாய்!
நான் உன் தந்தை, நீ என் மகள்!
நான் இட்டதே சாபம்! நினைப்பதே சட்டம்!"

நகைப்பொலியொன்று வாசலில் கேட்டது.
சினக்குறியோடு துர்வாசர் திரும்பினார்.
நகை முகத்தோடு துஷ்யந்தன் தோன்றினான்.

"நகைப்பென்ன உனக்கு?-துஷ்யந்தா
யார் இவள் உனக்கு?"
முனிவர் கேட்டார் முறுவலோடு!

"புதிதாய் இருக்கிறாள்- பார்வைக்கு
புதிராயும் இருக்கிறாள்-ஆனால்
பொலிவாய் இருக்கிறாளே!
யார் இவள்? யார்தான் இவள்?"

துர்வாசர் துள்ளிக் குதித்தார்.
"நான்தான், நான்தான், நானேதான்
நான் இட்டால் சாபம் இட்டதுதான்!
என் மகள் என்னை மறப்பதுவோ
என் தரம் தேய நிந்திப்பதோ?"

துஷ்யந்தன் தலையை உதறிக்கொண்டான்.
"சகுந்தலை ஏனடி கலங்குகின்றாய்
உன் விழிகளில் ஏனடி நீர் அருவி?
வழித்துணை எனக்கு நீதானே
பழிப்பவர் யாரடி நாம் வாழ்வோம்!"

துர்வாசர் தலையில் இடி விழுந்தது.
"என் சாபம் எப்படிப் பொய்த்தது?
இறந்த நினைவு எப்படி உயிர்த்தது?
மறந்தவன் எப்படி மறுபடி நினைத்தான்?"

"சொன்னது பலிக்க வேண்டுமானால்
சொல்லிலே நல்ல நினைவு வேண்டும்.
நான் என்றாய் அதுவும் பற்றுத்தான்
எனது என்றாய் அதுவும் பற்றுத்தான்.
முற்றும் துறந்த நீ பற்றுக் கொள்ளலாமா?
புற்றுக்குள் இருக்கும் பாம்புகள்போல
பற்றுக்குள் இருக்கிறது சுயநலம்
சுயநலம் உள்ளவரை துன்பமும் தொடரும்
நிலையாமை என்னும் காட்சியும் விரியும்"
அசரீரியாய் ஒரு குரல் ஒலித்தது.

**தருவது ரசிகன்**

"துர்வாசர் இட்ட சாபம்
துல்லியமாய் பலித்தது என்பதுதானே
எழுதப்பட்ட கதை?"

"அது பழைய கதை! காதலைப்
பழிக்கும் கதை!
சாகாவரம் பெற்ற காதல்
சாபத்தால் அழிந்தது என்பது
காலத்தால் கௌரவிக்கப்படாத கற்பனை!"

"அப்படியானால் என் கதி?"

"நான்-எனது- என்று
நினைப்பதை நிறுத்து!
அன்றுதான் உன் துன்பம் விலகும்!
அதுவரை நீந்து துன்பக் கடலில்!"
ஒலித்த குரல் ஓய்ந்து போனது!

காதல் வாழ்ந்தது. காதல் வென்றது.
"நான் என்ற பற்றுத் துறப்பதும்
எனதென்று பிரித்து வைப்பதும்
காதலில் இல்லையே கண்மணி
முற்றும் துறப்பது காதலில் மட்டும்தானடி!"

"துறவிகளா நாங்கள்?"
சகுந்தலை கேலி வீசினாள்.
"ஆம்-இன்னும் சில நொடிகளில்
முற்றும் துறந்தவர் முத்துக் குளிப்பர்!"
அதன் பின் சகுந்தலை பேச
இதழ்கள் இரண்டும் அவள்வசம் இல்லை!

நான்-எனது- என்னும் பற்றுக்களை
பற்றிக்கொண்டு
முற்றும் துறந்தவராய் நடிப்போரை
ஒரு பிடிபிடிக்கிறார் திருவள்ளுவர்.
இதோ-அந்தக் குறள்;
**"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு"**
அதிகாரம்-35, குறள்-347.

## இந்தியாவில் மகளிர் கிரிக்கெட்

ஆறாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்த வருடம் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்றன. அடுத்த ஆண்டு, ஆறாவது உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெறவுள்ளன.

இதில் 12 அணிகள் பங்கேற்கின்றன. 6 அணிகள் கொண்ட இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறும்.

'ஏ' குறூப்பில் நடப்பு சாம்பியனான இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, டென்மார்க், பாகிஸ்தான், அயர்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன.

'பி' குறூப்பில் நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், கனடா, நெதர்லாந்து, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் இடம் பெறுகின்றன.

பாகிஸ்தான், ஜப்பான், தென் ஆபிரிக்கா, கனடா ஆகிய 4 நாடுகளும் முதன் முறையாக உலகக் கோப்பைப் போட்டியில் கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐந்து ஒருநாள் போட்டிகள்

அனுபவம் மிக்க இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் இடையே 5 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 3ம் திகதி தொடங்கி 12ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இருநாடுகளுக்கிடையே நடைபெறும் போட்டிகள் பற்றிய விபரங்கள்:

| | | |
|---|---|---|
| 1வது போட்டி | பெப்ரவரி-03 | ஆமதாபாத். |
| 2வது போட்டி | பெப்ரவரி-06 | போபால் |
| 3வது போட்டி | பெப்ரவரி-07 | டெல்லி அல்லது ஜெய்ப்பூர் |
| 4வது போட்டி | பெப்ரவரி-10 | ஹைதராபாத் |
| 5வது போட்டி | பெப்ரவரி-12 | கொச்சி. |

## ஒதுங்குகிறார் சபாடினி

உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் வீராங்கனை கப்ரியேலா சபாடினி, அண்மையில் டென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். 26 வயதான சபாடினி, ஜெர்மனியில் வெளியாகும் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

"டென்னிஸ் மூலம் எனக்கு ஏராளமான புகழ்கிடைத்தது. இதனால் நான் தனிமைப் பட்டதாகவே அடிக்கடி உணர்ந்தேன்.

இப்பொழுது டென்னிஸில் இருந்து முழுவதுமாக விடுபட்டு விட்டேன். என்றாலும் ஒரு ஆண் நண்பரைத் தேடிக் கண்டு பிடிப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நான் எனக்கு ஏற்ற கணவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

எனக்குக் கணவராக வருபவர் சொந்தமாக ஏதாவது தொழில் செய்ய வேண்டும். தனது சொந்தக் காலில் அவர் நிற்க வேண்டும்.



பல நல்ல ஆண்கள் என்னிடம் பழகுகிறார்கள். ஆனால் என்னிடம் மனம் திறந்து பேச வெட்கப்படுகிறார்கள்.

டென்னிஸ் வீராங்கனைகளில் எனக்கு நெருங்கிய தோழிகள் யாரும் இல்லை. ஸ்டெபியுடன்கூட நான் மனம் விட்டுப் பேசியதில்லை."

இவ்வாறு சபாடினி கூறியுள்ளார்.

## சிந்தியா பதில்கள்

**★ பிரேமதாசா இப்போது பதவியில் இருந்தால் நாட்டின் நிலை எவ்வாறு இருக்கும்?**
மா. ராசரத்தினம், மன்னார்.

தொலைக்காட்சிகளில் அடிக்கடி அவரைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை பொதுஜன முன்னணி சாடோ சாடென்று சாடுவதை மேடைகளில் கேட்டுக்கொண்டிருக்கலாம்.

**★ மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் விடுத்த செய்தியில் சமாதான சமிக்ஞை தெரிகிறதா?**
எச்.எம். நிலாப்தீன், கல்முனை.

எனக்கென்னவோ நீண்டகாலச் சமருக்கான சமிக்ஞைதான் தெரிகிறது.

**★ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஆதரிக்கவே மாட்டேன் என்று சொல்லியிருக்கிறாரே தமிழக முதல்வர் மு. கருணாநிதி?**
சி. ஏபிரகாம், கொழும்பு-06.

உள்நாட்டு அரசியலை நாடிபிடித்தறிந்து பேசுவதுதான் கலைஞரின் ஸ்டைல்.

**★ கிருஷாந்தி, ராஜினி படுகொலைகளைக் கண்டித்து கொழும்பில் பெண்கள் அமைப்பினர் போராட்டம் நடத்துவதில் பலன் உண்டா?**
செல்வி கி. சாந்தி, மொரட்டுவ.

நீதி கிடைக்கிறதோ இல்லையோ, வடக்கில் நடந்த அத்துமீறலை எதிர்த்து தெற்கில் குரல் எழுவது வரவேற்கப்படவேண்டிய விஷயம்தான்! இன, மொழி பேதமற்ற ரீதியில் எழும் குரல்கள் அர்த்தமுடையவை; ஆரோக்கியமானவை.

**★ பேச்சில் மறைபொருள் வைத்து பேசுவது எப்படி? தெரிந்தால் சொல்லுங்களேன்?**
கே. சுரேந்திரன், கண்டி.

இரண்டாம் உலகப்போர் படு பயங்கரமாக நடந்து கொண்டிருந்தது.

ஜெர்மன் ஹிட்லரின் படை ரசியாமீது படையெடுத்திருந்தது. ரசியர்கள் சளைக்காமல் போர் செய்தார்கள்.

தனது வீரர்களை ஊக்குவிக்க ஹிட்லர் நேரடியாகச் சென்றார். வீரர்களுடன் பேசிக் கொண்டிருந்த ஹிட்லர், ஒரு வீரனை நோக்கிக் கேட்டார்:

"உன் அருகில் ரசியர்களின் குண்டு விழும்போது உன் இறுதி ஆசை என்னவாக இருக்கும்?"

அந்தவீரன் சட்டென்று சொன்னான்:

"என் அருகே தாங்களும் இருக்க வேண்டும் என்பதுதான் என் இறுதி விருப்பமாக இருக்கும்."

ஹிட்லர் மெல்லச் சிரித்துக்கொண்டே சென்றுவிட்டார்.

அவன் தன்மீதுள்ள அன்பை வெளிப்படுத்துகிறானா? அல்லது 'நீயும் என்னோடு இருந்து சாக வேண்டும்' என்று சொல்கிறானா என்பது ஹிட்லருக்கு கடைசிவரை புரியவேயில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் சுரேந்திரன்?

**★ 'காதல் கோட்டை' அகத்தியனின் 'கோகுலத்தில் சீதை' படம் எப்படி சிந்தியா?**
செல்வி எம். நித்யா, கொழும்பு-09.

புடவை கட்டிக்கொண்டு நடித்தாலும் கதாநாயகிகள் இரசிகர்கள் மனதில் இடம் பிடிக்கலாம் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார் அகத்தியன். 'காதல் கோட்டை'யில் தேவயானி. 'கோகுலத்தில் சீதை' யில் சுவலட்சுமி. இரண்டும் மறக்கமுடியாத பாத்திரங்கள்.

**★ ஒரு கலைஞனுக்கு முழுமையான திருப்தி எப்போது ஏற்படுகிறது?**
ஆர். ஜெயந்தன், பதுளை.

எப்போதுமே ஏற்படக்கூடாதுங்கள்; அவன்தான் உண்மையான கலைஞன்.

ஒரு சிற்பி அற்புதமாக சிலைகள் செய்து சாதனை படைத்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவருடைய தீவிர இரசிகர் சென்று; "எத்தனையோ அபூர்வமான சிற்பங்கள் படைத்திருக்கிறீர்கள். நீங்கள் உருவாக்கிய சிற்பங்களில் சிறந்தது எது?" என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிற்பி என்ன பதில் சொன்னார் தெரியுமா?



"நான் அடுத்ததாக உருவாக்கப்போகும் சிலைதான்" என்று சொன்னார்.

**★ தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியுடன் அசாரின் ஆட்டம் பற்றி என்ன சொல்கிறீர்?**
ஆர். தேவக்குமார், தெகிவளை.

தென்னாபிரிக்க அணியினர் பிளந்து கட்டிவிட, அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய அணி திணறிக்கொண்டிருக்க, அசார் அடித்த சதமும், அதிரடியான பவுண்டரிகளும் இந்தியஅணியின் மானத்தைக் காப்பாற்றின.

**★ பெண்களைக் கண்டதும் சபலம் அடையும் ஆண்களை எப்படித் திருத்தலாம்?**
கே.எம், மட்டக்களப்பு.

இந்தக் கதையைச் சொல்லிப்பாருங்கள்:

புத்தரின் சீடர் ஒருவர் புத்தரின் கொள்கைகளைப் பரப்ப வெளியூருக்குப் புறப்பட்டார். போகமுன்னர் குருவிடம் ஆசி பெற வந்தார்.

"குருவே! பெண்களிடம் எப்படிப் பழகுவது?" என்று கேட்டார்.

"முடிந்தளவு அவர்களைப் பார்க்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்க்கப்பார்."

"சமூகத்தில் பணியாற்றும்போது பெண்களைப் பார்க்காமல் இருக்க முடியாதே குருவே?"

"தெரியும். பார்த்தாலும் அவர்களைத் தொடாதே!"

"சில சமயங்களில் பெண்களைத் தொடாமல் இருக்க முடியாதே? அநாதைப் பெண் நோயுற்று தெருவில் விழுந்து கிடந்தால் தொடாமல் இருக்க முடியாதே?" என்று விடாமல் கேட்டான் சிஷ்யன்.

குரு சொன்னார்:

"தொட்டாலும் விழிப்புடன் இரு" அதாகப்பட்டது, மனதை அலைபாய விடாதே என்று அர்த்தம்.

**★ டியர் சிந்தியா! நீங்கள் இரசித்துப் படித்த குட்டிக்கதையொன்று சொல்லுங்களேன்?**
ஏ. தியாகராஜன், மாத்தளை.

ஒரு விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு வீட்டிலிருந்து தந்தி வந்தது. அவனது மனைவி ஒரே பிரசவத்தில் நாலு குழந்தைகள் பெற்று இருந்தாள்.

விவசாயிக்கு கவலை ஒரு புறம், மகிழ்ச்சி மறுபுறம். இனிமேலும் விவசாயப் பண்ணையில் வேலைசெய்தால் குழந்தைகளைப் பராமரிக்க முடியாதே, என்று நகரத்திற்கு போனான். ஒரு தொழிற்சாலையில் வேலை கேட்டான்.

நிர்வாகி அவனை விசாரித்தார்.

"உனக்குப் பொருட்களை விற்பனை செய்யும் தகுதி இருக்கிறதா?"

"இல்லை ஐயா!"

"தட்டச்சுத் தெரியுமா?"

"இல்லை ஐயா!"

"கணக்குப் போடத் தெரியுமா?"

"இல்லை ஐயா!"

"கம்பியூட்டர் தெரியுமா?"

"இல்லை ஐயா!"

சலிப்போடு நிர்வாகி கேட்டார்; "அப்படியானால் உனக்கு என்னதான் தெரியும்?"

விவசாயி தன் மனைவியிடமிருந்து வந்த தந்தியைக் காட்டினான்.

நிர்வாகி உடனே அவனுக்கு வேலை கொடுத்து, பின்வருமாறு குறிப்பு எழுதினார்:

"ஒன்றுக்கு நாலு மடங்கு உற்பத்தி செய்யும் திறன் உள்ளவன்!"

**★ விரைவில் பொதுத் தேர்தல் வருமா?**
பா. வெற்றிவேல், திருக்கோணமலை.

உங்களுக்கு மீண்டும் மரியாதை வீடுதேடி வரப்போகிறது என்று சந்தோசப்படத்தானே இந்தக் கேள்வி? அந்தப் பாக்கியம் தற்போதைக்கு இல்லை என்பது சோகமான செய்தி.

# இராமாயணம் அங்கம் 60

## இலங்கா புரியின் எழில் மிகு தோற்றம்

இராமநாமத்தை உச்சரித்த வண்ணம் கடலைக் கடந்த அனுமன் இலங்கைக் கரையில் வந்து இறங்குவதற்கேற்ற இடத்தினை வானில் தவழ்ந்த வண்ணம் ஆராய்ந்தார். திரும்பிய பக்கமெல்லாம் பவளக்கட்டிகளாலும் பல்வேறு நவரத்தினக் கற்களாலும் கட்டப்பட்டு தங்கத் தகடுகளால் வேயப்பட்ட கட்டடங்கள் வானோக்கி வளர்ந்திருப்பதைக் கண்ட ஆஞ்சநேயர் வியப்பிலாழ்ந்தார். தான் தவறுதலாக தேவேந்திரன் அரசோச்சும் தேவலோகத்துக்கே வந்துவிட்டோமா என்று ஐயுற்றார். கதிரவனின் பொற்கிரணங்கள் பட்டு பேரொளியை அக்கட்டிடங்கள் பிரதிபலித்தன. இதனால் பூமியிலேயே பல சூரியர்கள் தோன்றியிருக்கின்றனரோ என்று ஆஞ்சநேயர் அதிசயித்தார். அவருடைய கண்களை அவ்வொளி கூசச் செய்தது. இதனால் அந்நகரின் மீது தான் இறங்க முடியாதவராக வேறொருபுறம் ஒதுங்கிச் சென்று பவளமலையின் மீது கால்களைப் பதித்தார். மலைமீது நின்றவாறு இலங்காபுரியைப் பார்த்து அதன் அழகினை இரசிக்கலானார்.

திரிகூடமலையின் மீது இலங்காபுரி எனும் இராவணனின் தலை நகரம் அமைக்கப்பட்டிருந்தது. விண்ணிலே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதுபோல் காட்சி அளித்தது. நகரைச் சுற்றி சிறந்த பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அகழிகள் நாற்புறமும் சூழ்ந்திருந்தன. எதிரிகள் எவரும் சுலபமாக நுழைந்து விடாதிருக்க மிக உயர்ந்த மதில்கள் நகரைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்தன. மதில்களின் மீது, வெளியிலிருந்து பார்த்தால் எவருக்கும் தெரியாமல் மறைந்திருந்து வெளிப்புறத்தைக் கண்காணிக்கும் வீரர்களுக்கான கண்காணிப்புக் கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

நகரத்தில் எல்லா இடங்களையும் தொட்டுச் செல்லும் வீதிகளும் சாலைகளும் மிக அகலமாகவும் நீளமாகவும் காணப்பட்டன. அமராவதி, போகவதி ஆகிய தேவர்களுடைய நகரம் மற்றும் நாகலோகம் ஆகிய நகரங்களுக்கு இணையானது என்று இலங்காபுரியைக் கூறிவிடமுடியாது. அந்நகரங்களை விட செல்வச் சிறப்புடன் சகல வளங்களும் கொண்டதாக அந்நகர் காட்சிதந்தது.

### சொர்க்க புரி

*இலங்கையை 'கிழக்கின் சொர்க்கபுரி,' "என்று வர்ணித்து, இக்காலத்தில், பிறநாட்டு உல்லாசப் பயணிகளை கவர்வதற்காக விளம்பரப்படுத்துவதுண்டு. ஆனால் இராமாயண காலத்திலும் இலங்கை சொர்க்கபுரியாகத் திகழ்ந்ததாக, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வால்மீகி முனிவர் வர்ணித்துள்ளார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் இலங்கையை சொர்க்கபுரி என்றே வர்ணிக்கிறார்.*

மாண்டது ஓர் நலத்திற்று ஆம் என்று
உணர்த்துதல் வாய்மைத்து அன்றேல்
வேண்டிய வேண்டின் எய்தி வெறுப்பு
இன்றி விழைந்து துய்க்கும்
ஈண்ட அரும்போக இன்பம் ஈறு
இலது யாண்டுக் கண்டாம்
ஆண்டு அது துறக்கம் அஃதே
அரு மறைத் துணிவும் அம்மா.
(சுந்தரகாண்டம்- 93) 4830

**பொருள்:** ***தேவர்கள் வாழ்கின்ற தேவலோகமே மிகவும் அழகானதும் சகல வசதிகளும் உடைய நகரம் என்று கூறுவது உண்மையல்ல; விருப்புற்ற பொருட்களை வேண்டிய போதே பெற்றுக் கொண்டாலும் மீண்டும் மீண்டும் பெற்று அவற்றால் தெவிட்டாத நிலையினை எய்தும் இடம் வேறெங்கணுமே இல்லை. சுகபோகங்கள் எல்லாமே தெவிட்டாமல் கிடைக்குமிடமே சொர்க்கம் என்று முன்னோர் கூறியுள்ளனர். இலங்கை மாநகரமும் அத்தகைய செல்வங்களையும் வசதிகளையும் பெற்றுள்ளமையினால் இந்நாடே சொர்க்கபுரியாகும். இவ்வாறு ஆஞ்சநேயர் எண்ணி வியந்தார்.***

***

கதிரவன் உலாவரும் பகல் பொழுதில் இலங்காபுரியில் உலவுவது நல்லதல்ல; எவருடைய கண்களிலும் படாமல் இரவு நேரத்தில் நகரில் புகலாம் என்று கருதிய அனுமன் மலையிலேயே மறைந்திருந்தார். தான் வானிலிருந்து கீழே இறங்கும் போதே தன்னுடைய வானளாவிய விசுவரூபத்தைச் சுருக்கித் தன் சுய உருவத்தை எடுத்துக் கொண்டார். இருப்பினும் இலங்கை மாநகரின் அமைப்பினை மலையிலிருந்த வண்ணம் அவதானிக்கலானார். மாலையானதும் புற நகரிலிருந்த ஓர் உயர்ந்த மாளிகையின் கூரைமீது தாவி ஏறி அமர்ந்து கொண்டார். அவருடைய சிந்தனை விரிந்தது.

### சிந்தனையும் தெளிவும்

எதிரிகள் எவரும் உட்புகுந்துவிடாதவாறு மிகவும் பாதுகாப்பாக நகரம் அரண் செய்யப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் சுற்றுச் சூழ சமுத்திரம் இயற்கை அரணாக அமைந்துள்ளது. அரக்கர்க்கரசன் இராவணனும் மகாபராக்கிரமசாலி. அவனைப் போலவே அவனுடைய தம்பிமார் விபீடணன், கும்பகர்ணன், மகன் இந்திரஜித்தன் ஆகியோரும் சிறந்த வீரர்கள். இராம மந்திரத்தின்



மகிமையால் கடலைக் கடந்து வரத் தன்னால் முடிந்தது. சுக்கிரீவனின் படையிலுள்ள ஏனையோரால் கடலைக் கடக்க முடியுமா? கடந்தாலும் நன்கு அரண் செய்யப்பட்டிருக்கும் இந்த நகருக்குள் வானரசேனையால் எவ்வாறு புகமுடியும்? இராவணனின் அரக்கர் படையின் போராற்றலுக்குமுன் வானர வீரர்களால் தாக்குப் பிடிக்க முடியுமா? இவ்வாறு பலவாறாக எண்ணி அனுமன் குழம்பினார். அதேவேளை அவர் அடி மனத்தில் "ராம் ராம் ராம்" என்று ஒலி ஓங்கி எழுந்தது. 'இராம நாம மகிமை எத்தகையது'? எதையும் சாதிக்கத்தக்க வல்லமை அம்மந்திரத்துக்கிருப்பதை தன் செயற்பாடுகளே நிரூபித்துக் காட்டியிருக்கும் போது. தான் ஏன் வீணாகக் கலக்கமடைய வேண்டும்? என்று மற்றுமோர் எண்ணம் எழுந்து அனுமனுக்கு உற்சாகத்தை ஊட்டியது.

★★★★

தன் அன்றாடக் கடமையைத் திருப்திகரமாகச் செய்து முடித்துவிட்ட களைப்புடன் மேற்கத்தையக் கடலுள் நீராடி ஓய்வுபெற கதிரவன் விரைந்து கொண்டிருந்தான். அதே போது கிழக்கில் முழுமதி தோன்றியது. எதிரெதிர்த்திசைகளில் ஏற்பட்ட இயற்கை மாற்றங்களை அவதானித்த அனுமன் புத்துணர்ச்சி பெற்றவராக இலங்கை மாநகருள் புகுந்து சீதாபிராட்டியாரைத் தேடும் பணியிலிறங்க ஆயத்தமானார்.

### இயற்கை ஒளியின் எழில்

தன்னுடைய சுயரூபத்துடன் சென்றால் அரக்கர் படையிடம் அனாவசியமாகச் சிக்க வேண்டியிருக்கும்; ஆகவே தன்னுடைய உருவை மேலும் சுருக்கி சாதாரண குரங்கு போன்ற உருவினை எடுத்து மரங்களில் தாவி ஏறி, கோட்டை மதிலின் மீதேறி நின்றார். அப்பொழுது அந்நகரின் அமைப்பின் அழகை மேலும் சிறப்பாகப் பார்த்து வியந்தார். மாலையான பின்னர், பகலில் இருந்த கோலத்தைவிட பலமடங்கான எழில் பெற்றதாக அந்நகர் விளங்கியது. மாட மாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் பதிக்கப்பட்டிருந்த இரத்தினக் கற்கள் இயற்கையாகவே ஒளியை வீசி அந்நகருக்கு ஒளி ஊட்டின. மேலதிகமான வெளிச்சங்கள் எதுவும் ஏற்றப்படாமலே நகர வீதிகளிலும் கட்டிடங்களிலும் இரத்தினங்களே இயற்கை ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்த அதிசயத்தை அனுமன் கண்டு களித்தார்.

அரக்கர் பெருமக்கள் வீதிகளில் கும்பல் கும்பலாகத் திரண்டு நடமாடுவதைக் கண்டார். அவர்கள் எக்குறையுமற்றவர்களாகவே அனுமன் கண்களுக்குத் தென்பட்டனர். ஆலயங்களில் ஓங்கார நாதத்துடன் மணி ஓசைகள் எழுந்து பரவுவதையும் கேட்டார். ஆடல் பாடல்களில் ஈடுபட்டு மகிழ்வூட்டும் ஆண்களையும் பெண்களையும் கண்டார். அத்தகைய கலை நிகழ்ச்சிகளில் தம் உள்ளங்களைப் பறிகொடுத்துப் பரவசத்திலாழ்ந்து கிடந்தோரையும் பார்த்தார். இத்தகைய செல்வமும் வளமும் சிறப்புக்கள்யாவும் ஒருங்கே கொண்ட நாட்டை ஆளும் இலங்கேஸ்வரன் ஏன் கொடுமைகளைப் புரியும் கொடியவனானான், என்பது ஆஞ்சநேயருக்கே புரிந்து கொள்ள முடியாத புதிராகவிருந்தது. மேலும் சற்று நேரம் ஓரிடத்திலமர்ந்து தனது சிந்தனைக்கு இடமளித்தார்.

சகல வசதிகளையும் பெற்றவனும் அதிபராக்கிரமசாலியாக உள்ளவனும், நினைத்தபோது எதனையும் சாதிக்கும் சக்தி படைத்தவன்-அவன் தேவனாக இருந்தாலும் மானிடனாக இருந்தாலும் அரக்கனாக இருந்தாலும்- ஆணவம் என்ற கெடுபுத்தியின் வசமாகி விடுகிறான். இதனால் புத்தி மழுங்கிவிடுகிறது; தான் எனும் அகங்காரம் தலையெடுத்து விடுகிறது. நல்லனவற்றை எண்ணாமல் தீயவழிகளில் தன்னை ஈடுபடுத்தத் தலைப்பட்டுவிடுகிறான். தானே எல்லாம் என்ற எண்ணம் தலைக்கேறி தலைப் பாரத்தைக் கூட்டுகிறது. அப்போது தலைகீழாக விழ வேண்டிய நிலைதான் அவனுக்கு ஏற்படுகிறது.

ஆஞ்சநேயரின் உள்ளத்தில் இந்தத் தெளிவு கண்டதும், சிவபக்தனான இலங்கேஸ்வரன் ஏன் கொடுமையின் சின்னமானான் என்பதற்கான காரணம் புரிந்தது. பல்லாண்டு காலம் தவமிருந்து சிவபிரானிடத்திலேயே பல அரியவரங்களைப் பெற்ற இராவணன் ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழைவைத்தோன். தான் என்ற மமதைக்கு இடம் கொடுத்தமையினால் தெய்வத்தையே மறக்கலானான். சகல வளங்களையும் பெற்றிருந்தமையினால் தன் சுகமே பெரிதென மதித்து சுகபோகங்களில் மூழ்கி தன்னிலை மறக்கலானான். தான் நினைத்தபடியே எல்லாம் நடக்க வேண்டும் என்று சுயநலபுத்திக்கு இடம் கொடுக்கலானான்.

இத்தகைய சிந்தனைகளிலீடுபட்டிருந்த வேளையில், இரவு புகுந்து தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆரம்பித்தது. வீதிகளிலும் அரக்கர் நடமாட்டம் குறைந்திருந்தது. தான் இருந்த மாளிகையின் உச்சியிலிருந்து கீழே தரையில் குதித்தார் ஆஞ்சநேயர். அதே வேளையில் சிலம்பொலி அவர் காதில் விழுந்தது. அவரின் எதிரே அழகே உருவான மங்கை ஒருத்தி வந்து நின்றாள்.

(தொடர்ந்து வரும்)

**இராஜகுமாரன்**

### இராமாயணப் போட்டி: 58

**சரியானவிடை:- மகேந்திரமலை**

1. செல்வி தி. வாசுகி, 5/5, உம்பிச்சி பிளேஸ், கொழும்பு-13.
2. பி. பாக்கே ராஜ், 26, பிரதான வீதி, அட்டன்.
3. காவேரி கந்தசாமி, 43, முகாந்திரம் வீதி, கொள்ளுப்பிட்டி.
4. செல்வி பிரசாந்தி, 112 ஏ, பிரதான வீதி, கணுவன, ஜா-எல.
5. பா. சிந்துஜன், காளி கோயில் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.

**போட்டி இல. 60** இலங்கைக்கு மற்றுமொரு பெயர்; நாட்டின் அழகுக்கும் வளத்துக்குமாகச் சூட்டப்பட்ட சிறப்புப் பெயர். அது என்ன பெயர்?

டிசம்பர். 14 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி – இல.60, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

பிரபாவின் பிறந்தநாளுக்கு அம்மையார் ஒரு வாழ்த்து அனுப்பினால் எப்படி இருக்கும்? கற்பனை செய்து பார்ப்போமா?

**காதில பூ கந்தசாமி**

## பிரபாவுக்கு பிறந்த நாள் வாழ்த்து

**டியர் மிஸ்டர் பிரபாகரன்.**

***பலம்-பலமறிய ஆவல்.***

*ஹப்பி பேர்த்டே டூ யூ. மெனி மெனி ஹப்பி ரிட்டேர்ன்ஸ் ஒ:ப் த டே*

*இந்த வாழ்த்து மடல் தாமதமாகவே உங்கள் கரம் சேரும் என்பது எனக்குத் தெரியும்.*

*வழக்குப் பத்திரத்தோடு வருவதாக நினைத்து அவசரப்பட்டு ஏதாவது ஏடாகூடமாகச் செய்து விடுவீர்களோ என்று பயந்து, வாழ்த்து மடலுடன் வருவதற்கும் தூதர்கள் மறுத்து விட்டார்கள்.*

*அதனால் அதிவேகத் தபாலில் இதனை சேர்ப்பித்திருக்கிறேன். அதி மெதுவாகவே அங்கு வந்து சேர்ந்தால் வருத்தப்படாதீர்கள்.*

*நிற்க: நீங்கள் உங்கள் பிறந்தநாளை தற்செயலாக மறந்துவிட்டாலும் நாங்கள் மறக்க மாட்டோம்.*



*உங்கள் பிறந்தநாள் எந்த அசம்பாவிதமும் இல்லாமல் அமைதியாகக் கொண்டாடப் படவேண்டும் என்பதற்காக எக்கச்சக்கமாகச் செலவு செய்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.*

*ஆனால் உங்கள் ஆட்கள் சிலர் நமது நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல் நாட்டின் சில பகுதிகளில் அமைதியைக் கெடுக்க 'ட்ரை' பண்ணியிருக்கிறார்கள்.*

*யாழ் குடாநாட்டில் இருந்தே நீங்கள் பிறந்த நாளைக் கொண்டாடியிருக்கலாம். கொண் டாட்டங்கள் சிறப்பாக நடைபெற நாமும் ஜெனரேட்டர்களைக் கொடுத்து உதவியிருப்போம்.*

*நமது இருதரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது ஒரு பெரிய ஜெனரேட்டரை அனுப்பிவைத்ததாக ஞாபகம் வருகிறது. அது இப்போது உங்கள் பராமரிப்பில் இருக்கும் என்று நம்புகிறேன். அது ஒரு பொதுச் சொத்து என்பதால் கவனமாகப் பராமரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இல்லாவிட்டால் பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்ததாக நாம் ஒரு வழக்குத் தொடரவேண்டியிருக்கும். சேதம் இல்லாமல் உங்கள் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு ஜெனரேட்டரை பாவிக்க நினைத்தால் நாம் அதனை அனுமதிக்கிறோம். இதனை ஒரு சமாதான சமிக்ஞையாக நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.*

*மிஸ்டர் பிரபாகரன், நீங்கள் அவசரப் பட்டுவிட்டீர்கள். நீங்கள் யாழ்குடாநாட்டில் இருந்து பிறந்தநாள் கொண்டாட, நான் தலைநகரில் இருந்து அதற்கு வாழ்த்துச் சொல்ல முடியாமல் செய்துவிட்டீர்கள்.*

*பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதானால் அதி உயர்ந்த பட்சமான சகிப்புத்தன்மை தேவை. சில சமயம் சோம்பலாகக்கூட இருக்கும். பொறுத்துக்கொண்டு இருக்கத்தான் வேண்டும்.*

*பாராளுமன்ற தெரிவுக்குழுவைப் பாருங்கள். எத்தனை காலமாக ஆற அமர பேசிக்கொண்டே இருக்கிறார்கள். தொடர்ந்தும் பேசிக்கொண்டே இருப்பதற்கான பொறுமையும் அவர்களிடம் இருக்கிறது.*

*பேச்சுவார்த்தை என்பது ஒருநாள் கிரிக்கெட் போட்டியல்ல. அது ஒரு டெஸ்ட் போட்டி. ஆட்டம் வெற்றி தோல்வியில்லாமல் முடிந்தால்தான் இரு தரப்புக்கும் நல்லது. அதற்காகத் தான் பொறுமையாக மட்டைபோட்டுக் கொண்டிருந்தோம். ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரிகூட அடிக்காமல் ஆடுவதா என்று நீங்கள் பொறுமை இழந்தது நியாயமில்லை. அப்படி அடித்தாடினால் நீங்கள் 'காட்ச்' பிடித்து விடுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாதா என்ன.*

*மிஸ்டர் பிரபாகரன், இப்போதும் ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை. மீண்டும் சிநேகபூர்வமான போட்டி நடத்த மைதானம் சுத்தமாகவே இருக்கிறது. மைதானக் கேற் திறந்தே இருக்கிறது.*

*உங்கள் 'பேட்'டுக்களை கீழே போட்டுவிட்டு வருவதானால் வாருங்கள்.*

*வேண்டுமானால் வெளிநாட்டு நடுவர்களை அழைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த நடுவர்கள் நமக்கும் நன்கு தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எல். பி. டபிள்யூ முறையில் எங்களை ஆட்டமிழக்கச் செய்துவிடுவார்கள்.*

*இந்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் அதனை நீங்களே அறிவிக்க வேண்டும். நீங்கள் கூப்பிட்டுத்தான் நாம் ஏதோ வேண்டா வெறுப்பாக இந்தப் போட்டியில் பங்கேற்பதாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இங்குள்ள ரசிகர்கள் அமைதியிழந்து விடுவார்கள்.*

*இவற்றையெல்லாம் ஆற அமர யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.*

**-நன்றி-வணக்கம்.**

## "நாங்கள் வாழ்த்துக்களுக்கு விரோதிகளல்ல"

***-பிரபா எழுதிய பதில் கடிதம்-***

**அம்மையார் அவர்களுக்கு.**

***பலம்-பலமறிய ஆவல்.***

நீங்கள் அனுப்பிவைத்தது வாழ்த்தல்ல. சர்வதேச சமூகம் முன்பாக என்னை வாழ்த்துவதாகக் காட்டுவதற்குச் செய்த முயற்சி.

நாம் வாழ்த்துக்களின் விரோதிகளல்ல. நமக்குத் தேவையானது உண்மையான வாழ்த்துக்களே.

நீங்கள் அனுப்பிவைத்த ஜெனரேட்டர் ஒரு உதவியே தவிர உரிமையல்ல. உதவிகளைப் பயன்படுத்துவது தந்திரம். நாமும் அந்த் ஜெனரேட்டரை பயன்படுத்தி வருவதும் அவ்வாறே!



ஆயுதம் தந்த பிரேமதாசாவே எம்மிடம் அதைப் பற்றி விசாரித்ததில்லை. அதனை எம்மிடம் தரும்போதே நாம் எப்படிப் பயன்படுத்துவோம் என்பதும் அவருக்கு தெரிந்தே இருந்தது.

தந்த ஆயுதத்தையும், தராத ஆயுதத்தையும் யாரிடமும் ஒப்படைத்து நமக்குப் பழக்கமில்லை. ஜெனரேட்டரும் அப்படியே.

பேச்சுவார்த்தை ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

'பேட்'டை போட்டுவிட்டு வருவதற்கு பேட்டிங் தெரிந்த எந்த கிரிக்கெட் அணியும் முன்வராது.

உலகில் முன்னணியில் உள்ள கிரிக்கெட் அணியைக்கூட தோல்வியுடன் திருப்பி அனுப்பியவர்கள் நாங்கள்.

மைதான நிலவரம், காலநிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் நீங்கள் வெற்றி பெற்றிருக்கலாம். அதனை வைத்து ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டாம்.

நாங்கள் ஒரு தடவை தோற்றால் அது நூறு தடவை வெற்றிபெறப்போவது மாதிரி.

தரமான நடுவர்கள் இருந்தால் நாமும் தயார்தான். அதற்கு முன்னர் எங்கள் மைதானங்களில் இருந்து உங்கள் அணிகளை விலக்கிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அங்கு நாம் பயிற்சி எடுக்க முடியும்.

டெஸ்ட் போட்டி ஆரம்பிக்க முன்னர் மைதானங்களை சுத்தம் செய்யவேண்டும். ஆடுகளம் சரியாக இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும். அதுபோலத்தான் பேச்சுவார்த்தையும் என்பதே எமது நிலைப்பாடு.

நாம் 'பேட்'டுடன்தான் வருவோம். வேண்டுமானால் முதலில் நீங்கள் பேட்டிங் செய்யுங்கள். அந்த 'ரன்' ரேட்டைப் பார்த்து நாம்பின்னர் 'பேட்'டிங் செய்துகொள்கிறோம்.

'பேட்' இல்லாமல் கிரிக்கெட் இல்லை. ஆயுதம் இல்லாமல் பேச்சுவார்த்தையில் பலம் இல்லை.

என் பிறந்தநாளை முன்னிட்டு நாடெங்கும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகளுக்கு, நன்றி. அதற்காக உங்களுக்கு எற்பட்ட செலவுக்கும், சிரமத்துக்கும் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*-நன்றி-வணக்கம்-*

**யாவும் கலப்படமில்லாத கற்பனை**


அருள் ஜுவல்லர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்'
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# பொலிவு போதுமா?






ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


→ உலகில் மிகப் பிரமாண்டமான போத்தல் இதுதான். உள்ளே இருப்பது லெமனேட் பானம். 2250 லீட்டர் (495 கலன்கள்) லெமனேட் பானம் உள்ளே இருக்கிறது. சாதாரணமான போத்தல்களில் அடைப்பது என்றால் ஆயிரம்போத்தல்கள் தேவை.

பானங்களைத் தயாரிக்கும் சுவெப்பேர்ஸ் என்னும் நிறுவனம் தனது 200வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அதனை முன்னிட்டு இந்த உலக சாதனைப் போத்தல் தயாரிக்கப்பட்டது. இந்த பிரமாண்டமான போத்தல் அருகே யானையின் பக்கத்தில் எறும்பு போல காணப்படுவதுதான் வழக்கமான லெமனேட் போத்தல்.

இந்தப் போத்தல் ஒன்று போதும் ஒரு ஊருக்கே பானம் கொடுக்கலாம். ஓடி ஓடி கொடுக்கலாம், ஊரெல்லாம் குடிக்கலாம் என்று நினைத்துத்தான் தயாரித்தார்களோ?!

↓ யானைப் பலம் கொண்ட மனிதர்கள் இவர்கள். இவர்கள் அசைந்தால் மலையே அசைந்துவிடும் என்றும் சொல்லலாம்.

முதல் படத்தில் விமானம் ஒன்றை வெகு அலட்சியமாகக் கட்டி இழுப்பவரின் பெயர் டேவிட் ஹக்ஸ்லே. 187 தொன் எடையுள்ள குவான்டாஸ் போயிங் 747 ஜெட் விமானத்தைத்தான் இழுக்கிறார். 547 மீட்டர் (179 அடி 6 அங்) தூரத்துக்கு இழுத்துச் சென்றார். ஏப்ரல் 2, 1996ல் அவுஸ்திரேலியாவில் சிட்னி விமான நிலையத்தில் இந்த உலக சாதனை செய்யப்பட்டது.

இரண்டாவது படத்தில் இரயில் வண்டியை உடலில் கட்டி கயிற்றால் இழுத்துச் செல்பவர் கிராண்ட் எட்வர்ட். 36.8 மீட்டர் (120 அடி 9 அங்) தூரம் வரை சற்றும் தளராமல் இழுத்துச் சென்றார். ஏப்ரல் 4, 1996ல் அவுஸ்திரேலியாவில் இச்சாதனை செய்யப்பட்டது. டேவிட் விமானத்தை இழுத்து சாதனை படைத்ததைக் கேள்விப்பட்டுவிட்டு எட்வர்ட்டும் களத்தில் இறங்கியிருப்பாரோ?

மூன்றாவது படத்தில் கப்பலை கரைக்கு இழுக்கும் சூரர் யார் தெரியுமா? முதலாவது படத்தில் விமானத்தை கட்டி இழுத்த டேவிட்தான். விமானத்தை கட்டி இழுத்த சாதனை படைத்த சூட்டோடு சூடாக மறுநாளே கப்பலைக் கட்டி இழுத்தார். கப்பலின் எடை 387 தொன். 'பவுண்டி' என்னும் இக்கப்பலை 25 மீட்டர் தூரம் (82 அடி) நீரில் இழுத்துச் சாதனை படைத்தார். பலம் என்றால் பலம்தான்.

இப்படி நாட்டுக்கு நாலுபேர் இருந்தால் போதும் எரிபொருள் செலவு மிச்சமாகும். அதற்காக [illegible] என்று [illegible] முடித்துக் கொள்ளாதீர்கள்.

## ஆட்கள் தேவையில்லை

## தவளைப் பாய்ச்சல்





↑ குனிந்துகொண்டிருக்கும் ஒருவரது உடலில் கைகளிரண்டையும் ஊன்றிப்பாய்ந்து கடக்கும் தவளைப்பாய்ச்சல் விளையாட்டு என்று அழைப்பர். நமக்கும் நன்கு பரிச்சயமான விளையாட்டுதான் இதில் என்ன புதுமை என்று நீங்கள் யோசிக்கக்கூடும்.

தவளைப் பாய்ச்சலில் சாதனை படைத்து கின்னஸில் இடம்பிடித்துவிட்டார்கள் இவர்கள். கலிபோர்னியாவின் ஸ்ரான்ஃபோர்ட் பல்கலைக்கழக மாணவர்கள் 14 பேர் 1991 மே மாதம் 16ம் திகதி நெடுந்தூர தவளைப் பாய்ச்சலில் ஈடுபட்டனர். மே 16ம் திகதி ஆரம்பித்த தவளைப் பாய்ச்சல் மே 26ம் திகதிவரை தொடர்ந்தது. 1603 கிலோ மீட்டர் தூரம் வரை தவளைப்பாய்ச்சலில் கடந்து புதிய உலக சாதனை படைத்தனர். எடுத்துக் கொண்ட நேரம் 244 மணி 43 நிமிடம். தவளைப் பாய்ச்சலில் சாதனை இதுதான்.

நம்நாட்டில் பூநகரி கடற்படைத்தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்கு 'தவளைப் பாய்ச்சல்' என்றுதான் பெயர் சூட்டியிருந்தனர்.

## நம்பிக்கை நட்சத்திரம்

→ பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட நட்சத்திரங்களில் ஒருவர் இஜாஸ் அஹமட். தற்போதைய பாகிஸ்தான் அணி வீரர்களில் சயீட் அன்வர், இஜாஸ் அஹமட் இருவரும் நம்பகமான ரன் குவிக்கும் இயந்திரங்கள்.

சமீபத்தில் பாகிஸ்தானில் சிம்பாப்வே அணிக்கு எதிரான சர்வதேச ஒருநாள் போட்டிகள் நடைபெற்றன. மொத்தம் மூன்று போட்டிகள். பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களில் இஜாஸ் அஹமட்தான் ரசிகர்களை பரவசப்படுத்தினார். ஒரு போட்டியில் சதம் போட்டார் (117 அவுட்டில்லை) இன்னொரு போட்டியில் 31 ரன்களுடன் அவுட்டாகாமல் திரும்பினார்.

அதற்கு முன்னர் சார்ஜாவில் சிங்கர் கிண்ணப்போட்டியிலும் இஜாஸ் அஹமட்டின் துடுப்பாட்டமும் பாகிஸ்தான் அணிக்கு கைகொடுத்தது. ஆனாலும் சயீட் அன்வர் புகுந்து தாள் பண்ணியதால் இஜாஸ் அஹமட்டுக்கு வேலை அதிகம் இல்லாமல் போனது.

பாகிஸ்தான் அணி தோல்வியை நோக்கி செல்வதாக நினைக்கப்பட்ட சில போட்டிகளில் அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டுசெல்ல இஜாஸ் அஹமட்டின் அபார ஆட்டம் உதவியிருக்கிறது.

"நான் எத்தனை ரன்கள் பெறுகிறேன் என்பது முக்கியமல்ல. எனது அணிக்கு நான் எப்படி உபயோகப் படுகிறேன். என்னிடமிருந்து எப்படியான ஆட்டத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு ஆடுவதுதான் என் பாணி" என்கிறார் இஜாஸ் அஹமட்.




## பூமிக்கு வரம்



← காதலர்களின் புனிதத் தலங்களில் ஒன்று பூங்காக்கள். மரம், செடி, கொடி அடர்த்தியான பூங்காக்களே காதலர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன என்பது ஒரு புள்ளிவிபரப் புலியின் தகவல்.

காதலர்களை விட்டுவிட்டு நாம் பூங்காக்கள் பற்றி ஆராய்வோம். பூங்கா இரண்டு வகைப்படும். இயற்கைப்பூங்கா, செயற்கைப் பூங்கா.

உலகில் மிக அழகானதும், அமெரிக்காவிலேயே மிகப் பெரியதுமான தேசியப் பூங்காவின் பெயர் மஞ்சள் பாறைத் தேசியப்பூங்கா. வர்ணம் பூசாமலேயே அங்குள்ள பாறைகள் மஞ்சள் நிறமாக அமைந்திருப்பதுதான் மகா ஆச்சரியம். இந்த இயற்கைப் பூங்கா றொக்கி மலைத் தொடரில் மேட்டு நிலப் பகுதியில் அமைந்துள்ளது.

மற்றொரு விசேஷம் யாதெனில், இப் பூங்காவில் மூவாயிரம் வெந்நீரூற்றுக்கள் இருக்கின்றன. படத்தில் காணப்படும் வெந்நீரூற்றின் பெயர் 'மோனிங் குளோரி வெந்நீரூற்று.' உலகிலேயே மிகப் பெரிய வெந்நீரூற்று இதுதான். இதனை 'நீராவிப் படகு வெந்நீரூற்று' என்றும் அழைப்பர்.

நம்நாட்டில் திருகோணமலையில் உள்ள கன்னியா வெந்நீரூற்றுக்களும் பிரசித்தமானவை.